# செந்தாமரை

AI UNIVERSITY LIBRARY
13 JAN 1972
- 2 .
Book supplie University
Central Co-op. Stores i-2

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர், சென்னை - 30

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 1.

ரூ. 2.

முதல் பதிப்பு: 1948

எட்டாம் பதிப்பு: 1964

உரிமை ஆசிரியர்க்கு

***மற்றக் கதை நூல்கள் :***

பாவை

கள்ளோ காவியமோ

மலர்விழி

அல்லி

பெற்ற மனம்

நெஞ்சில் ஒரு முள்

கயமை

அகல் விளக்கு

அந்த நாள்

கரித்துண்டு

மண் குடிசை

வாடாமலர்

குறட்டை ஒலி

விடுதலையா ?

கி. பி. 2000

தாயக வெளியீடு

காக்ஸ்டன் அச்சகம், சென்னை - 1.

## படிப்பவர்க்கு

"சிலர் காதலை வளர்த்து வாழ்கிறார்கள். சிலர் காத்திருந்து பெறுகிறார்கள். சிலர் ஆராய்ந்து தேடி அடைகிறார்கள்."

"மருதப்பரும் அவருடைய மனைவியும் எப்படியோ காதல் வாழ்வுதான் வாழ்கிறார்கள். படிப்படியாக முன்னேறியிருக்கிறார்கள்."

"இப்போது அவனுடைய காதல் வாழ்க்கையும் அப்படித்தான் வீடு தேடி வந்தது. அண்ணி அவனுக்கு ஏற்றவள். அசையாமல் அதிராமல் ஊமை போல் இருந்து அண்ணனுடைய உள்ளத்தை உரிமையாக்கிக்கொண்டாள்."

"நான் அந்த இளவயதிலும் நினைத்ததற்கெல்லாம் அலைந்தேன். இதிலும் தேடி அலையும் புத்தியைக் காட்டினேன்."

## படித்தவர்க்கு

---

"அந்த முருங்கை மரத்திலிருந்து இரண்டு கிளிகள் ஒன்றன்பின் ஒன்ருக எழுந்து பறந்தன. அவை தென்னை மரத்தில் சென்று ஓலையில் மறைந்திருந்தன. உடனே சிறிது நேரத்தில் வெளிவந்தன."

"காற்று ஆரவாரம் செய்தபோது இந்தக் கிளிகள் எங்கே இருந்தனவோ தெரியவில்லை. இப்போது பழையபடி வந்துவிட்டன; தென்னைமரத்தைச் சுற்றுகின்றன."

"ஆறுகிளிகள் இருக்கின்றன. ஆறு கிளிகள்—மூன்று குடும்பம்—மூன்று இணை. எது எதன் துணையோ தெரியவில்லை. பொறுத்துப் பார்ப்போம். எப்படியும் தெரிந்துவிடும்."

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI - 2.

# திலகம்

பெற்ற தாயைவிடப் பெரிய துணை இல்லை என்கிறார்கள். எனக்கோ பெற்ற தாயே பெரிய பகையாய் இருக்கிறாள்.

ஆனால், அவள் என்ன செய்வாள்? குடும்ப நிலைமை அப்படி மாறிவிட்டது.

தலையை மெல்ல வாரி, நெற்றியில் சிறு பொட்டு இட்டு, அழகான ஆடைகள் உடுத்து, கண்ணாரப் பார்த்து, பலகையும் புத்தகமும் கொடுத்து, தெரு வரைக்கும் வந்து, "பாதை ஓரமே போ; பார்த்துப் போ; ஓடாதே; போய்விட்டு வா" என்று பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினவள் இவள்தான். பள்ளிக்கூடத்திலிருந்து வர நேரமாய்விட்டால் வாசற்படியில் நின்று பார்த்துக்கொண்டே வருவார்போவாரையெல்லாம், "இன்னும் பள்ளிக்கூடம் விடவில்லையா?" என்று கேட்டு எதிர்பார்த்துக் காத்திருந்தவள் இவள்தான். வந்த உடனே இரண்டு கன்னமும் தடவி, இருகையும் பிடித்துக் கண்ணில் ஒத்தி அணைத்துக் கொண்டே வீட்டினுள் அழைத்துச் சென்று எனக்கு விருப்பமான தின்பண்டமும் பழமும் காட்டியவள்

இவள்தான். கிறத்தால் ஓர் உடையும் வகையால் ஒரு நகையும் வாங்கி என்னை அழகுபடுத்திப் பாராட்டியவள் இவள்தான்.

இன்று என் வாழ்க்கைக்கு நஞ்சாய் என்னை அழிப்பவளும் இவள்தான்.

"திலகம் வளர்ந்தது போல் அவ்வளவு செல்வாக்காக யாரும் வளர்ந்ததில்லை. இது நம் குடும்பத்தில் இல்லாத கதை; ஒரு வேளை நாடாளும் தலைவரின் வீட்டில் நடக்கலாம்" என்று அந்த மாமாவும் வாயாரப் பேசினார். இருக்கலாம்.

வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காமல் வாடும் ஏழை வீட்டிலுங்கூட எந்தப் பெண்ணும் இப்படிப் பட்ட கொடுமைக்கு ஆளாகியிருக்க மாட்டாள். பிச்சை எடுத்தே வயிறு வளர்க்கும் நாடோடிக்கு ஒரு மகள் இருந்தால் அவளும் என்னைவிட மேலாக இருப்பாள். இன்று அந்த நிலைக்கு வந்திருக்கிறேன்.

போன கிருத்திகையின்போது பிச்சைக்காரி ஒருத்தி, கட்டுக் கட்டாகத் திருநீறும் அதன்மேல் அகலமாகக் குங்குமமும் அணிந்துகொண்டு இந்தத் தெரு வழியாகப் பாடிக்கொண்டு வந்தாளே, அவளுடன் ஒரு பெண்ணும் அதே போல் திருநீறும் குங்குமமும் அணிந்துகொண்டு வந்தாள். அவள் மகளாம். அவர்களுடைய வாழ்க்கை பிச்சை எடுப்பதுதானும். தகப்பனைப் பற்றி அந்தப் பெண்ணுக்குக் கவலையே இருக்காதோ? என்ன இருந்தாலும் சரி, அவள் என்னைவிட மேலான வாழ்க்கையே வாழ்கிறாள்.

என் தந்தையார் உயிருடன் இருந்திருந்தால் எனக்கு இந்த நிலைமை வராது. ஆனால், தெரியாமல் சொல்லுகிறார்கள். தாய் இல்லாத பெண் சீர்பட முடியாதென்று. எதிர்வீட்டுக் கனகம் அப்படித்தான்

சொல்லி அழுகிறுள். அவள் கதை வேறு. தாய் போனபின் மாற்றுந்தாய் வந்திருக்கிறுள். அப்பனே, அவள்கையில் குடுமியைக் கொடுத்துவிட்டான். அவளை ஆட்டிவைக்கிறுள். அவனே ஆடும்போது கனகம் தப்ப முடியுமா? ஆனுல் அவளும் என்னைவிட மேலான நிலைமையில்தான் இருக்கிறுள். ஏன்? அவளுக்குத் துணையாக அம்மான் இருக்கிறுர்; அத்தை இருக்கிறுள்; பெரியம்மா இருக்கிறுள்.

எனக்கோ அம்மான் இருந்தும் வேடிக்கை பார்க்கிறுர். கொடுத்த பணத்தைக் கேட்டதால் அவருக்கு அம்மா பகையாய்விட்டாள். அவர் தம்முடன் பிறந்த தங்கையின் பணத்தைக் கண்டபடி செலவழித்துவிட்டார். கேட்டால் பொல்லாப்பு; தங்கை வாயாடி என்றும், நன்றிகெட்டவள் என்றும் பழிக்கிறுர். தங்கையின் மகளைக் காப்பாற்ற அவருக்கு என்ன அக்கறை?

அவருடைய தம்பியோ, அவருடைய தம்பிதான். அண்ணனுக்கு எண்ணுயிர ரூபாய் கொடுத்தாள். தனக்குத் தம்படியும் கொடுக்கவில்லையே என்று அவருக்கு என் தாய்மேல் வருத்தம். கொடுத்துப் பகையானுர் அவர்; கொடுக்காதபடியால் பகைவளர்க்கிறுர் இவர். இந்தப் பணத்தால் வந்த வம்பு கொஞ்சம் அல்ல. நான் ஏழையாய்ப் பிறந்திருந்தால் இந்த மாமன்மார் இருவரும் என் குடும்பத்தை இப்படிக் காற்றில் விட்டிருப்பார்களா? பெரியவரிடம் ஏதாவது சொன்னுல், "நான்தான் மோசக்காரன் என்று பெயர் வாங்கிவிட்டேனே. மோசக்காரனிடம் மறுபடியும் ஏன் வருகிறீர்கள்?" என்கிறுர். சின்னவரிடம் ஏதாவது சொன்னுல், "கையில் காசு இருந்தபோது அண்ணன் மேல் நம்பிக்கை; கதி கெட்டபோது தம்பியை நினைக்கிறீர்களா? எல்லாம் அவரே காப்பாற்றுவார்,

போங்கள், போங்கள் " என்கிறார்.

பட்டணத்துப் பெரியம்மாவோ, " பணம்தான் கொடுக்க மனமில்லாமல் போயிற்று. பெண்ணையாவது கொடுத்துத் தாய்வீட்டைக் காப்பாற்றக் கூடாதா ?" என்று என் தாயைப் பற்றி வயிற்றெரிச்சல் கொண்டிருக்கிறாள். அந்தப் பெரியம்மாவுக்கு ஒரு பெண் இல்லையாம். இருந்தால் சின்ன மாமனுக்கே கொடுத்து விளக்கேற்றி யிருப்பாளாம். அய்யோ, பாவம் ! அவ்வளவு பெரிய பட்டணத்தில் எத்தனை பெண்கள் இல்லை ! விளக்கு எப்படியாவது ஏற்றிவைக்கக் கூடாதா ? நான் ஒருத்திதான் அவளுடைய கண்ணெதிரே படுகிறேன். மாமன்மாருக்கு என் தாய்மேல் பகை. பெரியம்மாவுக்கு என்மேல் பகை. என் தாய்க்கும்......

பகை என்று சொல்வதா ? ஆமாம்—பகையல்லாமல் வேறு என்ன ? கொடுமை! பெற்ற மனம் இப்படியும் துணியுமா ? என்னைக் கிணற்றில் தள்ளிவிடத் துணிந்தாளே ! ஆ !

இல்லை, இல்லை, அந்தத் துணிவு அவளுக்கு இல்லை. ஏதோ கோபம். பெருஞ்சினத்தால் ஆத்திரம் கொண்டாள். வெறி பிடித்தவள் என்று பக்கத்து வீட்டுப் பார்வதி திட்டியது பொருத்தம்தான். பைத்தியக்காரி என்று மாமி சொன்னாளே, அதுவும் பொருத்தமோ ? என்னவோ ? ஒன்று மட்டும் உண்மை. அவளுடைய அறிவு முன் போல் இல்லை. அதனால், நான் செல்வமாக வளர்ந்த மகள் என்பதையும் மறந்துவிட்டாள்.

என்ன துன்பம் வந்தாலும் என்ன ? இப்படியா அறிவு கெட்டுப் போகும் ? குடும்பம் என்றால் துன்பம் வந்துகொண்டும் போய்க்கொண்டும்தான் இருக்கும். உலகமே இப்படித்தான். அதற்காக வருந்தலாம்,

பெருமூச்சு விடலாம், கண்ணீர் விடலாம், கலங்கலாம், புலம்பலாம். ஆனால் அறிவைப் பறிகொடுப்பதா? மக்களை வருத்துவதா? குடும்பத்தைக் குலைப்பதா?

கணவன் இறந்துபோகலாம், கைப்பொருள் இழந்து போகலாம், உறவினர் உதறிவிடலாம்; ஆனால் உள்ளன்பும் போய்விடுமா? எல்லாவற்றையும் பறிகொடுக்கலாம்; ஆனால் தன் வயிற்றில் பிறந்த மக்களை நினைத்தால் அந்தத் தாய்மனம் திரும்பாதா?

இல்லை, இல்லை; நான் சாக வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு இல்லை. நானும் செத்துப் போனால், அவள் மட்டும் ஏன் உயிர் வாழ வேண்டும்? அந்த ஒரு தங்கைக்காகவா? அவளைப் பற்றித்தான் அம்மா நினைப்பதே இல்லையே!

ஏழு வயதுள்ள குழந்தை அவள். தங்கை பூங்கொடியை நினைத்தால் அழுகை வராத நாள் இல்லை. ஆனால், அவளைப் பெற்ற வயிறு அவளைப் பற்றி நினைக்கவே யில்லையே! காரணம் என்னவோ? குழந்தையாயிருந்தபோதே பெரியம்மா எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துவந்தாள். வளர்த்த அன்பு இவளுக்கு இல்லையல்லவா? அந்த ஏழு வயதில் நான் இருந்த சீர் என்ன? ஏழு வயதில் என் தங்கை இருக்கும் சிறுமை என்ன? அன்று நான் செல்வக் குழந்தை; இன்று என் தங்கை திக்கற்ற பெண்.

ஆனால், இன்று நான் குழந்தையாகவும் இல்லை; பெண்ணாகவும் இல்லை; என் தாய்க்கு நெருப்பாக இருக்கிறேன்.

ஆமாம்; போன தை மாதத்திலும் சொன்னாள்: "மடியில் கட்டிய நெருப்பு. இவள் ஒருத்திதான் இப்போது எனக்குக் கவலை. கடவுள் எப்படி விடுவாரோ?" என்று என்னைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

என் திருமணத்தைப் பற்றிக் கேட்டவர்க்கெல்லாம், "என்ன செய்யலாம்? வேளை வரவில்லை; அவர் இருந்தால் எல்லாம் சீராக முடிந்திருக்கும்" என்று கண்ணீர் விட்டாள். இப்போது இந்தப் பேச்சே காணோம்.

அறிவுதான் கெட்டிருக்க வேண்டும். நான் என்ன செய்வேன்? இதை வெளியிலும் சொல்லக் கூடாது. என்னைக் கிணற்றில் தள்ள முயன்றாள் என்பதைச் சொன்னால் எல்லாரும் தாயைப் பழிப்பார்கள்.

ஒருவேளை அந்தச் சாமியார் பார்த்திருப்பாரோ? அவர் அங்கே பூசை செய்துகொண்டிருந்தார் அல்லவா?

அவர் பார்த்திருப்பார். அவருடைய பூசையா? பூனை எலிவளை எதிரே செய்யும் பூசைதான். ஆனால் ஒரு நன்மை. அவர் நோக்கம் என் தாய்மேல் இராமல் என்மேல் இருப்பதுதான். இது ஏன் என் தாய்க்குத் தெரியாமல் இருக்கிறது? எதைச் சொல்லவும் பயமாக இருக்கிறதே! வாயைத் திறப்பதற்கு முன் கை நீளுகிறதே! நான் ஆயிரம் அடி உதை படத் தகும். அன்பான கை அடிக்கத் தகும். ஆனால் நான் சொல்வதைக் கேட்கும் அறிவு தாய்க்கு இல்லையே! என்ன செய்வேன்?

இந்தச் சாமியார் வீட்டை விட்டுப் போக வேண்டும். அதற்கு நான் என்ன செய்வேன்? இவனோ குடும்பச் சாமியார்; அந்த மாமன் மாமி ஆகியவர்களுக்குக் குலதெய்வம். எப்படியோ என் தாயின் மனத்தையும் மாற்றிவிட்டான்! மந்திரம் என்கிறான்; தந்திரம் என்கிறான்; நாள் என்கிறான்; நட்சததிரம் என்கிறான்; பூசை செய்கிறான்; பித்துப் பிடித்தவனாய் என்னைப் பார்க்கிறான்; உடனே பார்வையை மாற்றுகிறான்.

இப்படி ஒருமுறை என் தாயைப் பார்த்திருந்தால்

அவன்கதி என்ன ஆகியிருக்கும்? அவனுடைய உயிரைப் போக்கிவிட் டிருப்பாள்; அல்லது மானத்தைப் பறக்கடித்திருப்பாள். இவளுடைய வாழ்வு இவளுடைய வீரம் எல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கும். அதனால்தான் அவன் அங்கே வாலாட்டவில்லை. கன்றின் காலைக் கடிக்க நாய்க்கு வாய் ஊறலாம். பசுவின் முன்னே அந்த நாய் என்ன செய்ய முடியும்? அதன் கொம்புகளைக் கண்டால் குடல் நடுங்காதா?

ஆனால் நான் மட்டும் எளியவளா? என்னிடம் வாலாட்டுகிறானே! அந்த வாலைக் கத்தரிக்க எனக்கு வழி இல்லையா?

இல்லை, உண்மைதான். அம்மா உரிமையுடன் வாழ்கிறாள். அவள் யாருக்கும் அடங்காத கண்ணகியாக மாறிவிட்டாள். அந்தக் கோவலன் மாண்ட பிறகு. நானோ, தாய்க்கு அடங்கின மகளாக வாழ்கிறேன். என் அடக்கம் ஒரு பாவமா? தாய்க்கு அடங்கியிருக்க வேண்டுமா?

இருக்கட்டும் என்று இருந்தேன். இனி ஒரு வழி தான். ஒன்று, அந்தச் சாமியார் வீட்டை விட்டுப் போக வேண்டும். அல்லது, நான் வீட்டை விட்டுப் போய் உண்மையை விளங்கச் செய்ய வேண்டும்.

சென்ற செவ்வாய்க்கிழமை அவன் பூசை செய்த போது என்னை அங்கே உட்காரச் சொன்னானே, அப்பொழுதே மறுத்திருக்க வேண்டும். ஆனால், மறுத்து என்ன பயன்? உடனே அம்மா என்னைக் கடுகடுத்திருப்பாள். சில நிமிசங்களுக் கெல்லாம் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே என் கையைப் பற்றி இழுத்தானே! என்ன வஞ்சம்! அதையும் அம்மாவுக்குச் சொல்ல முடியவில்லை. சொல்லியிருந்தால் ஒரு வேளை

நன்மையாய் இருந்திருக்கும். அடுத்த பூசைக்கு நான் போகவில்லை. அது அம்மாவுக்குக் கோபம். இப்போதும் அதே பிடிவாதம் செய்தேன். அதனால் கிணற்றில் விழ இருந்தேன்.

பாவிப்பயல், இவனே அம்மாவின் அறிவு கெடும் படியாகச் செய்திருக்க வேண்டும். ஆனால், அறிவு அவ்வளவு எளிதாகப் போலி மந்திரங்களால் மாறி விடுமா? ஏமாற்றப் பூசைகளால் கெட்டுவிடுமா?

அதெல்லாம் உண்மை அல்ல; என் தாய்க்கு இயற்கையாகவே அறிவு குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். பழக்க வழக்கங்களுக்குக் கட்டுப் பட்டுக் குடும்பத்தை நடத்திவந்தாள். இன்பம் உள்ள வரையில் எல்லாம் நன்றாக நடந்தன. துன்பம் வந்து கலந்தபோது உள்ள அறிவும் குழம்பி மயங்கியிருக் கிறாள். ஆனாலும் அவளுடைய அன்புக்கு எல்லை இல்லை.

அந்த அன்பு அறிவற்ற அன்பு; அதனால் என்ன பயன்? பித்தனுடைய கையில் அகப்பட்ட கத்தி போல் நன்மையும் செய்யும், தீமையும் செய்யும். தாயைப் பழிக்கக் கூடாது. போகட்டும். இப்போது அவளைக் காக்கவும் வகை இல்லையே! அன்புருவாக இருந்த அவ்வளவு உணர்வும் இப்போது வெறுப்பாக மாறி விட்டதே! சினமாக என்மேல் பாய்கின்றதே.

நான் கண் எதிரே இல்லாமல் மறைவேனால் அந்த வெறுப்பு யார்மேல் பாயும்? பார்க்கலாம். ஒன்று, அந்தச் சாமியார் மேல்; அல்லது அந்த மாமன்மேல்; அல்லது தன்மேலேயே. பித்தன் கத் தியால் தன் கழுத்தையும் அறுத்துக்கொள்வான் அல்லவா?

சமையல் அறையில் குழம்பு தாளித்துக்கொண்

டிருந்த என்னை அம்மா கூப்பிட்ட காரணம் என்னவாக இருக்கும்? "ஏன் அம்மா" என்று எதிரில் சென்ற பொழுது, "போடி கழுதை போ" என்று வெறுப் பாய்ப் பார்த்தாளே! நான் என்ன செய்தேன்? அங்கே நின்றதும் ஒரு குற்றமாக முடிந்தது. "இன்னுமா என் கண் எதிரில் நிற்கிறாய்? அழிகாலி! உன்னைப் பிடித்த சனியன் தான் குடும்பத்தையே ஆட்டி வைக் கிறதே!" என்றாள். என்ன காரணமோ, அம்மாவின் மனத்தில் ஏதாவது பழைய துயரம் தோன்றியிருக்கும் என்று கண்ணீர் சொரிந்துகொண்டே வந்துவிட் டேன்.

அந்தச் சாமியார் ஏதாவது சொல்லியிருப்பானோ என்று ஐயப்படுகிறேன். அவனுக்கு வயதைப் பற்றிய ஒரு மதிப்பு இருக்கிறது. நான் குற்றம் சொன்னாலும் ஊரார் நம்ப மாட்டார்கள். கழுதைக்கும் குறிப்பிட்ட வயது நிரம்பிவிட்டால் இந்த ஊரார் கும்பிட்டு வணங்குவார்கள் போல் தெரிகிறது. அம்மம்மா! அவன் பேசும்போது தெய்வமே எதிரே வந்து காட்சி கொடுத்து உபதேசம் செய்வதாக அல்லவா நடிக் கிறான்? அந்த நடிப்பை அவன் நடித்து ஏமாற்றுவது பெரிதல்ல. ஆனால் அதை உண்மை என்று நம்பி ஏமாந்து காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுகிறார் களே, அவர்களை என்ன என்று சொல்வது? அய்யோ உலகமே! காவி உடுத்தவர்கள் எல்லாரும் விவேகா நந்தர்கள் என்று உலகம் எண்ணுகிறதே! கறுப் பாய்த் தோன்றிக் கத்தும் பறவை எல்லாம் குயில் ஆகிவிடுமா?

இதே சாமியாரை அம்மா வெறுத்துப் பேசிய காலமும் உண்டு. இந்த ஆள்மட்டுமா? வேறு எவரையுமே வாசற்படிக்கு உள்ளே வரவிட்ட

தில்லையே. துன்பம் மிகுந்து கலங்கிய பிறகுதான், பிச்சை எடுக்கிற போலிகளுக் கெல்லாம் இந்த வீட்டில் வரவேற்புக் கிடைக்கிறது. ஒரு கவளச் சோறு கேட்டால் கால்படி அரிசி கிடைக்கிறது. இதை யெல்லாம் பார்க்கும்போது, கையில் இருந்த பணத் தைப் பறித்துக்கொண்ட மாமன், நிலத்தில் விளையும் நெல்லுக்கும் உலை வைக்காமல் விட்டுவிட்டாரே என்ற எண்ணமும் எழுகிறது.

இந்தச் சாமியார் பூசை எதற்காக? எனக்கும் தங்கைக்கும் நல்வழி தேடுவதற்காகவா? தங்கையைப் பற்றித்தான் நினைப்பதே இல்லையே. என்னைப் பற்றியா? "என்றைக்கு வீட்டை விட்டுத் தொலையப் போகிருய்?" என்ற வாழ்த்துத்தானே ஒரு நாளைக்கு முந்நூறுமுறை எனக்குக் கிடைக்கிறது! போன பணம் கிடைக்குமா என்ற ஏக்கம் காரணமா? அய்யோ, பணமே! அதற்கு இந்த ஏழைச் சாமியார் என்ன செய்வார்? இவரே பொன்னும் பெண்ணும் கிடைக்குமா என்று கள்ளத் தவம் செய்கிருரே! இவரை வழிபடு வதை விட்டுவிட்டுத் தன அண்ணனையும் அண்ணி யையும் வழிபட்டால் ஏதாவது நன்மை ஏற்படுமே! வியாபாரத்தில் எண்ணுயிரமும் இழந்துபோய்ச் சீர் கெட்டிருந்தாலும், தம்முடைய வருவாயில் ஒரு பங்கு தங்கைக்குக் கொடுக்க முன்வருவாரே! இவ்வளவு பகை இருந்திருக்காதே! என்னையும் பயிற்சிப் பள்ளிக் கூடத்தில் சேர்த்து உதவி செய்திருப்பாரே!

அந்தப் பள்ளிக்கூடத்தி லிருந்து இன்னும் பதில் வரவில்லையே! என்ன காரணம்? மங்கையர்க்கரசி அப்படிப் பதில் எழுதாமலிருக்க மாட்டாளே! எழுதி யிருப்பாள். என்னுடன் உயிருக்குயிராய்ப் பழகிய அவள், கட்டாயம் எழுதியிருப்பாள். கடிதம் தவறி

யிருக்குமா? ஒருவேளை அந்தச் சாமியாரின் கையில் அகப்பட் டிருக்குமா?

இருக்கலாம். அன்று மாலையில் சாமியார் என்னை அழைத்து ஏதோ உபதேசம் செய்யத் தொடங்கினரே! இதுதான் காரணமாக இருக்கலாம். கடிதம் அவர் கையில் கிடைத்திருக்கும். பிரித்துப் பார்த்திருப்பார். மங்கையர்க்கரசி என்னை வருமாறு அழைத்திருப்பாள். செய்தி எல்லாம் சாமியார் தெரிந்துகொண் டிருப்பார். அதனால்தான், "பெரியவர்களைப் பார்த்து நடந்து கொள்" என்றும், "இந்தக் காலத்துப் பெண்களோடு பழக்கம் வைத்துக்கொள்ளாதே, அவர்களை நம்பாதே" என்றும் அறிவுரை சொல்லத் தொடங்கினர். ஆமாம், அதுதான் காரணம். இப்போது தெரிகிறது. இன்னும் சிறிது நேரம் அவர் சொல்வதைக் கேட்டிருந்தால், உண்மை வெளிப்பட் டிருக்கும். தெரியாமற் போயிற்றே! நான் பழைய வெறுப்போடு வந்துவிட்டேன். தந்திரமாகவும் அந்த வஞ்சகனோடு பழக மனமில்லை. வந்துவிட்டது ஒரு வகையில் நல்லது. மற்றொரு வகையில், அவன் திருட்டைக் காணமுடியாமல் போயிற்றே என்று இப்போது வருந்துகிறேன்.

அவன் பேச்சைக் கேட்காமல் நான் வந்துவிட்ட படியால், அதை அம்மாவிடம் கொடுத்திருப்பான். குறையாயிருந்த உபதேசத்தை அம்மாவிடம் நிறையாகச் செய்திருப்பான். இவ்வளவு காரணமும் இருக்க, நான் அம்மாவை நோவதால் பயன் என்ன?

எறும்பூரக் கல்லும் தேயும் என்று அவன் எண்ணியிருக்கலாம். ஐம்பது வயது என்ற மதிப்பும், சாமியார் என்ற போர்வையும் ஊரை ஏமாற்றலாம். கள்ளம் கரவு அற்ற என் தாயின்மனத்தை ஏமாற்றலாம். இரும்பை எடை போட்டு விற்பதும், கணக்கெழுது

வதும், பணம் எண்ணுவதும், பிள்ளையார் கோயிலில் தோப்புக்கரணம் போடுவதும் தவிர வேறு உலகம் தெரியாத என் மாமனை ஏய்க்கலாம். வெள்ளிக்கிழமைப் பூசையும், ஆடம்பர விரதங்களும், பட்டுப்புடைவையும், பொன் நகையும் தவிர வேறு வாழ்வு அறியாத என் மாமியை மயக்கலாம். இவர்களுக் கெல்லாம் இவன் தெய்வமாக விளங்கலாம். ஆனல், ஒருவாறு உலகமும் வரலாறும் வாழ்க்கையும் தெரிந்த எனக்கு இவனு தெய்வம்? இவன் எனக்கு ஒரு பேய்! அந்தப் பேயைத் துரத்த முயன்றேன். தோற்றேன். இனி அதுதான் என்னைத் துரத்திவிடும்; நான்தான் ஓடுவேன்.

இனிமேல் கடிதத்தை எதிர்பார்த்துப் பயனில்லை. அறிவு மயங்கித் துயரமே உருவாக இருக்கின்ற அன்னையை நான் இங்கிருந்து காப்பாற்ற முடியாது. வெளியே செல்வேன். பிறர் காப்பாற்றுகிறார்களா என்று பார்ப்பேன். சிறிது காலம் பொறுத்து நானே காப்பாற்றுவேன். இங்கு இருந்தால் முடியாது. நான் ஆற்றில் விழுந்து மூச்சுக்குத் திக்குமுக்காடிக்கொண் டிருக்கும்போது, இன்னொருவரை — நீந்தத் தெரியாத வரை — மூழ்காமல் காப்பது எப்படி? நான் முன்னே நீந்திக் கரையோரம் சென்று, ஒரு மூச்சு விட்டுப் பிறகு தான் விழுந்தவரை எடுக்க முடியும்.

ஆம்; நீந்தத் தெரியாதவள்தான். நல்ல படகு அவளைக் கவலையில்லாமல் செலுத்திக்கொண் டிருந்தது. அவளும் அன்பு நிறைந்த வாழ்க்கை நடத்தினாள். பெரும் புயல் ஒன்று அந்தப் படகைக் கவிழ்த்தது. அவளுடைய அன்புவாழ்க்கையும் கவிழ்ந்தது. காப்பாற்றுவார் இல்லாமல் தவிக்கிறாள். இந்தத் துரும்பை - சாமியாரை - நம்புகிறாள். துரும்பு கரையேற்றுமா?

எனக்கு நீந்தத் தெரியும்; ஒருவாறு தெரியும். பிறருடைய முகத்தைப் பார்த்து வெளித்தோற்றத்தால் ஏமாந்து போகமாட்டேன். அந்த முகத்தில் உள்ள குறிப்பையும் பார்ப்பேன். உள்ளக்கருத்தும் அறிவேன். இது ஒன்றே போதுமே! என் வாழ்க்கைக்கு உண்மையாகத் துணை செய்ய விரும்பும் நல்லெண்ணம் சிலருடைய முகத்தில் தெரிகிறது. என் சின்ன மாமனுடைய முகத்தில் தன்னலம் அல்லவா ஒளி வீசுகிறது? இந்தச் சாமியாரின் முகத்தில் அதுவும் இல்லையே! இவனுடைய கண் வஞ்சக ஒளி வீசுகிறதே!

என் தாயின் முகத்தில் அன்பு ஒளி திகழ்ந்தது. ஆனால் கவலையிருள் அதைப் போக்கிவிட்டது. இனி எங்கே காண்பேன், அந்த ஒளியை!

இது பரந்த உலகம். நல்லவரும் வாழும் உலகம். நாற்புறமும் உயர்ந்த சுவர்கள் எழுப்பிய இந்த வீட்டில் சில சன்னல்களும் உண்டு. இந்தப் பெரிய சிறைக் கூடத்தில் கிடக்கிறேன். இந்தச் சன்னல்வழியாக வேனும் பரந்த உலகைப் பார்த்து அன்பு ஒளி வீசும் முகத்தை — தன்னலமும் வஞ்சமும் இல்லாத முகத்தைக் கண்டுபிடிக்க முயல்வேன். ஆனால், அதற்கும தடையுத்தரவு வலுத்துவிட்டது. "திலகம்! சன்னல் வைத்தது எதற்காக, தெரியுமா? காற்று உள்ளே வருவதற்கு; இளம் பெண்களின் கண் வெளியே போவதற்கல்ல" என்றான் அந்தப் பற்றற்ற துறவி. அந்தச் 'சொற்களைக் கேட்ட போது என் தாயின் மனம் குளிர்ந்திருக்கும்.

## இளங்கோ

---

**என்** அன்னை நல்லவள்தான்; ஆனால் மிக நல்லவள்; அதனால் தன்னை அறியாமல் பிறர்க்குத் தீமை செய்கிறாள்.

தன் தங்கையின் மகளை வலிய அழைத்துவந்து தானே வளர்க்கிறாள். வந்து சிலநாள் இருந்துமகிழ்ந்து போவது உறவினர் வழக்கம். ஒரு வீட்டுக்குழந்தையை மற்றொரு வீட்டார் வளர்ப்பதில் பயன் என்ன? தீமை அல்லவா விளையும்? இயற்கையான வளர்ச்சி இல்லாமல் போய்விடுமே. பத்து வயது வரைக்குமாவது பெற்றோரிடம் வளர வேண்டாவா? முளைக்கும்போதே எடுத்து வயலில் நடுவதால் முற்றிலும் கெடாதா? நாற்று, வளர வேண்டிய அளவு வளர வேண்டுமே!

இப்போது முறைப்படி பார்த்தால், சின்னவள் பூங்கொடி ஆர்க்காட்டில் இருக்க வேண்டும். அவள் இங்கே பெரியம்மாவோடு பழகும் வயது இது அல்ல. இதற்குப் பதில் ஆர்க்காட்டில் அம்மாவின் மடியில் தவழ்ந்து விளையாட வேண்டும். ஏழு வயது ஆனாலும் இன்னும் தாயின் மடியில் குழந்தைதானே! அது போலவே, பெரியவள் திலகம் இங்கே இருக்க

வேண்டும். அவள் ஆட வேண்டிய வயது கடந்துவிட்டது. அம்மாவிடம் கொஞ்சும் பருவம் கடந்துவிட்டது. பரந்த உலகத்தில் தனக்குத் தகுந்த துணையைப் பார்த்துக்கொண்டு பிறந்த வீட்டை விட்டுத் தனி வீட்டை அமைத்துக்கொள்ள வேண்டும். அவளோ பத்தாவது படித்தவள்; இளங்குழந்தை அல்ல. அவளுக்கு இப்போது ஒரு தாயின்மடி தேவையில்லை. ஆனால் ஒரு தோழியின் கை வேண்டும். அல்லது, குறைந்தது ஒரு பெரியம்மாவின் பேச்சுத் துணை வேண்டும். பட்டணம் போன்ற பரந்த உலகம் வேண்டும். ஆர்க்காட்டில் என்ன இருக்கிறது? காலையில் எழுந்தவுடன் வீசம் வீசங்காணி என்று கணக்குப் போட்டுக்கொண்டு குல்லாயோ தலைப்பாகையோ அணிந்துகொண்டு மண்டியில் போய் உட்காரும் வாழ்வுதானே அங்கு மிகுதியாக இருக்கிறது.

ஆனால், அம்மாவிடம் இதெல்லாம் சொன்னால் ஏற்பதில்லை. "திலகம் நல்லவள்தான்; ஆனாலும் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படித்தவள்" என்கிறாள். ஆங்கிலப் பள்ளிக்கூடத்துக்கும் திலகத்தின் வாழ்க்கைக்கும் என்ன தொடர்போ தெரியவில்லை. தொடர்ந்து கேட்டால், "அவள் நம் குலத்துப் பெண்களைப் போல் நடக்கத் தெரியாதவள். வெள்ளைக்காரி போல் ஆகிவிட்டாள். வயதான பிறகும் தெருவில் வந்து நிற்கிறாள். தலை நிமிர்ந்து பேசுகிறாள். கேட்டதற்கெல்லாம் உடன் உடன் முழு முழுச் சொல்லாகப் பேசுகிறாள்" என்று குறை கூறுகிறாள்.

நம் குலத்துப் பெண்களைப் போல் நடக்க வேண்டுமாம். வயதான பிறகு வீட்டை விட்டு வெளியே வரக்கூடாதாம். கதவை இரண்டு கையாலும் பிடித்துக்கொண்டு முன்தானையும் தெரியாதபடி ஒதுங்கி

ஒளிந்து, முகத்தின் ஒரு பகுதி மட்டும் தெரியுமாறு வெளியே எட்டிப் பார்க்க வேண்டும். இதுதான் நம் குல ஒழுக்கமாம். தலை நிமிர்ந்து பேசுகிறாளாம். என்ன தவறு? தலைகுனிந்து அரைப் பார்வை பார்த்து அரை குறைச் சொல்லாகச் சொல்லி வினைமுற்று இல்லாமல் வாக்கியங்களை முடிக்க வேண்டும் என்று எந்தத் தொல் காப்பியனாரும் எழுதிவிட்டுப் போகவில்லையே! தமிழ் நாட்டில் அவ்வளவு கெட்டவர்கள் பிறக்கவில்லை. நானும் படித்திருக்கிறேன். ஆனால் இன்னும்சாஸ்திரம் என்ற ஒன்று நம் நாட்டுப் பெண்களின் ஒழுக்கத்தை இப்படிக் கண்மூடித்தனமாக வரையறுத்துக் கூறு வதைப் பார்க்கவில்லை. என் தாயின் வாயில் வருவ தெல்லாம் சாஸ்திரம்! அவள் நினைப்பதெல்லாம் சாஸ்திரம்! சாஸ்திரம் தவிர வேறு ஒன்றுமே இல்லை!

எதை எடுத்தாலும், "ஏன்? அப்படியானால் சாஸ் திரம் பொய்யா?" என்று ஒரே கேள்வி கேட்டு என்னை மடக்குகிறாள். சில வேளைகளில் நான் கேலி செய்வதும் உண்டு. அந்த அன்னையின் வயிற்றில் பிறந்துவிட்டு அவளையே எள்ளி நகையாடுவதா என்று உடனே தோன்றும். இதனால் என் அன்பு குறைந்துவிட வில்லை.

சில வாரங்களாகத் திலகத்தைப்பற்றி அடியோடு மறந்துவிட் டிருந்தேன். நேற்று ஊரிலிருந்து சோமசுந் தரம் வந்து சொன்னது முதல் கவலையாக இருக்கிறது. இந்த வயதில் ஓர் இளம் பெண் இவ்வளவு துன்பமும் பட வேண்டுமா? வாழ்க்கை என்பது என்ன? தண்டனையா? விளையாட்டா? இது தண்டனைதான் என்றால், எல்லாருக்கும் தற்கொலையல்லவா உப தேசம் செய்வேன்?

திலகத்திற்கு விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு

செய்வது நல்லது, ஆனால், நல்ல கணவன் கிடைக்க வேண்டுமே. சிற்றப்பா மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதித்து விருப்பம் போல் செலவழித்து நன்றாக வாழ்ந்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய செல்வக் குழந்தையாக இருந்தாள் திலகம். தாசில்தாரின் மகள் என்று எல்லோரும் பெருமையாகப் பாராட்டினார்கள். தை மாதம் பிறந்தால் ஆவணி மாதம் வரையில் பெண் கேட்பதற்கு என்று எல்லோரும் வந்துகொண் டிருந்தார்கள். நெருங்கிய உறவினர் என்று சிலர் வந்தார்கள். தொலைவான உறவு என்று சிலர் வந்து கேட்டார்கள். "இன்ன ஊரில் கேட்டால் உங்களுக்கும் எங்களுக்கும் பழைய உறவு இருப்பது தெரியும்" என்று பேரேடும் சிற்றேடுமாகக் கொடிவழி எடுத்துக்காட்டிச் சிலர் பெண் கேட்டார்கள்.

சிற்றப்பா திடீரென்று மாரடைப்பால் மறைந்தார். உயர்ந்த கற்பரசியாக இருந்த சின்னம்மா வெறிபிடித்துக் கலங்கினாள். அன்று கெட்ட அறிவு இன்று வரையில் திருந்தவில்லை. முன்னே பெற்றிருந்த ஐயாயிர ரூபாயுடன் அப்போதிருந்த மூவாயிரமும் அந்த மாமன் எடுத்துக்கொண்டு போய்விட்டார். இப்போது எல்லாருக்கும் சொல்கிறாராம்: "செல்வாக்காக வளர்ந்த குழந்தைகள். எண்ணாயிரம்தான் சொத்து வைத்துப் போனார் என் தங்கை கணவர். அதைக் கொண்டு அந்தக் குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவது? என்ன வட்டி வரும்? எங்காவது பாங்கியில் போட்டால் மாதம் முப்பது ரூபாய்தான் வரும். முந்நூறு செலவழித்தும் போதாது என்று இருந்த குடும்பத்திற்கு முப்பது ரூபாய் எந்த மூலைக்கு? என் தங்கைக்கோ ஒன்றும் தெரியாது. எல்லாம் என்மேல் விழுந்துவிட்டது. வேறு வழி இல்லை. என்ன செய்

வது?" என்று மண்டித் தெருவெல்லாம் சொல்லிச் சொல்லி, மாமன் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். மூன்றும் மாதமே வியாபாரத்தில் பெருத்த நஷ்டம் என்று சொல்லிக் கடையைச் சிலநாள் மூடியும்விட்டார். கணவனை இழந்து கலங்கிய சிற்றன்னை, கைப்பொருளும் இழந்த கதை தெரிந்து அறிவு கெட்டாள். மக்களைக் காப்பாற்றும் நம்பிக்கையும் இழந்தாள். அந்தத் திலகத்தைப் பார்த்துப் பார்த்து அழுதாள். இப்போது அழுவது நின்று வெறுப்புத்தான் வருகிறதாம். இயற்கைதானே! அன்பு முறிந்துபோனால், அதன் இடம் வெறுப்புக்குத்தானே!

திலகத்திற்கு நல்ல கணவன் கிடைத்துத் திருமணம் முடிந்துவிட்டால், சிற்றன்னையின் கவலை குறையும்! ஆனால், இன்று அவள் ஏழை என்பதை எல்லாரும் தெரிந்துகொண்டார்கள். நெருங்கிய உறவினர், தொலைவான உறவினர், உறவில்லாத இனத்தார், பழைய ஊரார் எல்லாரும் தெரிந்துகொண்டார்கள். வீட்டில் பெண் கேட்க நுழைவார் இல்லை; அடி வைத்து வருவார் இல்லை.

அந்தக் காலத்தில் திலகத்தின் திருமணத்திற்குச் சிற்றப்பா தடையாக இருந்தார். "என் மகள் குழந்தை. அவள் இப்போது பத்தாவது படிக்கிறாள். பிறகு பி.ஏ. படிக்க விரும்பினால் கல்லூரியில் சேர்ப்பேன். படிப்பை நிறுத்திவிட்டுக் கல்யாணம் செய்ய எண்ணமில்லை. படிக்கிற வரைக்கும் படிக்கட்டும், பிறகு பார்க்கலாம்" என்று எல்லோருக்கும் சொல்லி மறுத்துவிட்டார். இன்று பத்தாவது படித்து முடித்துவிட்டாள்; கல்லூரியில் படிக்க வழி இல்லை. பயிற்சி படிக்க விரும்புகிறாள், பணம் இல்லை; பணம் இருந்தாலும் யாருக்கும் மனம் இல்லை. முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கிய

தாசில்தார் மறைந்தார்; இப்போது அந்த வீட்டில் மூன்று காசுக்கும் வழி இல்லை; முற்போக்கான மனமும் இல்லை.

இனி ஒரே வழிதான்; திருமணம்தான். அதற்கு எல்லோரும் உடன்பாடாக இருக்கிறார்கள். சின்னம்மா முதல் அன்னை வரையில் எல்லாருக்கும் உடன்பாடு தான். அதுமட்டும் அல்ல; மூடநம்பிக்கை அவர்களை இப்போது அலைக்கின்றது. அவளுக்குத் திருமண மான பிறகு எல்லாம் சீர்ப்பட்டுவிடுமாம். அவள் வீட்டை விட்டு வெளியே போய்விட்டால், குடும்பத் தைப் பிடித்த சனியன் விடுதலையாகுமாம். இப்படி ஒரு சோதிடக்காரன் சொன்னானாம். என்ன பைத்தியம் என்பது?

பெற்று வளர்த்துப் பாராட்டிச் செல்வ மகள் என்று போற்றிய அதே பெண்ணை எவனோ ஒருவன் ஒரு பழம் பஞ்சாங்கத்தைப் புரட்டிச் சொன்னதைக் கேட்டு, அன்று முதல் சனியன் என்றும் தரித்திரம் என்றும் பேசுவதா? அவ்வாறு சொன்னவன் சனி யன்; அதைக் கேட்டவர் சனியன்; அந்த நம்பிக்கை சனியன்; இந்தச் சனியன் தொலைந்தால்தான் வீடு சீர்ப்படும், குடும்பம் சீர்ப்படும்! இந்தச் சோதிடத்தை எல்லாப் பைத்தியக்காரிகளும் நம்புகிறார்கள். அருமைத் தங்கை திலகம் பூப்படைந்த நாள் கெட்ட நாளாம். அய்யோ இறைவனே! இப்படியும் மக்களைப் படைத்துவிட்டாயே! இதைப் பெற்ற தாயும் பெரிய தாயும் நம்புகிறார்கள்; விளம்பரப் படுத்துகிறார்கள். இதை இவர்களே சொல்லிக்கொண் டிருந்தால், பெண் கேட்க வருகிறவர்கள் எவரேனும் உள்ளே நுழைவார் களா? ‘அந்தச் சனியன் நமக்கு வேண்டா’ என்று அவர்கள் அஞ்சி ஓடுவார்களே.

நண்பன் குமரப்பன் எட்டாவது பிள்ளையாம். எட்டிப்பார்த்த இடம் குட்டிச்சுவராய்ப் போய்விடுமாம். அவனுக்குப் பெண் கொடுப்பவர்கள் அஞ்சுகிறார்களாம். என்ன நம்பிக்கை! என்ன அறியாமை! எந்தக் குடும்பமும் அப்படித்தான் இருக்கிறது!

தங்கை திலகத்தைப் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுவர எவ்வளவோ முயன்று பார்த்தேன். என் அன்னையே தடுத்துவிட்டாள். கெட்ட கிரகமாம்; வீட்டுக்கு வந்தால் எனக்கே ஆகாதாம்; குடும்பத்துக்குத் தீங்கு வருமாம்; அதனால் திருமணமான பிறகு, கணவனும் மனைவியுமாக அழைத்துக்கொண்டு வருவதுதான் நல்லது என்று சொல்கிறாள். அதை மீறி நடப்பதற்கும் பயமாக இருக்கிறது.

என்ன பயம்! எனக்கோ என் குடும்பத்திற்கோ கெடுதல் வரும் என்று நான் அஞ்சவில்லை. என் அருமைத் தாயின் மனத்திற்குத் தீங்கு வருமே என்றுதான் அஞ்சுகிறேன். உடல்கொலையைவிட மனக்கொலை பொல்லாதது என்றுதான் நடுங்குகிறேன்.

இதைத்தான் ஆர்க்காட்டில் கண்ணாரக் காண்கின்றேனே! சின்னம்மா எவ்வளவு அன்பாகத் திலகத்தை வளர்த்துவந்தாள்! இப்போது எவ்வளவு சிறுமை செய்கிறாள்! மனம் கெட்ட பிறகு மருந்து தேடிப் பயன் என்ன?

நல்ல வழியாகவே இந்தத் தாய்மாரின் மனத்தை மாற்றிவிடலாம் என்றாலோ, அது வெறுங் கனவுதான். இமயமலையைவேரோடு எடுத்து வேறிடத்தில் வைத்துவிடலாம். ஆனால், இவர்களுடைய மனத்தில் உள்ள மூடநம்பிக்கையைச் சிறிதும் குறைக்க முடியவில்லையே. ஒழுங்காகக் குடும்பம் நடக்கும்போது சொல்வதற்கெல்லாம் தலை அசைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

ஆமாம் என்றும், மெய்தான் என்றுங்கூட ஒவ்வொரு வேளை வாய்திறந்து சொல்கிறார்கள். ஆனால் யாருக்காவது உடம்பு கெட்டபோதோ, ஏதாவது பொன்னோ பொருளோ இழந்தபோதோ, தலை அசைத்ததும் வீணாகிறது; 'ஆமாம்' பாட்டும் பொய்யாகிறது; பழைய மூடநம்பிக்கை தலைகாட்டுகிறது. மந்திரக்காரன் வேண்டும், தந்திரக்காரன் வேண்டும், சோதிடம் பார்க்க வேண்டும், சாமியாடீரை அழைக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறார்கள். அன்பு மிகுந்தவர்கள்; அதனால் நல்லவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் வல்லவர்களாக இல்லை.

போன மாதத்தில் பூங்கொடிக்குக் காய்ச்சல் வந்து மூன்று நாள் விடாதிருந்தபோது அன்னை பட்டபாடு! முதலில் கை வைத்தியம்; இரண்டாம் நாள் காலையில் சித்த வைத்தியம்; அன்றுமாலையில் ஆங்கில வைத்தியம்; மூன்றாம்நாள் காலையில் மறுபடியும் ஆங்கில வைத்தியமே; ஆனால் புதிய வைத்தியர். அன்று மாலையில் எனக்கும் சொல்லாமல் எங்கிருந்தோ ஒரு மந்திரக்காரனை வருவித்துவிட்டாள். அவன் என்னவோ சொல்லிப் பச்சை வைக்க வேண்டும் என்று ஏமாற்றிவிட்டுப் போனான். மறுநாள் காலையில் காய்ச்சல் இல்லாததைக் கண்டு பூரித்தாள்; என்னிடம் ஓடிவந்து, "அப்பா, இளங்கோ! அந்த மந்திரக்காரன் கெட்டிக்காரன். கொண்டித்தோப்பில் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்து வீடாம். நீ எப்படியாவது போய்க் கையோடு அழைத்துக்கொண்டு வா. ஒரு பூசை போட்டுவிட்டால் மறுபடியும் குழந்தைக்கு ஒன்றும் வராது" என்று கெஞ்சினாள்.

மூட நம்பிக்கையை வளர்த்து மக்களை ஏமாற்றுவதில் ஆங்கில வைத்தியன் தோற்றுவிடுகிறான்;

எவ்வளவோ புதுப்புதுப் பெயர்களை வைத்து, நோய்களின் முகவரி எல்லாம் சொல்லி, அவற்றின் தாய்மார்களான பூச்சிகளுக்கெல்லாம் பெயர், வடிவம், தொழில், குணம் எல்லாம் கற்பித்து மருட்டிப் பார்த்தும், ஆங்கில வைத்தியன் ஏமாந்து ஏமாந்து போகிறான்; பூசாரி வைத்தியனே மூடநம்பிக்கை ஊட்டுவதில் கெட்டிக்காரன். இவ்வாறு எண்ணித் தலையசைத்துக்கொண்டே நாற்காலியில் இருந்தேன். நான் இடத்தை விட்டு எழாததைக் கண்ட அன்னை, மறுபடியும் வந்து, "அப்பா! அந்த மந்திரக்காரன் மிகக் கெட்டிக்காரன். பக்கத்துத் தெருவில் ஊமையாக இருந்த ஒரு பையன், "அப்பா, அத்தை" என்று பேசுகிறானாம். இருபத்தைந்து வருசமாகக் குழந்தையில்லாமல் இருந்த கீழ்ப்பாக்கத்தம்மா இப்போது தலைமுழுகாமல் இருக்கிறாள். திருபபள்ளித் தெருவில் ஒருவன் 'டைபாய்ட்' காய்ச்சல் வந்து மூன்று வாரம் எமனோடு வாதாடினானாம். நம்பிக்கை இல்லாமல் போய், கஞ்சித்தொட்டி ஆசுபத்திரியிலிருந்து எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்களாம். இந்த அய்யா கைப்பட்டதும் எழுந்து உட்கார்ந்துகொண்டானாம்" என்று எத்தனையோ உதாரணங்களை எடுத்துரைத்தாள்.

பல ஆண்டுகளாய்ப் பழகி அன்னையின் மனத்தை அறிந்திருந்த நான், மெல்ல எழுந்தேன். சித்த வைத்தியர் சொன்னது நினைவுக்கு வந்தது. "மூன்று நாள் காய்ச்சல், ஒன்றும் கவலைப்பட வேண்டா, தானே போய்விடும்" என்று சொன்னார். அதன்படியே நான்காம் நாள் நின்றுவிட்டது. அவர் கொடுத்த மருந்தின் பயன் என்றோ, ஆங்கில மருந்தின் குணம் என்றோ சொன்னால் நம்பிக்கை வராது என்பது தெரியும். கண்

ணுல் கண்டதை நம்புகிறவள் அன்னே. கண்ணுல் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர எண்ணித் தெளிந்ததே மெய் என்னும் பழமொழி அவளிடம் செல்லாது. காரண காரியங்களே எண்ணிப் பகுத்து உணரும் வல்லமை, படித்துப் பட்டம் பெற்றவர்களில் கூடப் பலருக்கு இல்லேயே. குடும்ப இன்பதுன்பம் என்ற பாடம் தவிர வேறு படிப்பு அறியாத தாய்க்கு விளக்கம் எங்கிருந்து வரும்? "முன்னே கொடுத்த மருந்தின் பயன் அம்மா இது; அந்த மருந்து பொறுத்துத்தானே வேலே செய்யும்" என்று சொன்னேன். "ஒரு வேளே இப்படியும் இருக்கலாம். எல்லாவற்றையும் விட இயற்கைதான் ஆற்றல் மிகுந்தது. நோயை உண்டாக்கியது இயற்கை. நோயைத் தீர்க்கும் ஆற்றலும் அதற்கு உண்டு. நல்ல காற்று, நல்ல வெளிச்சம், தட்ப வெப்ப மாறுதல் இவைகளுக்கு இருக்கும் வல்லமை எந்த டாக்டருக்கும் இல்லே என்று ஆங்கிலப் புத்தகங்களில் எழுதியிருக்கிறது. அதனுல்தான் நம் முன்னேர்கள், காற்று, ஒளி இவற்றையெல்லாம் தெய்வம் என்று பூசை செய்தார்கள். நாமும் அவர்கள் போன வழியில்தானே போக வேண்டும்? மந்திரக்காரன் இப்போது வேண்டா அம்மா" என்று அன்னேக்குச் சொன்னேன்.

அன்னே வருத்தத்தோடு சமையலறையை நோக்கி நடந்தாள். என் மனம் புண்பட்டது. "அம்மா" என்றேன். "பெரியவர்கள் சொன்னுல் கேட்க வேண்டும். வீண் கதையெல்லாம் ஏன்?" என்று நின்ருள். "நான் எவ்வளவோ பட்டிருக்கிறேன்; பார்த்திருக்கிறேன். மந்திரக்காரன் வராமல் இருந்தால் தெரிந்திருக்கும். வந்தபிறகு இப்படிப் பேசுகிருய். மந்திரத்தை அடுத்து ஒரு பூசையும் போடாமல் விட்டுவிட்டால், நாளேக்கு

என்ன ஆகுமோ? உனக்கு என்ன தெரியும்? இருபத்தெட்டு நாளைக்குள் குடும்பத்தில் அந்தக் கேடு காட்டுமே. மந்திரம் என்ருல் என்ன, மாங்காயா, புளியங்காயா? இப்போது உங்கள் சின்னம்மா ஆர்க்காட்டில் அனுபவிக்கிருளே, போதாதா?" என்று நடுக்கமான குரலில் சொன்னுள்.

இன்னும் வாய்திறந்து பேசினல் அந்தக் களங்கமற்ற மனம் ஆருப் புண்ணுய்விடும் என்று அஞ்சினேன். உடனே சொக்காய் அணிந்துகொண்டு வெளியே கிளம்பினேன். காரணம் இன்னது, அதனல் விளையும் காரியம் இன்னது என்று அந்த வைத்தியன் காட்ட முயல்கிருன். அதனல்தான் தோல்வி அடைகிருன். மந்திரக்காரன் காரணத்தையும் காரியத்தையும் இருண்ட திரை விட்டுப் பிரிக்கிருன்; அதனல் மக்களின் மனத்தில் வெற்றிக்கொடி நாட்டுகிருன். அந்த வைத்தியனல் பொதுமக்களைப் பயமுறுத்த முடியவில்லை; இதனல் இத்தனை நாளுக்குள் இன்ன கேடு வரும்; குடும்பத்தைச் சனியன் பிடிக்கும் என்று சொல்ல அவனல் முடியவில்லை; இது அவனுடைய குறை என்று இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டே கொண்டித்தோப்பை நோக்கி விறு விறு என நடந்தேன்.

கொண்டித்தோப்புக்குள் என் கால்கள் நுழைய மறுத்தன. காரணம், திருப்பள்ளித்தெருவைக் கண்ட பிறகு என் மனம் மாறிவிட்டது; வந்த வேலை பெரிதல்ல என்று என்னுடன் போராடத் தொடங்கிவிட்டது. கால்களை வேகமாக அடி எடுத்து வைக்குமாறு ஏவினேன். அவற்றைக் குறை கூறிப் பயன் என்ன? என் மனம் பின்னே இருந்து இழுத்துப் பிடித்தால் எப்படித்தான் நடக்க முடியும்?

வேறு வழி இல்லாமல் காலைத் திருப்பித் திருப்பள்ளித்தெரு வழியாகவே நடந்து அந்தத் தெருவைக் கடந்து வேறு வழியாகக் கொண்டித்தோப்பை அடையலாமெனத் துணிந்தேன். திருப்பள்ளித்தெரு—திருப்பள்ளித்தெரு— திருப்பள்ளித்தெரு—என் மனத்தை நடுங்கவைத்த தெரு. கால்கள் இப்போதும் விரைந்து நடக்கவில்லை. அந்த வீட்டை நெருங்க நெருங்க என்னை அறியாமல் ஒரு வகை நடுக்கம் மனத்தில் வளர்ந்தது; உடலிலும் தெரிந்தது. அது அச்சத்தின் விளைவா? அல்ல, அல்ல. ஏமாற்றத்தின் விளைவா? அதுவும் அல்ல. வேறு காரணம் என்ன சொல்வது? கனவா? அதுவும் அல்லவே. நடுத்தெருவில் காலை ஒன்பது மணிக்கு நடந்து செல்வது குற்றமா? என்ன நடுக்கம்? அதை அறிவார் யார்? சூடளக்கும் கருவி இருந்தால் என் உள்ளக்கொதிப்பை அளந்திருக்க முடியுமா? அல்லது, இரத்த அழுத்தத்தையோ இரத்த ஓட்டத்தையோ அளக்கும் மற்றக் கருவிகளால் அதை அளந்திருக்க முடியுமா?

அந்த வீடும் வந்துவிட்டது. மெல்ல நடந்தேன். மரவட்டை போல் வடிவம் சிறுத்து ஊர்ந்து செல்லும் வரம் பெற்றிருந்தால் மகிழ்ந்திருப்பேன். அப்போது அவள் திடீரென வெளியே வந்து மரவட்டையான என்னை மிதித்திருந்தாலும் சாகத் துணிந்திருப்பேன். சன்னலை நோக்கினேன். ஒரு முகமும் காணவில்லை.

வந்த வழியே திரும்புவது போல் திரும்பினேன். மறுபடியும் மெல்ல நடந்துகொண்டே வந்து சன்னல்களைப் பார்த்துக்கொண்டே நகர்ந்தேன். அவளுடைய அண்ணன்தான் தென்பட்டான். என்னைப் பார்த்ததும் ஒரு கனைப்புக் கனைத்தான்.

எங்கிருந்தோ என் ஆண்மை என்னிடமே வந்து

உண்மையாகவே அன்புகொண் டிருந்தாளோ? இருந்தாலும் இருக்கும். எதிர் வீட்டுச் சகுந்தலை போல் பெற்றோருக்குக் கட்டுப்பட்ட இளம்பெண் அல்ல இவள். உரிமை உடையவள், அறிவு உடையவள். திறமையும் உடையவள். பணம் பாதாளம் மட்டும் பாயும் என்கிறார்களே! சகுந்தலையின் மனத்தை என்னிடமிருந்து பிரித்தவர்கள் அவர்களுடைய பெற்றோர். இவளுடைய மனத்தை என்னிடமிருந்து பிரித்தது பணமாக இருக்கலாம். காதல் வல்லமை பெறாதபோது, பெற்றோரின் கட்டுப்பாடும் பணத்தின் செல்வாக்கும் வெற்றி பெறுகின்றன. இவள் என்னை மணந்திருந்தால் மாதம் எண்பது ரூபாயில் வாழ்க்கை நடத்த வேண்டும்; வாடகை வீட்டில் குடியிருக்க வேண்டும்; நூல் புடவை உடுத்த வேண்டும். இதை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் அவனை மணந்துகொண்டாள். கலெக்டர் ஆபீஸ் கிளார்க்கின் மனைவி என்பதை விட்டுக் கள்ளுக்கடைக்காரன் மனைவி என்று பெயர் எடுக்க விரும்பினாளே! மாதம் அறுநூறு அல்லது ஆயிர ரூபாய், தனி பங்களா, பட்டுப்புடவை இவற்றைவிடக் காதல் பெரிதாகத் தோன்றவில்லை. அவளும் ஏமாந்தாள், ஒருவன் பணத்தை நம்பி. நானும் ஏமாந்தேன், அவளுடைய மனத்தை நம்பி.

இவ்வாறு எண்ணிக்கொண்டே கொண்டித் தோப்பில் பள்ளிக்கூடம் இருக்கும் தெருவை அடைந்தேன். அங்கே "மறுமணம்" என்ற சினிமா விளம்பரம் கண்டேன். போய்ப் பார்க்க விரும்பினேன். அதைத் தொடர்ந்து என் நண்பன் மருதப்பன் சொன்ன சொல்லை நினைத்தேன்: "பி.ஏ. படித்தும் உளநூல் தெரியாமல் ஏமாந்தாயே! இரண்டுமுறை ஏமாந்தது போதும். இனிமேல் எனக்குச் சொல்லாமல்

சேர்ந்தது. அவளைப் பார்த்து நானும் ஒரு சிறு கனைப் புக் கனைக்க முயன்றேன். அடக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினேன். தலை நிமிர்ந்தேன். நான் விட்ட பெரு மூச்சில் என் நடுக்கம் அழிந்தது. கிழவனும் கிழவியு மாய் இருவர் வெற்றிலை பாக்கு மென்றுகொண்டே அசைந்து என் எதிரே வந்துகொண் டிருந்தார்கள். அந்தக் கிழவனின் கண்ணொளி மங்கியிருந்தபோதிலும் எனக்கு அறிவூட்டும் ஆற்றலை இழக்கவில்லை. என்னைப் போல் அவன் ஏமாற்றம் அடையவில்லை. நம் பிக்கை நிறைந்த வாழ்க்கை காணப்பட்டது அவனு டைய கண்ணொளியில்.

நான் செய்த தவறுதலை உணர்ந்தேன். விருந் துக்கு அழைத்த வீட்டினுள் நுழையும் தருவாயில் "உனக்கா உணவு?" என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினால், அந்த வீட்டை எட்டியும் பார்க்கத் தகுமோ? சீ! சீ! அவளுடைய அழகும் அறிவும் நடை யும் நடிப்பும் யாரை ஏமாற்றும்? இனியும் அவற்றிற்கு நான் அடிமையாக இருக்க முடியாது. அன்புக்கு அடிமையாகலாம் என்று எண்ணினேன். என் இனிய குரல் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதாம். என் பேச்சுத் திறமை அவள் அறிவை மயக்கிவிட்ட தாம். என் ஆண்மை எழில் அவள்நெஞ்சை அள்ளிக் கொண்டதாம். இப்படி யெல்லாம் என்னிடம் வஞ்சக மாக நடித்தாள். கடிதத்தில் கண்டவை எல்லாம் எழுத் துக்கள்; கருத்துக்கள் அல்ல. இதைத் தெரிந்து கொள்ள மூன்று மாதம் ஆயின. கையில் இருந்த காசைப் பறிப்பதற்கும், இரண்டு பவுண்டன் பேனா வைப் பெறுவதற்கும் காதற்பேச்சையும் கண்பார்வை யையும் பயன்படுத்திக்கொண்டாள். அது வியாபாரம்! காதல், விலையாகும் சரக்கா? இல்லை. ஒருவேளை

காதல் உலகில் இறங்கிவிடாதே. என் அனுபவத்தைப் பயன்படுத்திக்கொள்" என்று அவன் சொல்லியிருந்தான். அவனுடைய வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. கல்லூரி மாணவனையும் அரிச்சுவடிப் பையனையும் ஒன்றாகப் படிக்கவிட்டது போன்றதுதான் அவனும் அவன் மனைவியும் நடத்தும் வாழ்க்கை.

அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்து வீடு என்று சொன்னாள் அன்னை. ஒரு தாழ்ந்த ஓட்டு வீடு இருந்தது. அதுவாக இருக்கும் என்று உள்ளே பார்த்தேன். கக்குவான் இருமலால் ஒரு குழந்தை இருமி இருமித் தான் தின்ற தோசையை வாசற்படியில் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தது. அதைவிடப் பெரிய குழந்தை மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டு மஞ்சள் காமாலைக் கண்ணோடு உட்புறத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தது. "பாடையில் வைக்க, கூடையில் வார" என்ற பல்லவியோடு ஓர் அம்மையார் இங்கும் அங்கும் திரிந்துகொண்டிருந்தார்.

"மந்திரக்கார அய்யா இங்கே இருக்கிறாரா அம்மா" என்று கேட்டேன். "இருக்கிறார், இருக்கிறார்; அதற்கு என்ன குறைச்சல்?" என்ற பதில் வந்தது. "யார் அய்யா!" என்ற மற்றொரு குரல் கேட்டது. "நான், வேப்பேரி" என்றேன். பீடிப் புகை முன்னே வர அவர் பின்னே வந்தார். கண்கள் சிவந்திருந்தன. அய்யா நெருங்கி வந்ததும் என் ஐயம் தீர்ந்தது. காலை எட்டு மணிக்குக் காப்பி குடிப்பதற்குப் பதில் சாராயமே குடிக்கும் குடிவளம் உடையவர் என்று தெரிந்துகொண்டேன். வந்த செய்தியைச் சொல்லிவிட்டு நிற்கவும் மனம் கூசி வெளியே வந்தேன்.

இரண்டு வீடு கடந்து வந்ததும் மறுபடியும் அவனிடம் போய், "கையோடு அழைத்து வரச்

சொன்னார்கள்" என்றேன். "எல்லாம் தெரியும். அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். எல்லாம் இங்கிருந்தபடியே செய்யத் தெரியும். கையில் ஏதாவது பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்றான். பணப் பையிலிருந்து ஒரு ரூபாய் எடுத்து நீட்டினேன். "ஒன்றும் கவலை வேண்டா என்று உங்கள் அம்மாவுக்குச் சொல்லுங்கள். சாயுங்காலம் வருவேன். ஒரு கோழி வாங்கிவைக்கச் சொல்லுங்கள். அங்கே கிடைக்குமல்லவா?" என்றான். 'ஊம்' கூட்டித் தலையசைத்து விட்டு வெளியே நடந்தேன்.

வாசற்படியை மெல்லக் கடந்தேன். அப்போது, "அடீ! இந்தாடி, என்ன மருந்து கொடுக்கிறார் அந்தச் மசவிட்டு வைத்தியர்?" என்ற குரல் கேட்டது. மந்திரக்காரனுடைய குரல்தான் என்று தெரிந்து, கேட்டுக்கொண்டே நின்றேன். "ஆறு நாளாக மருந்து கொடுத்தும் காய்ச்சல் தீரவில்லையே. ஆசுபத்திரிக்காவது எடுத்துக்கொண்டு போகலாமா?" என்று தொடர்ந்து பேசியது கேட்டேன். "அந்த ரூபாயைக் கொடுங்கள், வைத்தியருக்குக் கொடுக்கலாம். பணம் நீட்டாமல் யார்தான் நல்ல மருந்தாகக் கொடுப்பார்கள்?" என்று அவன் மனைவி பேசியதும் கேட்டது. மேலும் நிற்பது அழகல்ல என்று நகர்ந்து சிவமே என்று எண்ணிக்கொண்டே வந்தேன்.

# மருதப்பன்

***செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி***
***இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென***
***இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென***
***மழலை இன்சொல் பயிற்றும்***
***நாணுடை அரிவை...***

என்ன அழகான ஓவியம்! ஓர் அழகான காதலியின் ஓவியம்! அல்ல, அல்ல, சிறந்த நுட்பமான காதலின் ஓவியம்! வாழ்க அகநானூறு என்று வாழ்த்தினேன்.

புத்தகத்தை மூடிவிட்டு, கால்களை மேசையின் மேல் நீட்டி நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டேன். பக்கத்துத் தெருவில் இருந்த தென்னை மரங்களின் ஒழுங்கு, கண்ணுக்கு இனிய காட்சியாக இருந்தது. ஒரு முருங்கை மரம், பாவம், உரிமையற்று வளர்ந்து நின்றது. புதிய கிளைகள் விடுவதும் ஒடிப்பதுமாக இருந்தால் அது தடையின்றி வளர்வது எங்கே? தப்பித் தவறி ஒடிக்க மறந்து விட்டுவிட்டாலும் பாழாய்ப்போன ஆடி மாதம் பிறந்ததும் இயற்கையன்னை அதன் செருக்கை அடக்கப் பெருங் காற்றை அனுப்பிப் பெரிய கிளைகளையும் முறிய வைக்

கிருள். அதைவிட மக்களே சிறு கிளைகளை ஒடித்து விடுவது நல்லதல்லவா? இப்படி ஒடிப்பும் முறிப்பும் இருந்து அந்த முருங்கை மரம் தென்னை மரத்தின் பாதி உயரத்தை எட்டிப் பிடித்துவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

எங்கள் வாழ்க்கையும் இப்படித்தான். காவியத்தில் காணும் காதலர்கள் எல்லோரும் இந்தத் தென்னை மரங்களைப் போல் உயர்ந்த வாழ்வு பெற்று ஒழுங்காக விளங்குகிருர்கள். ஆனல் நானே முருங்கை மரம்! உடலோடு கூடி வாழ்கின்றவன். உடல் பலருக்குக் கட்டுப்பட்டு வயிறு வளர்ப்பது. குடும்பத்தில் சுற்றத்தார், தொழிற்சாலையில் அதிகாரிகள் — இவர்கள் எங்கள் வாழ்க்கையில் ஒடிப்பும் முறிப்பும் செய்கிருர்கள். எங்களைப் பயன்படுத்திக்கொள்கிருர்கள். இவர்களின் விருப்பத்திற்கு இணங்காவிட்டால் உலக வாழ்க்கை இல்லை; இணங்கிஞலோ காதல்வாழ்க்கை இல்லை. இப்படிப்பட்ட போராட்டத்தில் சிக்குண்டும் எப்படியோ இருக்கின்ருேம், வாழ்கின்ருேம். நாங்களும் காதலர்கள் வரிசையில் நிற்கின்ருேம். நண்பர்கள் எங்கள் வாழ்க்கையையும் பாராட்டுகின்ருர்கள்.

ஆனல் இந்த அகநானூற்றுப் பாட்டில் உள்ள தலைவியோடு என் துணைவியை ஒப்பிட முடியுமா?

அந்தத் தலைவியும் அஞ்சுகின்ருளாம். இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லச் சொல்லுகின்ருளாம். இதை என் துணைவியிடம் எப்படிக் காண முடியும்? நான் ஊருக்குப் போனல் அப்போது அவளுடைய மனம் அந்நிலையில் இருக்கும். அந்த மனநிலையைப் படிப்பவர் யார்?

அந்த முருங்கை மரத்திலிருந்து இரண்டு கிளிகள் ஒன்றன்பின் ஒன்ருக எழுந்து பறந்தன. அவை

தென்னை மரத்தில் சென்று ஓலையில் மறைந்திருந்தன. உடனே சிறிது நேரத்தில் வெளிவந்தன. தென்னை மரத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்து மறுபடியும் முருங்கைக் கிளையில் உட்கார்ந்து கொஞ்சின.

அதுதான் வாழ்வு, காதல் வாழ்வு. காவியமாக இருந்தால் என்ன? அல்லது, உலகமாக இருந்தால் என்ன? பாட்டாக இருந்தால் என்ன? அல்லது, உடம்பாக இருந்தால் என்ன? அவற்றில் இரண்டு உள்ளம் வேண்டும். ஒன்று அமைதி உள்ளம்; ஒன்று ஆற்றல் உள்ளம். அமைதி, ஆற்றல் பெற வேண்டும். ஆற்றல், அமைதி பெற வேண்டும். உயர உயரப் பறக்கலாம். தாழத் தாழ வரலாம். ஏற்றத் தாழ்வு அவற்றில் இல்லை. இரண்டு உள்ளம் ஒன்று பட்டு உணர்தல்தான் வேண்டியது. அதுதான் அந்தக் கிளிகளின் வாழ்வு.

உள்ளம் இரண்டும் ஒன்றுபட வேண்டும். அவ்வளவுதான் காதல் வாழ்க்கை. மற்றவை பொருளல்ல.

உண்மைதான். என் உள்ளம் அன்பு நிறைந்தது. துணைவியின் உள்ளமும் அப்படித்தான். பிறகு என்ன குறை? ஏதோ குறைபோலத் தோன்றுகிறதே! "இவளை ஏன் திருமணம் செய்துகொண்டேன்? நல்ல துணையாகத் தேடாமல் தவறிவிட்டேனே" என்ற எண்ணம் ஒவ்வொரு வேளை வருகின்றதே. அவளும் ஒவ்வொரு நாள் என்னை வெறுத்துப் பெருமூச்சு விடுகின்றாளே!

அந்தக் கிளிகளுக்குக் கவலை இல்லை. வெளியுலகத்தைப் பற்றிய கட்டுப்பாடு இல்லை. இந்தத் தெரு பிடிக்காவிட்டால் வேறிடத்துக்குப் பறக்கும். ஒரு மரம் வெறுத்தால் வேறு மரம் தேடும். ஆனால் அவைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிவது மட்டும் இல்லை.

அவள் அப்படி அல்ல. சுற்றத்தாரிடம் தான் எடுத்த நல்ல பெயரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று பாடுபடுகிருள். வாழ்க்கையில் எந்த மாறுதலும் செய்துகொள்ள மறுக்கிருள். நான் மட்டும் — இல்லை, இல்லை. நானும் வெளியுலக மதிப்பை நாடுகின்றேன். நண்பர்களிடத்தில் நல்ல பெயர் எடுக்கப் பாடுபடுகின்றேன். உலகத்தார் இகழாதபடி பார்த்துக் கொள்கின்றேன். இதோ அணிந்துகொண்டுள்ள இந்தச் சொக்காய்முதல் நான் பெற்றுள்ள பி. ஏ. பட்டம் வரையில் எல்லாம் உலக மதிப்புக்குத்தானே! இந்த வாசற்படியில் வீணுக்குச் செலவாகியுள்ள குங்குமம் முதல் அங்கே உலர்ந்துகொண் டிருக்கும் காஞ்சிபுரம் பட்டுப்புடைவை வரையில் எல்லாம் அவளுக்குச் சுற்றுப்புறத்தார் தரும் மதிப்புக்காக இருப்பவை.

கிளிகளுக்கு இவை இல்லை; அதனுல் காதல் வாழ்க்கைக்குத் தடையும் இல்லை.

ஆனல் எங்களுக்கு இவை வேண்டுமே. இல்லையானல் இந்த வீட்டில் வாழும் உரிமை போய்விடும். அறுசுவை உண்டி அகப்படாது. நொடிக்கு நொடி வாழ்க்கையில் நிலையாமையும் துன்பமுமாக முடியுமே! ஊரார் எங்கள்மேல் கல்லெடுத்து எறிவார்களே!

கிளிகள்மேல் கல் எறிவார் இல்லை. கிளிகள் இப்படித்தான் பறப்பது வழக்கம் என்று விடுவார்கள். ஆனல், நாங்கள் உலக வழக்கங்களை மீறினல் சுற்றுப்புறத்தார் சும்மா விடமாட்டார்களே. நான் பட்டம் பெருமல் பெற்றவர்களைப் போல் நாகரிகமாக நடக்காமல் தவறினல் வயிற்றுக்குக் கஞ்சி இல்லாமல் போய்விடும். அவள் வெளிப்படையாகக் கொஞ்சிக் குலவத் தொடங்கினல், "சினிமாவைவிட இதைப் பார்க்கலாம்" என்று சினிமாவுக்குப் போகிறவர்கள்

எல்லாரும் இங்கே வந்துவிடுவார்களே. நான் சொக்காய் இல்லாமல் சென்னையில் திரிந்தால் என்னைக் கீழ்ப்பாக்கத்துக்கு இழுத்துக்கொண்டு போய் உடம்பைப் புண்படுத்துவார்கள். அவள் வாசற்படிக்குக் குங்குமம் வைக்காவிட்டால், தெருவில் உள்ள பெண்கள் அவளைத் தலைகாட்ட வொட்டாமல் பேசி மனத்தைப் புண்படுத்துவார்கள்.

ஆகையால், கிளிகள் வேறு; மக்கள் வேறுதான். கிளிகளில் அடிமைக் கிளி இல்லை. மக்கள் எல்லாரும் அடிமைகளே. கிளியின் உடம்பைக் கூட்டில் அடைத்தாலும் அதன் மனம் பறந்துகொண்டே யிருக்கும். மனிதனை மலைமேல் திரியவிட்டாலும் அவனுடைய மனம மண்வீடு கட்டி அடைபட்டுக் கிடக்கும்.

ஒரு கிளி மற்றொரு கிளிக்கு அஞ்சி அடங்குவதும் இல்லை. அதனிடம் மதிப்பைத் தேடித் திரிவதும் இல்லை. ஆனால் மனிதன் மற்றொரு மனிதனுக்குத் தான் அஞ்சுகிறான். மற்றொருவன் மதிக்க வேண்டும் என்றுதான் பாடுபட்டு அலைகிறான். மற்றவனுக்குப் பயந்துதான் வீடு கட்டினான்; தாழ்ப்பாளும் பூட்டும் அமைத்தான்; ஆயுதங்கள் செய்தான்; யானை குதிரை முதலிய படைகளைத் துணையாகக் கொண்டான்; அணிவகுத்துப் போர் செய்யக் கற்றான்; சட்டங்கள் இயற்றினான்; மன்றங்கள் நிறுவினான்; விஞ்ஞானக் கருவிகளும் கண்டான். சிங்கம் புலி கரடிக்குப் பயந்தா பூட்டு அமைத்தான்? தேள் பாம்புக்கு அஞ்சியா சட்டங்கள் இயற்றினான்? பிளேக், காலரா கிருமிகளுக்குப் பயந்தா வெடி குண்டும் நச்சுப்புகையும் கண்டான்? மனிதன் தன் இனத்தைக் கண்டே அஞ்சுகின்றான்; கிளியைப் போல் இவன் வாழ முடியாது. அகநானூற்றுத் தலைவியும் அஞ்சினாள்; "இல்லவர்

அறிதல் அஞ்சி" மெல்லச் சொன்னாள்.

இவ்வாறு எண்ண உலகத்தில் பறந்துகொண்டிருந்தபோது, "அப்பா, ஏடியா ஏடியா" என்று என் மகன் என்னை இழுத்து நிறுத்திவிட்டான். அவன் கையிலே ஒரு வடை கண்டேன்; வாயைச் சுற்றி இட்டளித் துணுக்குகள் ஒட்டியிருக்கக் கண்டேன்; "போ, அம்மாகிட்டே போ. வாயைத் துடைத்துக் கொண்டு வா. ஆய் மாதிரி இருக்கிறது. நல்லா இல்லை, போ" என்றேன்.

அவன் போக மறுத்துப் பிடிவாதமாய் "ஏடியா, ஏடியா" என்றான். வேறு வழி இல்லை என்று ரேடியோவைத் திருப்பிப் பாட்டில் வைத்துவிட்டு நேரே சமையலறைக்குப் போனேன்.

"ஏன் வந்துவிட்டீர்கள்? கொஞ்ச நேரம் அவனைப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் வாசற்படிக்கு மஞ்சள் குங்குமம் வைத்துவிட்டு, பூசை பண்ணிவிட்டு வந்து விடுவேன். வெள்ளிக்கிழமை ஒருநாள் பார்த்துக் கொள்ளக் கூடாதா?" என்றாள் அவள்.

"நல்ல வெள்ளிக்கிழமை வந்துவிட்டது. ஊரார் மெச்சுவதற்கே உழைக்கச் சரியாக இருக்கிறது உனக்கு. குழந்தையின் வாய் அப்படியே இருக்கிறது. இப்போது என் நண்பர் யாராவது வந்து பார்த்தால் என்ன நினைப்பார்கள்? இட்டளி ஊட்டத் தெரிகிறது, துடைக்கத் தெரியலையா! வெள்ளிக்கிழமைக்குக் குறைச்சல் இல்லை" என்றேன்.

"வெளியார் மெச்ச வேண்டும் என்றுதானே குழந்தை வாயைத் துடைக்கச் சொல்கிறீர்கள்? நானும் ஊரார் மெச்சத்தான்......" என்று குறையாகவே நிறுத்தினாள்.

பேசாமல் வந்துவிட்டேன். வந்து பார்க்கும்போது

அந்த வடையைத் துண்டு துண்டாக்கி, ரேடியோ வைச் சுற்றிப் படைத்துவிட்டு, அதைக் கைக்கு வந்தபடியெல்லாம் திருப்பிக்கொண் டிருந்தான் என் அருந்தவப் புதல்வன். அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் வெறுப்போடு அவனை நோக்கி நின்றேன். அவன், " அப்பா! ஏடியோ. கீ - உர் - டா - டீ - கீர்; என்று இரண்டு கைகளையும் தட்டித் தட்டிச் சிரித் தான். பணச் செலவுக்கு வழி வைத்தான் என்று எண்ணிக்கொண்டு வருத்தத்தோடு அதை ஒழுங்கு படுத்த முயன்றேன்.

"மருத்! மருத்!" என்ற குரல் கேட்டது. இளங்கோ நான் எதிர்பார்த்தபடி வந்தான். " என்ன ஒருவகையாக இருக்கிறாயே?" என்று கேட்டான். " இந்த மார்க்கோனி இப்படிப் பாழ்படுத்துகிறான் " என்றேன்.

" போனால் போகட்டும் அப்பா! இந்தப் பொருள் உடைந்தாலும் கவலையில்லை. உன் மனம் உடைந்து வருந்தாமல் பார்த்துக்கொள். அங்கங்கே குழந்தைகள் உடைப்பதற்கென்றே எவ்வளவோ பொம்மைகளும் கருவிகளும் வாங்கிக் கொடுக்கிறார்கள். ஒரு பையன். ஆகட்டுமே செலவு " என்றான்.

" உனக்கு இப்போது பொருள் உடைவது பற்றிக் கவலை இல்லை. உடைந்துபோன உன் மனம்தான் சீர்ப் பட வேண்டும். அதனால் இப்படிப் பேசுகிறாய் " என்றேன்.

இளங்கோ என்னென்னவோ பேசிக்கொண் டிருந்து நேராக ஆபீசுக்குப் போய்விட்டான். நானும் 'தென்றல்' நிலையத்துக்குப் புறப்படலானேன். அவ சரமாக உணவு உண்டு புறப்பட்டேன். வெள்ளிக் கிழமை, நிலையத்தில் வேலை குறைந்த நாள். பேனு

எடுத்து ஆங்கிலச் செய்தித்தாள் பார்த்து "ஊர்வம்பு" என்ற தலைப்புக்கு வேண்டிய குறிப்புக்களைத் திரட்டலானேன்.

மணி பன்னிரண்டு ஆகியும் என் பேனா ஓடவில்லை. பேனாவை மேசைமேல் வைத்துவிட்டேன். துணையாசிரியர் என்ற நினைவே அற்றுப்போய் மறுபடியும் காதல் உலகத்தில் பறக்கத் தொடங்கினேன்.

இளங்கோவின் கவலையை நினைத்தேன். இரண்டு முறை ஏமாற்றம் அடைந்தான். நான் அவ்வப்போது தடுத்தே வந்தேன். ஆனால் என் பேச்சை அந்த வேளையில் ஏற்பதில்லை. பிறகு நினைந்து வருந்தத் தொடங்குகிறான். அந்த எதிர்வீட்டுப் பெண் சகுந்தலை உண்மையான அன்பு வைத்திருந்தாள். பார்த்தால் மிக நல்ல குணம் உடையவள் என்றும் தெரிந்தது. பத்தாவது படித்ததே போதும். ஆனால் அவளால் தன் பெற்றோரை மீறி நடக்க முடியவில்லை. அங்கும் உலகம்தான் காதல்வாழ்க்கையை முறித்தது. ஆனால் திருப்பள்ளித் தெருக் கதையை நான் நம்பவே இல்லை. அந்தப்பெண் எனக்குத் தெரியாத பெண்ணா? அவள் வெளிப்படையாகப் பேசும் பேச்சைக்கேட்டு இவன் மயங்கிவிட்டான். கலெக்டர் ஆபீஸ் கிளர்க் என்றால் உலக அறிவு வளர்வதற்கு இடம் ஏது? அவன் இதுபோன்ற பத்திரிகை நிலையத்திற்கு வந்திருந்தால் பலரோடு நட்பு முறையில் பழகி உலகத்தைக் கற்றிருக்கலாம். கலெக்டர் ஆபீசில் சிலரிடம் அடங்க வேண்டும், சிலரை அடக்க வேண்டும். இவ்வளவு தெரிந்தால் போதும்; முன்னுக்கு வரலாம். அடிமைப் புத்தி அல்லது ஆளும் புத்தி இவை தவிர உரிமையறிவு அங்கே ஏது?

அந்தப் பெண் இவனோடு ஒரு வகுப்பில் படித்தவள் அல்லவா? அஞ்சாமல் பேசுவாள். கல்லூரிப்

படிப்பின் துணையால் ஆங்கிலேயர்களைப் போல் பேசி நடிக்கக் கற்றுக்கொண்டாள். ஆனால் ஆங்கில நாட்டுக் காதலர்கள் இப்படி வெளிப்படையாகக் காதலைப் பேசியா தீர்த்துக்கொள்கிறார்கள்? அந்த நாடகங்களிலும் காணோமே! தமிழ்ச் சினிமாக்களில்தான், "நாதா!" "பிராணநாதா" என்றும், "பத்தினீ!" "கண்மணீ!" என்றும் பேசிப் பேசிக் காதலை ஒழித்துவிடுகிறார்கள். உள்ளத்தில் உணர்வே நிரம்பிய காதல் நிலையில், இப்படிச் சொற்கள் பொழியுமா? "உன்னை மறந்தால் உயிர் வாழ்வேனோ" என்று கண்டவிடமெல்லாம் பாட்டுக்கள் பிறக்குமா? என்னவோ, நாகரிகத்தின் பெயரால் நடக்கும் அநாகரிகம்!

அவள் ஏறக்குறைய சினிமாவில் நடிப்பது போல்தான் காதல் நாடகம் நடித்தாள்; காதல் பேச்சும் பேசினாள். ஆனால் சினிமாப் பாட்டுத்தான் பாடவில்லை. அதற்குப் பதில் இளங்கோ தன் இசைத் திறமை காட்டிப் பாடியே தீர்த்தான். அப்போதே நினைத்தேன். அவளுடைய உள்ளத்தில் காதலின் ஆழம் இல்லை என்று சந்தேகப்பட்டேன். நண்பர்களின் நட்புக்கே சொற்களால் புனைதல் பகை என்கிறார் திருவள்ளுவர். காதலைப் பற்றி என்ன சொல்வது?

என்ன வியப்பு! கல்லூரியில் படித்த ஒருத்தி ஒரு கள்ளுக்கடைக்காரனை மணந்தாள். அவனுக்குக் கல்லூரியும் தெரியாது, கலையும் தெரியாது. ஆனால் அவன் ஒருமாவட்டக்கழக உறுப்பினன். அதனால் பள்ளிக்கூடங்களும் ஆசிரியர்களும் அவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நிலைமை உண்டு. ஆனாலும், காதல் உள்ளம் இருந்தால், ஆழ்ந்த உணர்வு இருந்தால், இப்படியும் செய்ய மனம் வருமா?

இரண்டு இடத்திலும் ஏமாந்த பிறகு, "மருதப்

பன் ! இனிமேல் உன் அனுபவம் வேண்டியதுதான்" என்கிருன். நல்ல நண்பன்; உண்மையானவன். இவனும் வெளிப்படையாகக் காதல்பேச்சுப் பேசுகிருனே, இவன்உள்ளத்திலும் ஆழ்ந்த உணர்வு இல்லையோ ?

தவறு, தவறு. அவள் உணர்வே அற்றவள்; அறிவு மட்டும் பெற்றவள். அதனுல் அவளால் நடிக்க முடிந்தது. ஆனுல், இவன் உணர்வு மிக்கவன்; அறிவாளி. இவனுல் நடிக்க முடியாது. இவன் காட்டிய காதல் முற்றிலும் உண்மை, உண்மை. உணர்வு மிகுந்தவர்கள் பொய்யாகக் காதல்நாடகம் நடிக்க முடியாதல்லவா ?

இனிமேல், இவ்வாறு ஏமாற்றம் அடைய மாட்டான். அறிவு மட்டும் பெற்று மனச்சான்றைக் கொன்ற ஆணையும் பெண்ணையும் இனிமேல் பிரித்துத் தெரிந்துகொள்வான்; ஆகையால் ஏமாறமாட்டான்.

இன்று இளங்கோ வந்து சொன்னது முக்கியமானதுதான். அவனுடைய சிற்றப்பாவின் மகளாம்;தங்கையாம்; அவளுக்காக எவ்வளவு கவலைப்படுகின்ருன் ! உண்மையான கவலை; இதுதான் உணர்வுடையவர்களுக்கு வாழ்வு. அந்தத் தங்கையைப் பற்றி இனிமேல் கவலைப் பட்டு ஆவது என்ன ? வீட்டை விட்டுப் பயிற்சிப் பள்ளிக்கூடம் சேர்வதற்காகப் போனவள் அங்கே இருக்கிருள். அவளுடைய உறவினர் குற்றம் சொல்லித் தள்ளிவிட்டார்களாம். ஒரு பெண் அயலார் வீட்டில் இரண்டு மூன்று நாள் தங்கியிருந்தது குற்றமா ? ஆண் ஆயிரம் நாள் தங்கித் தவறும் செய்கிருனே ! என்ன கொடுமை !

இவன் பிடிவாதம் செய்கிருன். நேரே போய் அழைத்துக்கொண்டு வந்து தன் வீட்டில் வைத்

திருந்து யாருக்காவது திருமணம் செய்துகொடுக்கப் போகிருனும். அதனுல் எவ்வளவு தொல்லை வந்து சேரும் ? மாமன் பகையாவான். பெற்ற தாய் வருந்து வாள். இவனுடைய வாழ்க்கைக்கு எல்லாரும் இடை யூறு செய்வார்கள். தவிர, இவன் அந்தப் பெண்ணுக்கு என்ன உதவி செய்ய முடியும் ? பணம் நிறையக் கொடுப்பதாகச் சொன்னுல் இனத்தான் எவனுவது மணம் செய்துகொள்வான். அதுதான் முடியாதே. பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்கவைக்கலாம்; பிறகு ஆசிரியர் தொழிலில் விடலாம். அதுவும்இயற்கையான வாழ்க்கை அல்ல. இத்தனைக்கும் பெற்ற தாய் இடங் கொடுக்கப் போவதில்லை. எப்படியும் போய்ப் பார்த்து விட்டு வர வேண்டும்; கூடுமானுல் அழைத்துவர வேண்டும் என்று பிடிவாதம் செய்கிருன். இந்த ஞாயிற் றுக்கிழமை போனுல் போவான். போய் வரட்டும். பார்க்கலாம்.

அந்தப் பெண் நல்ல அறிவுடையவளாம். சீர் திருத்தமான வாழ்க்கை தெரிந்தவளாம். இயற்கையாக நல்ல அறிவு பெற்றிருப்பது பெரிய நன்மைதான். குணத்திலும் உயர்ந்தவள் ; அழகிலும் சிறந்தவள் என்று சொல்கிருன். அவ்வளவு நல்ல பெண்ணுக்கு ஒரு நல்ல துணை கிடைக்கவில்லையே. எனக்கு அப்படிப் பட்டவள் கிடைத்திருந்தால் —

மறுபடியும் எப்படியோ இந்த எண்ணம் வந்து விட்டதே. என் துணைவியும் நல்லவள், அழகுடைய வள், அறிவுடையவள். அப்படி இருக்க, மனம் ஏன் இப்படி நாடியது ? வாழ்க்கையில் ஒரு மூலையில் அடங் கிக் கிடக்கும் சலிப்பு, ஒவ்வொரு வேளையில் மேலெ ழுந்து ஆட்சி புரிகிறது.

இளங்கோவின் தங்கை எனக்கு மனைவியாக

வாய்த்திருந்தால், வாழ்க்கை இதைவிடச் சீராக இருக்குமோ ? குறையாக இருக்குமோ ? எப்படிச் சொல்ல முடியும் ?

இளங்கோ என்னை எள்ளினான் ; எங்கள் குடும்ப வாழ்க்கை, கல்லூரி மாணவனும அரிச்சுவடிப் பையனும் சேர்ந்து படிப்பது போல என்று எள்ளினான். அவனையே இன்றைக்குக் கேட்டால் அப்படிச் சொல்லமாட்டான் அல்லவா ? இப்போது எங்கள் அனுபவம் வேண்டும் என்றுதானே கேட்கிறான் ?

துணைவி அப்படி ஒன்றும் காதல் இல்லாதவள் அல்ல ; உணர்வு மிகுந்தவள். மூன்று வயது மகனிடம் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கொஞ்சிக் குலாவுகிறாளே, அது போதாதா ? அந்த உணர்வு, காதலுருவம் பெற்று என்னிடம் வாழாதா ? குழந்தையிடம் வெளிப்படையாகத் தன் அன்பு முழுதும் பொழிகிறாள். இது சினிமாவா, நானும் அப்படி எதிர்பார்ப்பதற்கு ? அந்த உள்ளம் மட்டும் என்னிடம் இருந்தால் போதும். தவிர, குழந்தையால், அவளுடைய உலக வாழ்க்கைக்கும் தடையில்லை ; வீட்டு வாழ்க்கைக்கும் தடை இல்லை. ஆனால் என்னால் தடைதானே !

நான் செய்ததும் குற்றம்தான். ஆர்மோனியத்தை எடுத்துக்கொண்டு வரவே கூடாது என்று தடை செய்தேன். அதற்காக அழுதாள். என் பிடிவாதத்தில் வென்றேன். அவளுடைய மனம் புண்பட்டிருக்காதா ? அதை மறக்காமல் நினைவில் வைத்துக் கொண்டிருந்து, ரேடியோ வாங்கினபோது கேட்டாள். அதில் ஆர்மோனியமும் கேட்கிறதே என்று சூடு கொடுத்தாள். பாரதியார் புதுவையில் இருந்த போது ஏதோ ஆர்மோனியத்தைப் பழித்து எழுதினார். அதைப் படித்துப் பைத்தியக்காரன் போல்

நானும் பிடிவாதம் செய்தேன். இப்படி நூறு இருக்கும், ஆயிரம் இருக்கும். ஆகையால் உள்ளம் கலந்து வாழ்வது எப்படி ?

குழந்தையோ அப்படி அல்ல. குழந்தைக்காக அவள் ஏதாவது விட்டுக்கொடுத்தாலும் மனமார அன்பாக விட்டுக்கொடுக்கிருள். அல்லது, தன் விருப்பம் போல் குழந்தையின் மனத்தை மாற்றிவிடுகிருள். குழந்தையிடம் பழகும்போது அவளுக்கு உரிமை குறையவே இல்லே. ஆனல் என்னிடம் அவள் வாழும் வாழ்வில் உரிமைக்கு முழு இடம் இல்லேயே.

முழு உரிமை என்பது மக்களின் வாழ்வில் எப்படி முடியும் ? கிளிகளின் வாழ்வில்தான் அது முடியும். அவற்றின் வாழ்வில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வகையான உலக வாழ்க்கை. ஆணுக்கும் முருங்கை மரம் விருப்பம். பெண்ணுக்கும் அப்படியே. தென்னே மரத்தைச் சுற்றி அதுவும் பறக்கும், இதுவும் பறக்கும். அதுவும் பச்சை கண்ட இடத்தை நாடிப் பறக்கும்; இதுவும் அதை நாடிப் பறக்கும். அதற்குத் தெரிந்ததெல்லாம் இதற்கும் தெரியும். அதற்கு வேண்டாததெல்லாம் இதற்கும் வேண்டா.

ஆனல், என் மனேவி வளர்ந்த சுற்றுப்புறம் வேறு; நான் வளர்ந்த சுற்றுப்புறம் வேறு. அவள் பழகுமிடம் வீடு; நான் பழகுமிடம் இந்தத் 'தென்றல்.' அவள் நண்பர் வேறு; என் நண்பர் வேறு. அவள் கோயிலுக்குப் போக விரும்புகிருள்; நான் சினிமாவுக்கும் போக முந்துகிறேன். அவள் மதிப்பவை மஞ்சளும் சோமவார விரதமும்; நான் மதிப்பவை திருக்குறளும் தாயுமானவரும். அவள் அணிய விரும்புவது பட்டும் பொன்னும்; என் உடம்பில் பொன்னே இல்லே; அணிவதெல்லாம் பருத்தியே. அவள் பேசும் பேச்

செல்லாம் சமையல் பாகம், புடைவைக்கரை, கலி யாணச் சடங்கு முதலானவை; நான் விரும்பும் பேச் செல்லாம் சட்ட அமைப்புகள், நாட்டு உரிமை, காதல்வாழ்வு முதலானவை.

இவ்வளவு வேறுபட்ட வாழ்க்கையில் தொடக் கத்தி லிருந்தே பழகுகிரேும். கிளியைப் போல வாழ்வது எப்படி முடியும்? ஒன்று அவளுடைய பழக்க வழக்கங்களுக்கு நான் அடிமையாக வேண்டும். அல் லது, என் கொள்கைகளுக்கு அவள் அடங்க வேண் டும். ஆனல் இருவர் மனத்திலும் அன்பு இருக் கின்றது. அன்பு இருக்கும் இடத்தில் அடிமையாகவும் முடியாது; அடக்கி வாழவும் முடியாது. அன்பு இல்லாத குடும்பங்களில் — காதல் இல்லாத வாழ்க் கையில் — ஆண் பெண்ணுக்கு அடங்குகிருன்; அல்லது, பெண் ஆணுக்கு அடிமையாகிருள். வாழ்க்கை எளிதாக முடிகிறது. இப்படிப்பட்ட முறை யில்தான் பல குடுமபங்கள் நடக்கின்றன. அந்தக் குடும்பங்களில் சண்டை சச்சரவு போராட்டம் பூசல் வழக்கு ஒன்றும் இல்லை; அமைதி உண்டு; ஆனல் காதல் இருக்கவே முடியாது. நாங்களும் காதலைக் கொன்றுவிட்டால், யாரேனும் ஒருவர் மற்ருெரு வருக்கு அடங்கிவிட்டால், ஒற்றுமையாக வாழ்வோம்.

இப்போது ஒற்றுமை இல்லையா, என்ன? இருக் கிறது. அதற்குக் காரணம் உண்டு. உலக வாழ்க்கை யில் எங்களுக்குப் பொதுவான பொருள் ஒன்று உண்டு. அங்கே நாங்கள் கிளிகளைப் போல்தான் வாழ்கிரேும். வேற்றுமை என்பதே இல்லை. அந்தப் பொதுப் பொருள்தான் எங்கள் குழந்தை, அருள். அருளுக்கு மூன்று வயது ஆகிறது. அருள் பிறந்த பிறகுதான் நாங்கள் நீண்ட நேரம் பேசிப் பழகுகிரேும்.

அந்தக் கிளிகள் தென்னைமரத்தைச் சுற்றிச் சுற்றி ஒற்றுமையாகப் பறக்கவில்லையா ? அதுபோல் நாங்களும் குழந்தையைப் பற்றி எண்ணும்போதும் பேசும்போதும் கொஞ்சும்போதும் குலாவும்போதும் எல்லா வேறுபாடும் மறந்துவிடுகிறோம். 'நம்முடைய செல்வன்' என்கிறேன் நானும்; அவளும் 'நம்முடைய கண்ணன்' என்கிறாள். அவன் வாழ வேண்டும், வளர வேண்டும், படிக்க வேண்டும், பேச வேண்டும், சிறந்த நிலை பெற வேண்டும் என்பதில் எங்களுக்கு ஒரே மனம் தான். அதனால்தான் எங்கள் முருங்கை மரம் ஒடிப்புக்கும் முறிப்புக்கும் தப்பி எப்படியோ வளர்ந்திருக்கிறது. எங்களுக்கும் காதலர் என்ற பேர் கிட்டியிருக்கிறது. குழந்தை இல்லாத வீட்டில் விருந்தாளி நுழையக் கூடாது என்று கதை சொல்கிறதே அது உண்மைதான்.

இவ்வாறு எண்ணிக்கொண்டே இருந்தபோது "ஊர்வம்பு எவ்வளவு ஆயிற்று?" என்று பக்கத்து அறையிலிருப்பவர் வந்து கேட்டார். மேசைமேல் இருந்த கால்களை எடுத்துக் கீழே வைத்துக் கைகளை நீட்டித் திமிர் விட்டபடியே, "ஊர் மட்டுமா ? வீடும் வம்பாகத்தான் இருக்கிறது. மெல்ல நடக்கிறது" என்றேன். அப்படியே கைநீட்டிப் பேனாவை எடுத்துக் காகிதத்தை நோக்கிக்கொண் டிருந்தேன். அவர் கொட்டாவி விட்டுக்கொண்டே திரும்பினார்.

இளங்கோவின் கவலைமுகமே மறுபடியும் என் எதிரே நின்றது. உடன் பிறவாத ஒரு தங்கைக்காக அவன் கவலைப்படுகிறான். ஒரு குற்றமும் செய்யாத பெண் எல்லோராலும் கைவிடப்பட்டாள். அந்த முருங்கை மரத்தில் ஒரு கிளியை மற்றக் கிளிகள் கூடி இப்படிச் சிதறடிக்குமா ?

# திலகம்

இளங்கோ என்னைவிட ஏழு வயது பெரியவன். கல்லூரியில் படித்துப் பி. ஏ. பட்டம் பெற்றவன். நல்ல அறிவு உடையவன். என்மேல் அன்பு உடையவன். அவன் உதவி இருந்திருந்தால் பேசாமல் சென்னைக்கே போய்ச் சேர்ந்துவிட்டிருப்பேன். ஆனால், பெரியம்மா இடம் கொடுத்திருக்க மாட்டாள். மறுபடியும் ஆர்க்காட்டிற்கே துரத்தியிருப்பாள். என்னால் இளங்கோவுக்கும் மற்றவர்களுக்கும் துன்பம்தான் ஏற்பட்டிருக்கும்.

இங்கே வந்ததனால் ஒன்றும் கெடுதி இல்லை. ஆனால், வந்தவேலை ஒன்றும் கைகூடவில்லை. பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்கு இரண்டு வாரத்திற்குமுன் வரத் தவறிவிட்டேன். கடிதத்தை எதிர்பார்த்திருந்தபடியால் தவறினேன். அதற்கும் அந்தச் சாமியார் குறுக்கே நிற்க வேண்டுமா? அந்தக் கடிதத்தை மறைத்துவிட்டதனால் என்னைக் காப்பாற்றிவிட்டதாக எண்ணி ஏமாந்துவிட்டார். இதுவும் நல்லெண்ணமா?

இப்போது அடிக்கடி அம்மாவின் நினைவு வரு

கிறது. என்ன செய்வேன்? அந்தச் சாமியாருக்கு இனிமேல் அங்கே வேலை இருக்காது. அம்மாவின் பெயர் கெடாது. அம்மா என்னை நினைத்து அழு வாளோ? வந்தவர்களைக் கேட்டால் அழுவதில்லை என்கிறார்கள். சமையலும் செய்வதில்லையாம். மாமி வேளைக்குச் சோறு அனுப்பிவிடுகிறாளாம். அதைச் சாப்பிட்டுவிட்டு ஒரு மூலையில் இருக்கிறாளாம். என்ன வாழ்வு! இப்படியா முடிய வேண்டும்?

இங்கே வந்ததும் பழைய சமையல் அறையே வந்து சேர்ந்ததே என்று வருத்தப்பட்டேன். சமையல் செய்வதைப் பற்றிக் கவலை இல்லை. அடுப்பங்கரைப் பூச்சியாய் உலகம் தெரியாமல் அறிவும் வளராமல் மங்கிக் கிடக்க வேண்டுமே என்றுதான் கவலையாக இருந்தது. வீட்டுக்கு ஒரு சமையல் அறை இருக்கும் உலகத்தில் வேறு வழி இல்லை. ஆனால், அறிவைச் சிறிதும் வளர்க்காமல் முதலிலிருந்தே அடக்கிவிட்டிருந்தால் நல்லது. அந்தப் பழமொழி, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு' என்பது பொருத்தம் தான். அடுப்பு ஊதுதலே வாழ்க்கை என்று எண்ணுகின்றவர்களுக்குப் படிப்பு இடையூறுதான் செய்யும்; 'அடுப்பை விட்டு வெளியில் வந்து போ' என்று படிப்புத் தூண்டும். அதனால்தான் படிப்புக்குத் தடை ஏற்படுத்தினார்கள்.

எப்படியோ நாளைக்கு இந்த அடுப்பினிடம் விடை பெறப்போகிறேன். சென்னைக்குப் போகும்படி இவர்களை ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

இவர்கள் எனக்கு நன்மையே செய்வார்கள் என்று முதலிலேயே தோன்றியது. அதன்படியே எல்லாம் நடந்துவந்தது. வீணாகப் போலீசுகாரரிடம் அகப்பட்டுக்கொள்ள இருந்தேன்; காப்பாற்றினார்கள்.

போலீசு என்று நினைத்தாலும் பயமாகத்தான் இருக்கிறது. அதிலும் இந்த அம்மையார் சொன்னது பொய் அல்ல. கணவனும் மனைவியுமாக வந்து சத்திரத்தில் தங்கினால், வாயற்ற அந்தக் கணவனை யார் என்று மருட்டிக் கேட்டு அடித்து இழுத்துக்கொண்டு போலீசு நிலையத்திற்குக் கொண்டுபோய் விடுவது, இன்னும் முரடர்கள் வருவது, அஞ்சிக் கண்ணீர் விட்டுக்கொண் டிருந்த அவளை மருட்டி மயக்கிக் கணவனிடம்சேர்ப்பதாகச் சொல்லிக் கொண்டுபோய் வற்புறுத்திக் கெடுத்துவிடுவது—என்ன கொடுமை!

ஆனால், அவனும் கோழை, அவளும் கோழை. அவன் அவளையும் வரச்சொல்லிப் போலீசு நிலையத்திற்கு அழைத்துக்கொண்டு போயிருக்க வேண்டும். அவனாவது அவளாவது ஊரெல்லாம் கதறி உண்மையை அறிவித்திருக்க வேண்டும். இப்படி முன்பின் தெரியாத ஊருக்கு வந்தவள் என்னைப் போல் ஒரு பேனாக் கத்தியாவது கையில் கொண்டுவந்திருக்க வேண்டாவா? நெருக்கடியான நிலையில் பிறனுடைய உயிரையாவது போக்கியிருக்க வேண்டாவா? நான் கோழையா? என் உயிர் எனக்கு வெல்லமா?

இவ்வளவு வம்புக்கும் இடம் தராமல் காப்பாற்றினார்கள். என்னுடைய நல்ல வேளை—நான் வந்த மோட்டாரில் இவர்களும் உடன்வந்தார்கள். "நீ யார்" என்று கேட்ட போலீசுகாரனுக்குப் பதில் சொல்ல நான் வாய் திறக்குமுன், "என்னுடைய தங்கை" என்றார் இந்த அம்மையார். கணவனுக்கு ஏற்ற மனைவி; மனைவிக்கு ஏற்ற கணவன்.

என்ன உண்மையான மனம்! "என்மேல் உங்களுக்கு இரக்கம் வந்த காரணம் என்ன அம்மா?" என்று கேட்டதற்கு, தம்முடைய வரலாறு முழுதும்

மறைக்காமல் உள்ளவாறு சொல்லிவிட்டாரே! இதுவே பெருந்தன்மை அல்லவா?

"அப்பாவின் பெயர் தெரியாதாம்; என் தாய் வேலைக்காரியாக ஒரு வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தபோது பிறந்தேனும்" என்று சொன்ன ஒருவனுக்கு மனமிரங்கி, அவனுடைய உண்மை ஒழுக்கத்தைப் போற்றி ஒரு முனிவர் உபதேசம் செய்தாராம்.

இந்த அம்மையார் எவ்வளவு உயர்ந்த பண்பாடு பெற்றவர்! இல்லையானால், "நான் பரத்தையர் குலத்தில் பிறந்தவள்" என்று மறைக்காமல் சொல்ல முடியுமா? மூன்று தலைமுறைக்கு முன்னே நான்காம் பாட்டி பரத்தையாக வாழ்ந்தாளாம். அவளுடைய மகள் ஒருத்தனோடு வாழ்ந்து காலம் கழித்தாளாம். அவளுடைய மகள் நடனம் கற்பித்துக்கொண்டு வாழ்ந்துவந்தபோது ஒருவனை மணஞ் செய்துகொண்டாளாம். இந்த வாழ்க்கையில் என்ன குறை? இரண்டு தலைமுறையாக முறைப்படி திருமணம் செய்துகொண்டு வாழ்கின்றார்கள்.

எல்லாவற்றையும் மறந்துவிடலாம். ஒன்று இரக்கம், மற்றொன்று உண்மை. இந்த இரண்டு பண்பு உடையவர்களைத் தாழ்ந்த குலத்தார் என்று நினைப்பதும் பாவம் அல்லவா?

பக்கத்து வீட்டு மாடிமேல் உலாவுகின்றானே தொப்பையன், அவன் தாழ்ந்த குலத்தான். பெரிய பணக்காரனும்; இரண்டு மனைவியராம்; ஐந்து குழந்தைகளாம்; ஊரில் பெரிய மனிதனும். ஆனல், சுருட்டைப் பிடித்துப் புகையை என்னை நோக்கி விடுவதும், என்னைத் திருட்டுப் பார்வை பார்ப்பதும், அடிக்கடி என்னை நோக்கிக் கனைப்பதும், குரங்கு போல் தகா

தன செய்வதும் என்னை மயக்குவதற்கா? இந்தப் பணக்காரக் குரங்குகளை நாடிப் பணம் சேர்க்க எண்ணியிருந்தால், சித்தூர்ப் பள்ளிக்கூடத்தைத் தேடி வந்திருக்க மாட்டேனே!

இந்தப் பாவிப் பயல் இங்கே வந்து சேர்ந்தான். அங்கே சாமியார்; இங்கே இரண்டு பெண்டாட்டிக்காரன். அவனைப் பற்றி இந்த அம்மையாரிடம் சொல்வதில் பயனில்லை. ஒரு முறை சொன்னபோதே குறிப்பைத் தெரிந்துகொண்டு, "அவன் அப்படித்தான் செய்வான்; பார்த்துப் பார்த்து விட்டுவிட்டேன். நீ அவன் சொல்வதையும் செய்வதையும் கவனிக்காதது போல் இருந்துவிடு. என்னை ஆயிரம் முறை திட்டியிருப்பான். அவனுக்கு இணங்காததுதான் காரணம். கிழக்குப் பக்கத்து வீட்டுக்காரி இப்போது இவனுக்கு மூன்றும் பெண்டாட்டி ஆகிவிட்டாள். அவளுடைய கணவனுக்கும் தெரியும். போகட்டும் என்று இடம் கொடுத்துச் சும்மா இருக்கிறன். செல்வம் இருக்கிறது; செல்வாக்கும் இருக்கிறது. வக்கீல்கள் அவன் பக்கம்; வம்பர்களும் அவன்பக்கம். என்னைப் பார்க்கும் போதெல்லாம் யாரையோ திட்டுவது போல் 'தேவடியாள் தேவடியாள்' என்று கூவுவான். அதற்கும் சும்மா இருந்துவருகிறேன்" என்றார்.

"இதைவிட வேறு வீடு பார்த்துக்கொண்டு போய்விடலாம்" என்றேன். அந்த அம்மையார் உருக்கமாகப் பதில் சொன்னார்: "அவன் வேண்டும் என்றே அதன் பக்கத்து வீட்டை விலைக்கு வாங்கி அங்கே பொழுது போக்க வருவான். நான் என்ன அறியாதவளா? கணவனோடு வாழ்ந்து பண்பட்டவள் நான். என்னை இவன் என்ன செய்யமுடியும்? உன்னைப் போன்றவர்கள் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டும்.

அதனால்தான் தங்கை செந்தாமரையை விடுமுறையிலும் இங்கே வரவழைக்காமல் பட்டணத்திலேயே விட்டிருக்கிறோம்" என்றார்.

என்னைச் சென்னைக்கு அனுப்புவதற்கும் இதுதான் காரணமோ என்று எண்ணினேன். இருக்கலாம்; என்னைத் தொல்லைக்கு ஆளாக்காமல் காப்பாற்ற எண்ணியே செந்தாமரைக்குத் துணையாக அனுப்ப முடிவு செய்திருக்கலாம். இங்கே இவர்களுக்குச் சமையல் செய்து போடுவதற்குப் பதிலாக, அங்கே செந்தாமரைக்கும் திருநாதனுக்கும் சமையல் செய்து போட வேண்டும். ஆனால் பட்டணம் பெரியஊர்; நல்லவர்கள் பலர் இருப்பார்கள். இளங்கோவை அங்கே பார்த்தாலும் பார்க்கலாம். எப்படியோ நடப்பது நடக்கட்டும்.

திருநாதன் இந்த அம்மையார் போலவே அமைதியாக இருக்கிறார். இந்தக் காலத்தில் கல்லூரியில் எம். ஏ. படிப்பவர்கள் இப்படி அமைதியாக இருப்பது வியப்பாகத்தான் இருக்கிறது. இரண்டு பெண்டாட்டிக்காரர் இப்படி அலையும் உலகத்திலேயே திருநாதனைப் போல் திருமணம் ஆகாதவர்களும் இருக்கிறார்கள். திருநாதன் தலை நிமிர்ந்தும் பார்க்க மாட்டேன் என்கிறார். அது நல்ல வழக்கம்தான். ஆனால், தமக்கையாருக்காகப் பயந்து அப்படி இருக்கிறாரோ, என்னவோ தெரியவில்லை.

திருநாதனோடு பட்டணம் போவதை எண்ணினால் மனம் ஊசலாடுகிறது. முன்பின் தெரியாத ஒருவருடன் நாளைக்கு ரயிலில் புதிய ஊருக்குப் போகப் போகிறேன். திக்கற்ற என்னைக் காப்பாற்றிய அம்மையாரின குணத்தில் ஒரு பாதியாவது அவருடன் பிறந்த தம்பிக்கு இருக்காதா? ஆர்க்காட்டிலிருந்து சித்தூருக்குத் தனியாக வந்தேன். இப்போதும் சித்தூரிலிருந்து

சென்னைக்குத் தனியாகப் போவதாக எண்ணிக்கொள் ளலாம்; போய்ப் பார்க்கலாம். அவருடைய முகத்தில் அறிவு விளங்குவது போலவே அன்பும் விளங்குகிறது. இப்படிப்பட்டவர் வாழ்க்கைப் பயணத்திற்கே துணை யாக வந்தாலும் நன்மைதானே! ஆனால், எம். ஏ. படிக் கிற ஒருவர் பத்தாவது படித்த ஏழைப் பெண்ணை மணம் செய்துகொள்வாரா?

இவரோடு பட்டணம் போகவேண்டும். ஏதோ ஒரு வகைக்குழப்பம் நெஞ்சில் எழுகிறது. ஏன்?...இப்படியே ஆர்க்காட்டுக்குப் போய்விட்டால் அதைவிட நல்ல தல்லவா? தொப்பையனின் தொல்லைக்காகத்தானே பட்டணம் அனுப்புகிறார்கள்? நம் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டால்......

ஊருக்குத் திரும்பினால் மறுபடியும் துயரம், கல கம், குழப்பம் எல்லாம் தொடங்கிவிடும். அம்மாவுக்கு மாமி சோறு அனுப்புவது நின்றுவிடும். நான் சமைய லறைக்குப் போவேன். என்னைப் பார்க்கப் பார்க்க அம்மாவின் குணம் கெடும். சாமியார் வருவார். அப்புறம்......

அல்ல, அல்ல; இவ்வளவும் நடக்கவே நடக்காது. என்னை முதலில் எந்த வீட்டிலும் சேர்க்கவேமாட்டார் களே! தெய்வமே!

ஆர்க்காட்டிலிருந்து என்னைத் தேடிக்கொண்டு வந்தவர்கள் நேராக எதிர்வீட்டிலாவது இந்த வீட்டி லாவது நுழைந்திருக்கக் கூடாதா? வர்ணம் தீட்டிய கம்பங்களையும் மாடியழகையும் கண்டு அந்தத் தொப் பையனுடைய வீட்டில் நுழைய வேண்டுமா? அவன் அதுதான் சமயமென்று வஞ்சம் தீர்த்துக்கொண் டான் என்று தெரிகிறது. ஆர்க்காட்டு வியாபாரிகள் அவனைத்தான் நம்புவார்கள்.

முந்தாநேற்று ஆர்க்காட்டிலிருந்து வந்த வளையல்காரன் சொன்னதெல்லாம் உண்மையாக இருந்தால் எல்லாம் தொப்பையன் சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும். "இது தாசி வீடாமே, மெய்தானு" என்று வளையல்காரன் மெல்லக் கேட்டான். "உன் கெட்ட வேளை, நீ வேறு வீட்டுக்குப் போகாமல் இவர்களிடம் அகப்பட வேண்டுமா? சித்தூர் பேர்போனதம்மா. உன்னுல் இவர்கள் பணம் சம்பாதிப்பார்களே அம்மா" என்று திரும்பித் திரும்பிப் பார்த்துப் பேசினுன். வளையல்காரனுக்கு இவ்வளவு கதை எட்டியிருந்தால், தொப்பையன் சொல்லியனுப்பியது எவ்வளவு இருக்கும்?

மாமன் தேடிக்கொண்டு வந்தாராம். வந்தவர் அப்படியே போக வேண்டிய காரணம் என்ன? என் முகத்தைப் பார்க்கவும் மனம் இல்லாமல் அவ்வளவு தவறு செய்துவிட்டேனு?

ஆமாம். அவர்களுக்குப் பெரிய மானக் கேடாகத்தான் இருக்கும். பொதுமகளிரின் கூட்டத்தில் கலந்து வாழும் ஒருத்தியை எப்படித்தான் அணுக மனம் வரும்? யார் பொதுமகளிர்? இங்கே வந்த பிறகு இந்தப் பதினைந்து நாளில் நான் பழகிய ஆண் ஒருவரே. அவரே அம்மையாரின் கணவர். அவரைப் போல் ஒழுங்காக வாழ்கின்ற ஒருவரைப் பார்ப்பதும் அருமையாயிற்றே. நேற்று வந்தாரே திருநாதன். அவரைப் பற்றி மாசு கூற முடியுமா?

இவர்களின் பெருமையை அறியமுடியாத காமுகன் தொப்பையன்; அவன் என் வாழ்க்கையைக் கெடுத்தேவிட்டான். நான் ஆர்க்காட்டுக்குப் போக முடியாதபடி பழி சுமத்திப் பரப்பிவிட்டான். அதுவும் நன்மையாக முடிந்தாலும் முடியும்; பார்ப்பேன்.

"உன்னைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தால் இந்தத் தெருவில் வீடு வீடாய்ப் பார்த்துக் கொண்டே வந்தேன். என்ன அம்மா இப்படி அவசரப் பட்டு வந்தாயே! உன் தலைவிதி! பெரிய குடும்பம்! கைவிட்டுவிட்டாய்! தலைவிதி அம்மா, தலைவிதி" என்று வளையல்காரன் கண்ணீர் விட்டானே! இனி மேல் யாரும் என்னைத் தேடி வரமாட்டார்கள், வந்தாலும் அழைத்துப்போகமாட்டார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் இளங்கோ என்னை மறக்கமாட்டான். என் குணம் உறுதி எல்லாம் அவனுக்குத் தெரியும். அவன் வருவான், அல்லது, நானே பட்டணத்தில் பார்த்தாலும் பார்க்கலாம்.

# மருதப்பன்

மூன்றே நாளில் இவ்வளவு சலிப்புத் தோன்றி விட்டது. இன்னும் நான்கு நாள் இப்படிக் கழிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாதலால் நண்பர்கள் எப்படியோ கூடிவிடுவார்கள். இல்லையானாலும் இளங்கோ ஒருவனாவது என்னோடு நாள் முழுதும் இருப்பான். ஆனால், மற்றநாட்களை எப்படிக் கழிப்பது?

வேப்பேரிக்குப் போய் இளங்கோவின் வீட்டிலேயே இந்த நான்கு நாட்களும் கழித்துவந்தால் என்ன? அங்கே அவனுடைய தாய் சொல்லும் குறைகளைக் கேட்பதற்கே பொழுது இல்லாமல் போய்விடும். குறை தீரப் போனால் பெருங் குறை வந்து நிற்கும். அவனுக்குத் திருமணமான பிறகு அவனும் அவனுடைய மனைவியுமாக வாழும்போது போகலாம். அந்த வாழ்க்கை வேறு. அது உரிமைவாழ்க்கை. இது மகன் தாயை வழிபடும் அன்புவாழ்க்கை.

நேற்று, புதிய கருத்துக்கள் அமைந்த பாட்டுக்கள் எழுதினேன். அப்படிப்பட்ட பாட்டுக்களை எழுத முடியும் என்று நானே நம்ப முடியவில்லை. இன்று என்னை அறியாமல் ஒரு கதை மனத்தில் உருவாகிக்

கொண்டுவருகிறது. இன்று பொழுது போவதற்குள் இந்தக் கதை முற்றுப் பெறும். இரண்டையும் 'தென்றல்' வார மலரில் வெளியிட வேண்டும். பாட்டை என் பெயரால்தான் வெளியிட வேண்டும். கதையை அவளுடைய பெயரால் வெளியிடவேண்டும்.

அவள் வீட்டிலிருந்தால் நேற்றுப் பாட்டு வந்திருக்காது. இன்று கதையும் வராது. அவளுடைய பேச்சும் நடையும் பார்வையும் அவ்வப்போது புதுமை விருந்து அளித்துக்கொண் டிருக்கும். கற்பனை யுலகம் என் வீடாகவே விளங்கும்போது, எனக்கு வேறு கற்பனை எதற்காக? உயிருள்ள புதுமையின் முன்னே பாட்டும் கதையும் இடம்பெற முடியுமா? சூரியன் இல்லாதபோது, வானம் இருண்டு விளங்கும்போது, நட்சத்திரங்கள் மினுக் மினுக்கென்று ஒளிவிடலாம். அவளுடைய குன்றாத புதுமை ஒளி இல்லாத போது, என் இருண்ட உள்ளத்தில் பாட்டும் கதையும் ஒளி வீசுகின்றன.

"செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி" என்று அந்தப் புலவர் பாடினாரே, அதுவும் என்னைப் போல மனைவியைப் பிரிந்து எண்ணிக்கொண் டிருந்தபோது பாடிய பாட்டாக இருக்க வேண்டும். பாலைத்திணைப் பாட்டெல்லாம் அப்படிப்பட்ட மனத்தில்தான் பிறந்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால், புலவர்கள் இந்த வாழ்க்கையை நன்றாகக் கண்டவர்கள் என்றுதான் விளங்குகிறது.

ஆங்கிலம் முதலான மொழிகளிலும் காதலியை இழந்த புலவர்களும், பிரிந்த புலவர்களும் விழுப்பமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். டாண்டே, கீட்ஸ் முத லானவர்கள் அப்படித்தான். வே
சிறந்த பாட்டுக்களுக்குக் காரண

Dr.TPM.Lib.MKU
67337
RACK : C124:2
67337
O31:3N12:11

யைப் பெற முடியாத ஏமாற்றம் என்று சொல்லு கிறார்கள்.

ஆகவே, வாழ்க்கையில் ஒரு சூரியன் வேண்டும். அந்தச் சூரியன் அடிக்கடி மறைய வேண்டும். அப்போது விண்மீன்கள் தோன்றி ஒளிவிட வேண்டும். உள்ளத்தில் பகலாக இருந்தால் காதல்; இரவாக இருந்தால் காவியம். இப்போது என் உள்ளத்திற்கு இராக் காலமோ!

என்னைவிடக் காதல் குறைந்தவள் என்று அவளைப் பற்றி எண்ணியிருந்தேன். அது தவறுதான். அன்று காலையிலிருந்து மாலை வரைக்கும் முப்பது முறை என்னிடம் வந்தாள். முப்பது முறை மேசைமேல் இரண்டு கைகளையும் ஊன்றிக்கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டு நின்றாள். இரண்டுமுறைதான் "போய்விட்டு வரட்டுமா?" என்றாள். சமையலறையில் இருக்கும் போது அடிக்கடி அதை விட்டு என்னுடைய அறையை நோக்கி வந்து வந்து போனாள். "ஒரு வாரம் பிரிந்திருக்கப் போகிறோம்" என்ற உணர்வு அவளை அப்படி அலைத்திருக்கிறது. வாயினால் சொல்ல முடியாத உணர்வு மிகுதிதான் காரணம்.

நான் எங்காவது ஊருக்குப் போவதாக இருந்தால், யந்திரம் போல் கடமைகளைச் செய்துவிட்டுச் சொல்லாமல் நகர்ந்துவிடுகிறேன். அவளால் அது முடியவில்லை. பெண்மனம் பேதை மனம். அன்று குழந்தையிடமும் அவள் அதிகமாகக் கொஞ்சவில்லை. காரணம் இல்லாமல் அடிக்கடி என் மேசைப் பக்கம் வந்து நின்றாள். சும்மா நிற்காமல் கைகளை மேசை மேல் ஊன்றிக்கொண்டு என்னைப் பார்த்துக்கொண்டே நின்றாள். ஐம்பது அறுபது முறை நின்றிருப்பாள். அப்போது அவளுடைய மனத்தை உணர்ந்துதெரிந்து

கொள்ளாமல் இருந்தேன்.

விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிக்கொண்டு போகிறது. ஆனாலும் பயன் இல்லை. மனத்தில் தோன்றும் துன்ப அலைகளையும் இன்ப அலைகளையும் அளந்து கூறும் ஒரு கருவியை இன்னும் கண்டு பிடிக்கவேயில்லை; கண்டுபிடிக்க வேண்டும் என்ற முயற்சியும் காணோம்.

எழும்பூர் ரயில்நிலையத்தில் கால் வைத்தவுடனே என்னைப் பார்ப்பதையும் விட்டுவிட்டாள். ரயிலில் உட்கார்ந்த பிறகு, "அப்பாவுக்குச் சொல்லு. வணக்கம் சொல்லு" என்று குழந்தையிடம் பேசிக்கொண்டிருந்தாளே தவிர, என்னிடம் ஒன்றுமே பேசவில்லை. அந்தப் பையன் அவளிடம் இருக்காமல், வெளியே நின்றுகொண்டிருந்த என்னிடம் வந்துசேர்ந்தான். தூக்கிக்கொண்டு அம்மாவைக் காட்டச்சொன்னான். அவனுக்கு இந்தக் கவலை கொஞ்சமும் இல்லை. அவன் குழந்தை. அழத் தெரியும். அதன் மூலமாக அப்பாவையும் அம்மாவையும் ஆட்டிவைக்கத் தெரியும். வேலை வாங்கத் தெரியும். சிரிக்கத் தெரியும். எங்களையும் சிரிக்கவைக்கத் தெரியும். இவ்வளவுதான்.

குழந்தையை அவளிடம் கொடுக்கப் போனபோது கண்ணைத் துடைத்துக்கொண்டிருந்தாள். குதிரை வண்டியில் வந்தபோது ஏதோ தூசு விழுந்துவிட்டது என்று பொய்யும் சொன்னாள். ரயில் நகர்ந்தபோது உண்மை விளங்கிவிட்டது. முத்து முத்தாய்க் கண்ணீர் விட்டாள். நான் மூச்சை இழுத்துப் பிடித்து அடக்கிக்கொண்டு கண்ணீரை ஒரு பாதி தடுத்து விட்டு வெளியே வந்து சேர்ந்தேன்.

இதற்குமுன் இப்படிப்பட்ட காட்சியைக் கண்டதே இல்லை. தாய்வீட்டிலிருந்து வரும்போது கண்ணீர்

கலங்கி அழுது வருவாள்; 'அடி பைத்தியமே' என்று சொல்லித் திட்டிக்கொண்டு அழைத்துவருவேன். இங்கிருந்து தாய்வீட்டுக்குப் போவதென்ருல் ஆனந்த மாய்ப் புறப்படுவாள். இப்போது ஏடு திரும்பிவிட் டது. அங்கிருந்து வரும்போது ஆனந்தமாக வரு கிருள். இங்கிருந்து போகும்போது கலங்குகிருள்; என்னையும் கலங்கவைக்கிருள்.

நான்கு ஆண்டுகளில் இந்த மாறுதல் ஏற்பட்டு விட்டது. மணப்பந்தலில் உட்கார்ந்தபோது காதலும் இல்லை, களிமண்ணும் இல்லை. "எப்படியோ ஏமாந்து விட்டேனே! காதலைப் பற்றிக் கணக்கற்ற புத்தகங் கள் கற்றேன். கடைசியில் பொம்மைக் கலியாணத் திற்கு ஆளாகிவிட்டேன்; ஏமாந்தேன்" என்று எண் ணிக்கொண்டே அவள்கழுத்தில் கயிறு கட்டினேன். ஒரு கயிறு அந்த நாளில் எனக்கும் அவளுக்கும் இடையே இருந்தது. உலகத்திற்கு அஞ்சி வாழ்க்கை யைத் தொடங்கினேம். அம்மாவும் அத்தானும் காரண மாக இருந்து திருமணம் முடித்தார்கள்.

இப்போது அந்தக் கயிற்றை நான் நினைப்பதே இல்லை, அவள் நினைக்கிருளோ என்னவோ தெரி யாது. ஆனல் இன்று எனக்கும் அவளுக்கும் இடை யில் இருப்பவன் அருள் — என் மகன் — அவ ளுடைய குழந்தை — எங்கள் உயிர்.

காதலர்களால் அன்பான குழந்தை வாழ்கிறது. இது ஏட்டு உலகம். அன்பான குழந்தையால் காதல் வாழ்கின்றது. இது எங்கள் உலகம்.

இந்த ரேடியோ இன்று கேட்பாரற்றுக் கிடக் கிறது. குழந்தை இருந்தால் இதை நூறு முறை திருப்பச் சொல்வான். நான் திருப்பாமல் இருந்தால் அவனுடைய சிறு கைகளால், விரல்கொழுந்துகளால்

ஆனவரைக்கும் முறுக்கிவிடுவான்.

முந்தா நேற்று மாலை, 'தென்றல்'லிலிருந்து வீட்டுக்கு வந்தபோது பக்கத்துத் தெருவில் 'அப்பா' என்ற ஒலிகேட்டு அப்படியே நின்றுவிட்டேன். சுற்றிப் பார்த்தேன். நான் எதிர்பார்த்த உருவம் இல்லை. ஆனால் அதுவும் ஒரு குழந்தைதான். 'அப்பா' என்று தான் அழைத்தது. ஆனால் என் கண் எதிர்பார்த்த உருவம் அல்ல என்று தெரிந்ததும், என் நெஞ்சே பிளந்தாற் போல் ஆய்விட்டது. ஏதோ ஒரு நடுக்கம் இதயத்தில் காணப்பட்டது. உடல் வன்மையில் பாதிக்குமேல் — முக்கால் பங்கும் — திடீரெனப் போய் விட்டாற் போல் ஆய்விட்டது. எலும்புருவம் நடப்பது போல் நடந்து வந்து வீட்டுக் கதவைத் திறந்தேன்.

அதுவும் ஒரு குழந்தைதானே! அந்தக் குரலைக் கேட்டு ஏன் மகிழ்ச்சி அடையக் கூடாது? திருமணத்திற்கு முன்னே எந்தக் குழந்தையின் பேச்சையும் கேட்டு இன்புற்றேன் அல்லவா? இந்தப் பையன் என் மனத்தைக் கொள்ளை கொண்டபிறகு, மற்றக் குழந்தைகளிடம் மனம் செல்லவில்லை. குடும்ப வாழ்க்கை தன்னலத்தை வளர்த்துவிட்டதா? 'அப்பா' என்ற அந்தத் தெருக்குழந்தையை மறுபடியும் பார்ப்பதாக நினைத்தாலும் நெஞ்சம் பகீர் என்கிறதே!

என் குழந்தை தவிர வேறு குழந்தையைக் கண்டாலும் குரல் கேட்டாலும் ஆறுதல் இல்லை, பொழுது போக்கும் இல்லை. என் குழந்தை வீட்டில் இருக்கும் போது மற்றக் குழந்தையோடு ஓரளவு கொஞ்சவும் முடிகிறது. ஆனால் என் குழந்தை வெளியூர்க்குப் போயிருக்கும்போது மற்றக் குழந்தையைக் கண்ணால் கண்டாலும் துன்பம் அல்லவா தோன்றுகிறது? மற்றக்

குழந்தையோடு பழகவும் மனமில்லையே !

இதுதான் தூய்மையான அன்பா? அப்படியானல் காதலும் தூய்மையான அன்புதானே! காதலில் இந்தக் கணக்கு இல்லையா ? அவள் வீட்டில் இருக்கும் போது மற்றப் பெண்களைப் பற்றி மனம் எண்ணுவதே இல்லை; பார்த்தாலும் உடனே என் கடமைகளைச் செய்துகொண்டு மறந்துவிடுகின்றேன். ஆனல் அவள் ஊருக்குப் போயிருக்கும்போது கண் மற்றப் பெண்களைப் பார்க்க விரும்புகின்றது; மனமும் நாட விரும்புகிறது. மற்றப் பெண்களின் பேச்சைக் கேட்பதில் பொழுதுபோக்கும் இருக்கின்றது. தவிர முன் ஒருமுறை எல்லை கடந்து போய்விடவும் இருந்தேன். எப்படியோ நெருக்கடியிலிருந்து தப்பி வந்துவிட்டேன். ஆனல் நேற்று இரண்டாவது அனுபவம். அந்தப்பெண் என் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டாளே. ஏதோ நாகரிகம் என்று ஒன்று இருக்கின்றதே. அதுதான் காப்பாற்றியதோ, அல்லது துணைவி மேல் நாளுக்கு நாள் வளர்ந்த காதல்தான் என்னைக் காப்பாற்றியதோ, தெரியவில்லை. சே ! அதை மறுபடியும் நினைக்கக் கூடாது.

இத்தனைக்கும் இடையில் துணைவியின் நினைவும் அடிக்கடி வருகிறது. இப்படி மற்றப் பெண்களின் நினைவும் துணைவியின் நினைவும் மாறிமாறி வருமானல் இது தூய்மையான காதலா ? குழந்தையைப் பொறுத்த வரையில் அந்தத் தூய்மையான அன்பே உள்ளத்தை நிரப்பிக்கொண்டிருக்கிறதே ! மற்றக் குழந்தைகளுக்கு என் உள்ளத்தில் இடமே இல்லையே!

ஒருகால் இப்படி இருக்கலாம். குழந்தைமேல் அன்பு முழுமை அடைந்துவிட்டது. ஆனல் என் காதல் இன்னும் முழுமை அடையா திருக்கலாம்.

அதனால்தான் நேற்று மாலை அந்தப் பெண்ணைக் கண்டு உடன்சென்றபோது மனம் அப்படி நெகிழ்ந்து உருகியது. இது காதலின் குறையா?

துணைவியிடம எள்ளளவும் அன்பு குறைவு என்று சொல்ல முடியாதே! ஆனாலும் அந்தப் பெண்ணைக் கண்டது முதல் இரண்டுமணி நேரம் துணைவியை மறந்துவிட்டேன்; துறந்துவிட்டேன் என்றும் சொல்லலாம். இந்தக் கதையே மறுபடியும் வந்து விட்டதா? சே—வேண்டா.

துணைவி என்னை விரும்புவதைவிட மிகுதியாக நான் அவளை விரும்பி வாழ்ந்துவருகிறேன். இது உண்மையான காதல்தான். அவள் வீட்டில் இல்லாத காரணத்தால் என் வாழ்க்கையே பாலைவனம் போல் ஆகிவிட்டதே. இதுவே நல்ல சான்று அல்லவா? தவிர, நேற்று அந்தப் பெட்டிக் கடையருகே போய்க் காசையும் கையில் எடுத்துக்கொண்டேன். சிகரெட் வாங்கப் போனவன் அங்கே பக்கத்து வீட்டுக்காரரைப் பார்த்துவிட்டு நெருப்புப் பெட்டி ஒன்று கேட்டு வாங்கி வந்தேன். இரண்டு ஆண்டுகளாகச் சிகரெட் மறந்திருந்த நான், என் சோர்வைப் போக்குவதற்காக மறுபடியும் அந்தப் பழக்கத்தை மேற்கொள்ளத் துணிந்தேன். அதையும் விட்டு நிலையத்திற்குச் சென்றால், ஆசிரியர் பொடி போடும்போதெல்லாம் பொடியாவது கேட்கலாமா என்று எண்ணினேன். எட்டு முறை காப்பி குடித்தும் எள்ளளவும் சோர்வு போகவில்லை. என் காதல் உண்மையானது என்பதற்கு இவ்வளவு போதாதா?

இப்படியே எண்ணிக்கொண்டிருந்தபோது மணி எட்டு அடித்தது. எழுந்து ஓட்டலுக்குச் சென்றேன். கூலித் தொழிற்சாலையைவிட ஓட்டல் எந்த

வகையிலும் குறைந்தது அல்ல. சூளைத் தொழிற்சாலையில் யந்திரங்களும் மனிதர்களும் கலந்து வாழ்கிறார்கள். இங்கும் அப்படித்தான். ஆனால் ஓட்டலில் பரிமாறுகிற ஆட்களெல்லாம் யந்திரங்களாக மாறிவிட்டிருக்கிறார்கள். அந்த யந்திரங்கள வருகின்றன; "எல்லாம் சூடாக இருக்கிறது; என்ன வேண்டும்" என்று ஒரே மந்திரத்தை ஓதுகின்றன. பிறகு நேராகப் போகின்றன. நேராக வருகின்றன. மேசைப்பக்கத்தில் நின்றதும் கைகளை நீட்டுகின்றன; தட்டுகள் வெளியே வருகின்றன. அவற்றில் சிற்றுண்டி காண்கின்றோம். சென்ட்ரல் ஸ்டேஷனில் பிளாட்பாரம் டிக்கட் வாங்குவதற்கும் இதற்கும் வேறுபாடு ஒன்றும் தெரியவில்லை. போதும், போதும்! மூன்று நாளில் சலித்துவிட்டேன். யாராவது நண்பரை அழைத்துக்கொண்டு போனாலும் அவரோடு பேசிக்கொண்டே உண்ணலாம். அந்தப் பரிமாறும் யந்திரங்களை மறந்துவிடலாம். நுங்கம்பாக்கத்தில் நான் நிலையாக இருந்தும் இங்கே எனக்கு நண்பர் ஒருவரும் இல்லை. நண்பர்கள் வேப்பேரியிலும் தியாகராயநகரிலும் இருக்கின்றார்கள். இதுவும் ஒரு வகை நாகரிகம்; தெருவில் உள்ளவர்களைத் தெரிந்துகொள்ளாமல் அயலூரில் உறவாடுவதும் ஒரு நாகரிகம்!

எதிர்காலத்தில் வாழ்க்கையே யந்திர மயமாக மாறிவிடுமா? எல்லாம் சூளைதானா? வாய்க்கு எவ்வளவு சுவை கொடுத்தாலும் ஓட்டல் வாழ்க்கை மனத்திற்குச் சுவையாக இல்லையே! காதல் இல்லாத குடும்பங்களும் இப்படித்தானோ! உடம்பு என்னும் அளவில் இன்பமும், உள்ளம் என்னும் அளவில் துன்பமும் இருக்குமோ?

சூளைத் தொழிற்சாலையில் கொடுமை! மனிதன்

இரும்போடும் பஞ்சோடும் பழக வேண்டும். ஆனால் ஓட்டல் தொழிலாளிகள் உணவுப் பொருளோடும் உண்ணும் மனிதர்களோடும் பழகுகிறார்கள். உண்கின்ற மனிதர்கள் பலர் பலவகையாகப் பல இடங்களிலிருந்து பல்வகைப் பேச்சும் பலவகை எண்ணமும் உடையவர்களாய் வருகிறார்கள். ஆகையால் ஓட்டல் தொழிலாளியின் வாழ்வு பள்ளிக்கூட ஆசிரியர் வாழ்வு போல் நல்ல வாழ்வுதான்.

சிற்றுண்டி முடிந்ததும் பழையபடி வீடும், அந்த வெறுமையான அறையும், உயிரற்ற ரேடியோவும் வந்து சேர்ந்தன. நாற்காலியில் சாய்ந்துகொண்டே காலைச் செய்தித்தாளைப் பிரித்துப் பார்த்தேன். பழைய படி அங்கங்கே நடக்கும் குழப்பங்கள் கொட்டை எழுத்துக்களில் இருந்தன. மேடையில் மார்தட்டிப் பேசும் பேச்சுக்களுக்கும் எதிர்க்கட்சியாரைத் தாக்கும் தாக்குதல்களுக்கும் நிறைய இடம் தந்திருந்தார்கள். இந்தப் பத்திரிகையுலகமும் யந்திரம் போல் ஆகிவிட்டது என்று வெறுப்போடு மேசைமேல் எறிந்தேன்.

இந்தப் புறமாகத் திரும்பிக் கையை நீட்டித் திமிர் விட்டேன். இப்புறம் நீண்டு சென்ற கை என்னை அறியாமல் ரேடியோவைத் திருப்பிவிட்டது. திருச்சி நிலையத்தில் பாட்டு அந்த நிகழ்ச்சி. இசைக்கருவியாக ஆர்மோனியம் கேட்டது. இந்த ஆர்மோனியம் என் வீட்டில் நுழையக் கூடாது என்று அவளுக்குத் தடையுத்தரவு பிறப்பித்த ஆட்சிமுறை நினைவுக்கு வந்தது. பெருமூச்சு விட்டேன். பாரதியாரை நினைத்தேன். அவரால் நான் கெட்டதாக எண்ணினேன். என்னுடைய ஆட்சியின் கொடுமையை எல்லாம் எப்படியோ மறந்துவிட்டாள், எனக்காகக் கண்ணீர் விடுகின்றாள், எனக்காக வாழ்கின்றாள், என்ன அன்பு

என்று உருகினேன்.

"இதுவரையில் பாடியவர்..." என்று அறிவிப்பாளரின் குரல் கேட்டது. போதும், போதும் என்று ரேடியோவைத் திருப்பி நிறுத்திவிட்டேன். அகநானூற்றையாவது படிக்கலாம் என்று அந்தப் புத்தகத்தை எடுத்து அப்படியே திறந்தேன்.

**ஆதி மருதி போலப் பேதுற்று**
**இனைவேன் கொல்லோ**

என்ற அடிகள் என் கண் எதிரே இருந்தன. ஆதி மருதி பைத்தியமானதை எண்ணினேன்.

காதல் முறிந்தால் அறிவே முறிந்துபோகின்றது; பைத்தியம் பிடிக்கின்றது. உள்ளம் கெட்டு உணர்வு கெட்டு உடலும் கெடுகின்றது. காதலுக்கு இவ்வளவு ஆற்றலா? ஆம். மேனாட்டுக் கதையிலும் ஒபீலியா (*Ophelia*) அப்படித்தானே ஆனாள்? காதல் முறிவு பைத்தியம்; நெய்தல் திணை என்றால் வாழ்வின் முடிவு. காதலுக்கு இவ்வளவு ஆற்றலா?

குழந்தையன்பு முறிவதில்லையா? குழந்தை இறந்தபின் வாழும் தாய் தந்தையர் உலகத்தில் கோடிக்கணக்கானவர்கள் இருக்கிறார்களே! அவர்களுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையே!

குழந்தையன்பு முறிந்தால் உள்ளம் கெடுவதில்லை. உணர்வு கெடுவதில்லை; உடல் கெடுவதில்லை. உள்ளத்தில் சிறு மாறுதல் நிகழ்கின்றது; சில நாட்களே அந்த மாறுதல். பிறகு பழையபடி அந்த உள்ளம், உணர்வு, உடல் எல்லாம் வாழ்கின்றன. மூளை கெட்டு அறிவு திரிவதில்லை.

குழந்தையன்பு, வாழ்க்கையில் சிறு பகுதியையே கவர்கின்றது. காதல், வாழ்க்கை முழுதும் கவர்கின்றது. குழந்தைமேல் செலுத்தும் அன்புணர்வு உள்

ளத்தில் ஓர் ஊற்று. காதல் உணர்வோ உள்ளக்கடல். ஊற்று வறண்டால் சிறிய புரட்சி; கடல் புரண்டால் பெரிய அழிவு.

குழந்தையால் வரும் இன்பமும் துன்பமும் கண்ணளவில், காதளவில். பெரும்பாலும் இவ்வளவு தான். ஆனால், காதலால் வரும் இன்பமும் துன்பமும் உடல், உள்ளம், உயிர் எல்லாம் கொள்வன.

குளிர்காலத்தில் நாக்களவில் நிற்கும் நீர்வேட்கையும் வேறுதான்; வேனிற் காலத்தில் உடல், உளளம், உயிர் எல்லாம் குளிர விரும்பும் நீர்வேட்கையும வேறு தான். ஒரு குவளைத் தண்ணீர் எங்கே? ஒரு பெரும் பொய்கை எங்கே?

உடல், உடல், உடல் — இதுதான் என்னைக் கெடுப்பது, மயக்குவது! நேற்று மாலை என் காதலைக் குறைபடச் செய்தது உடல், உடல், உடல்.

உள்ளம் காதலை வழிபடுகின்றது; உயிர் காதலைத் தொழுகின்றது. ஆனால் உடல் சில வேளைகளில் காதலைப் புறக்கணிக்கின்றது. உள்ளம் காதலையே வேண்டுகின்றது; துணைவியை மறந்துவிடுகினறது; துறந்துவிடவும் தூண்டுகின்றது. உடலைக் கடந்து உணர வேண்டும்; அதுவோ ஆவதில்லை. உடல் உளளத்திற்கு அடிமையாக வேண்டும்; அது எந்தக் காலத்தில் கைகூடுவது? நேற்று என்ன துடி துடித்தது இந்த உடம்பு! நான்கு ஆண்டுகள் வாழ்ந்த அருமையான வாழ்வை மறந்து — !

சே! நினைக்கக் கூடாது என்றால் அந்த நினைவே மறுபடியும் மறுபடியும் வந்து சேர்கிறது. எண்ணித் தான்பார்த்துவிடுவோம், இல்லையானால்விடாது போல் தெரிகிறது.

குரங்குக் கதை — நல்ல கதை அது. மருந்து

கொடுத்த வைத்தியன் சரியான பத்தியம் சொன்ஞன். குரங்கை நினைக்காமல் இருப்பதுதான் பத்தியம் என்று சொன்ஞனும். அந்த நோயாளி என்ன செய்வான், அய்யோ! அப்போதிருந்தே குரங்குநினைவே வந்து கொண்டிருந்ததாம். எவ்வளவு தடுத்தாலும் முடிய வில்லையாம். மரத்தைப் பார்த்தால் அங்கே குரங்கு இருப்பது போன்ற பாவனை ஏற்பட்டதாம். ஓட்டைப் பார்த்தால் இங்கெல்லாம் குரங்கு ஓடுமல்லவா என்ற நினைவு வந்ததாம். கிணற்றைப் பார்த்தால் இங்கே குரங்கு வந்தால் எட்டிப்பார்க்கும் அல்லவா என்ற எண்ணம் வந்ததாம். வாசலில் உலர்த்தின கடலை யைப் பார்த்தால் குரங்கு வந்தால் இதை வாரிக் கொண்டுபோகுமே என்று நினைவு வந்ததாம். குழந்தை யைப் பார்த்தால் குரங்கு ஒவ்வொரு வேளை இப்படித் தான் நிற்பதுண்டு என்று எண்ணம் வந்ததாம். எதி ரில் இருந்த இராமர் படத்தைப் பார்த்தால் ஒரு குரங்குதான் இவருக்கு அவ்வளவு பெரிய உதவிசெய் தது என்று எண்ணம் வந்ததாம். எதையும் பார்க்கா மல் கண்ணை மூடிக்கொண்டால், அக்கண்ணின் எதிரே குரங்கு மயமான கூட்டம் தோன்றியதாம். கடைசியாக எழுந்து அந்த வைத்தியரிடம் போய், "அய்யா, வைத்தியரே! என்ஞல் அந்தப் பத்தியம் இருக்க முடியாது. வயிற்றுநோய் தீராவிட்டாலும் போகட்டும்; பத்திய முறிவு வேண்டும்" என்று கேட் டாஞம். வைத்தியர் தக்க பதில் சொன்ஞராம். "உனக்கு மனநோய்தான் அதிகம். என்னிடம் வந்து போனது முதல் இதுவரையில் வயிற்று நோயே வர வில்லை அல்லவா? வயிற்றை நினைக்க நேரமில்லாமல், மனம் குரங்கையே நினைத்துக்கொண்டிருந்தது. ஆதலால் வயிற்றுநோய் வரவில்லை. இனிமேல் ஏதா

வது உழைப்பும் படிப்பும் இருந்தால் உன் நோய் போய் விடும். சோம்பல் வாழ்வுதான் உன் மனத்தையும் வயிற்றையும் கெடுத்தது. போ, இனிமேல் உழை" என்று அனுப்பினாராம்.

நல்ல கதை — மனத்தின் ஆற்றலை விளக்கும் கதை. நானும் அப்படித்தான் வேண்டா வேண்டா என்று தள்ளிக்கொண்டே இருந்தாலும் அந்தப் பெண் என் நினைவில் வந்துகொண்டே இருக்கிறாள். எண்ணித்தான் பார்க்கலாம்.

எளிமையிலே விளங்கும் அழகு,' பாலாற்றின் தெளிந்த ஊற்றுப்போல இருக்கக் கண்டேன். நல்ல இளமை, அறிவின் பொலிவு, எழில் மிகுந்த தோற்றம், ஒளி பெற்ற கண்கள். மென்மையான உடல் வளம் செல்வாக்காக வாழ்ந்த வாழ்வைக் காட்டியது. ஆனால் அணிந்த எளிய உடை வறுமையையே காட்டியது. அந்தக் கண்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. நான் தொட்ட அந்தக் கைம்மலர் என் உயிரையே கவர்ந்தது. இன்னொரு கையையும் தொடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தால், நான் உயிரோடு மீண்டு வந்திருக்க மாட்டேன்.

அந்த எழிலுருவம் எப்படி வழி தவறி வந்ததோ, தெரியவில்லை. துணைவி ஊருக்குப் போய் மூன்று நாளாயின என்று சோர்வோடு எண்ணிக்கொண்டே தளர்ந்து வந்து வீட்டெதிரே நின்றேன். திண்ணையில் அந்தத் தெய்வத்தைக் கண்டேன். என் சோர்வெல்லாம் பறந்து போயிற்று. ஆனாலும், எதிர்வீடு பக்கத்து வீடாக இருக்கலாம் என்று ஒன்றும் பேசவில்லை. பேசாமல் கதவைத் திறக்கப் போனபோது, அடக்கத்துடன் அப்புறம் திரும்பக் கண்டேன். தோளில் இரத்தக் கறை காயம் கண்டேன்.

"எந்தத் தெரு அம்மா? எங்கேயோ அடிபட்டாற் போல் தெரிகிறதே! மருந்து கொண்டு வருகிறேன்" என்று உள்ளே போய் மருந்தும் துணியும் கொண்டுவந்து எதிரே நின்றேன். நாணத்தால் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "ஒன்றும் வேண்டாங்க. எல்லாம் ஆறிவிடும். வேண்டா'ங்க. அப்படி ஒன்றும் அடிபடவில்லை" என்றாள். "நீங்கள் எங்கே போக வேண்டும்? எங்கே அடிபட்டீர்கள்?" என்று கேட்டேன். "பட்டணத்துக்கே புதியவள். கோடம்பாக்கத்தில் தெரிந்தவர்களின் வீட்டுக்கு வந்திருக்கிறேன். பக்கத்து வீட்டுக்கார அம்மாவோடு கடைத் தெருவுக்கு வந்தேன். அந்த அம்மா எப்படியோ போய்விட்டார்கள். வழி தவறிவிட்டேன்" என்றாள். "மருந்து போட்டுக்கொள்ளுங்கள். நான் கோடம்பாக்கத்துக்கு வழிகாட்டுகிறேன்" என்று சொல்லி இரக்கத்தோடு பார்த்தேன். கழுத்தில் தாலி இல்லாமை கண்டு திருமணம ஆகாதவள் என்று தெரிந்து கொண்டேன். உடனே இரக்கம் மெல்ல மெல்ல அன்பாக மாறியது. என்னை அறியாமல் என் உள்ளத்தில் ஒருவகை மயக்கம் மெல்லக் குடிகொண்டது. உடலில் நரம்புதோறும் ஒருவகை நடுக்கம் எழுந்தது. இதயம் பறையடித்தது. சுற்றிப் பார்த்தேன். ஒருவரும் இல்லை. எதிரே இருந்த நான் தோள்பக்கமாக வந்து உட்கார்ந்து, "மருந்து போடட்டுமா, அம்மா?" என்றேன். பதில் இல்லாதது கண்டு, "எங்கே விழுந்தீர்கள்?" என்றேன்.

"யாரோ சைக்கிலில் வேகமாய்ச் சென்றவன் தள்ளிவிட்டான். இந்தக் கையில் சைக்கில் சக்கரம் ஏறியது. கால்விரலில் நல்ல அடி பட்டது. அந்த ஓரத்திலிருந்து இந்த ஓரத்திற்குத் திரும்பி அந்த

வழியாகப் போகலாம் என்று வந்தேன். நடந்தால் இரத்தம் பெருகுமே என்று கொஞ்ச நேரம் உட்கார்ந் தேன்" என்று சொல்லிக்கொண்டே இடக்கையை நீட்ட, நான் மருந்தைத் துளித்துளியாக இட்டுத் துணியால் கட்டுக் கட்டினேன். பேச்சே இல்லை. கட்டுக் கட்டியபோது அவளுடைய முகத்தைப் பார்க்க முயன்றேன். முகத்தைப் பார்க்கவில்லை. இரண்டு கண்களின் ஒளியையே கண்டேன். நான் மருந்து விட்டுக் கட்டுக் கட்டியபோது, அந்தக் கண்கள் என் முகத்தையே உற்று நோக்கிக்கொண் டிருந்தன. நான் பார்க்கத் தொடங்கியபோது என் உள்ளத்தை ஒரே மயக்கத்தில் ஆழ்த்துமாறு பார்த்தாள் அவள். உடனே முகத்தைத் திருப்பிக்கொண்டாள். நெற்றியில் அரும்பிய வேர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

கட்டுக் கட்டுவதை முடித்தேன். கைகள் நடுங்கிக்கொண்டே செய்தன. நான் என்னை இழந்தேன். அவளுடைய கை அந்த மருந்து புட்டியை எடுத்தது. காலை நீட்டிப் பெருவிரல்மேல் மருந்துவிடத் தொடங்கினாள். அவள்கையிலிருந்து அந்தப் புட்டியை நானே வாங்கிக்கொண்டேன். அந்த மெல்லிய கை என் கையைத் தடுத்தது; என் உடம்பில் ஒரு புத்துணர்ச்சி பரவியது. என்னைப் பார்ப்பதும் திரும்புவதுமாக இருந்தாள் என்று தெரிந்தது. மெல்லிய பெருமூச்சு அவள் விட, நானும் விட, பேச்சற்று மருந்து விட்டு முடிந்த பிறகு வீட்டினுள் நுழைந்தேன். உள்ளே வருமாறு அழைக்கலாமா என்று எண்ணினேன். "இங்கே வா'ங்க" 'என்ற சொற்கள் தொண்டை வரையில் வந்து நின்றன. நா எழவில்லை. அந்த வீட்டில் நடந்து திரிந்து வாழ்வைத் தந்த மெல்லிய கால்களை நினைத்தேன். என் உள்ளமும் உயிரும்

அந்த ஒருத்திக்குத்தானே; அவளுடைய வீடு இது என்று எண்ணினேன். கூடத்தின் கம்பத்தை இரு கையாலும் பற்றிக்கொண்டு நின்றேன். உடனே கம்பத்தின்மேல் சாய்ந்தேன். அழைக்க நா எழவில்லை. அவளாக வந்துவிட்டிருந்தால் அந்த நாவை வென்று விட்டிருப்பேன். நடுங்கிக்கொண்டே இரு கையாலும் வரவேற்றிருப்பேன். ஆனால்—.

திடீரென்று தூணின்மேலே இருந்த ஒரு பல்லி சொல்லியது. திடுக்கிட்டேன். யாரும் இல்லை என்று எண்ணிவிட்ட எனக்கு அந்தப் பல்லி, தான் இருப்பதை உணர்த்தியது. அங்கே சுவரில் 'அருள்' என்று எழுதிய எழுத்துக்களைக் கண்டேன். மகன் பெயர் அது. துணைவியின் கையெழுத்து அது. அதன் மேல்தான் எங்கள் குழந்தை இரண்டு வயதாக இருந்த போது நிற்கவைத்து எடுத்த நிழற்படம் மாட்டியிருந்தது. அந்தப் படத்தில் அவன் மட்டும் இருக்கிறான். நானும் அவளும் இல்லை. நானும் அவளும் அந்த மேசை எதிரே உள்ள படத்தில் இருக்கிறோம். அந்த மேசையில்தான் அவள் கைகளை ஊன்றிக்கொண்டு முப்பது முறை — ஒருநாளில் முப்பது முறை — வந்து நின்றாள். நாற்காலியில் இருந்த என்னைப் பார்த்தாளோ, படத்தில் இருந்த என்னைப் பார்த்தாளோ, தெரியவில்லை.

தூணை விட்டேன். பூட்டைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன். அதற்குள் அவளும் எழுந்து நின்றுகொண்டிருக்கக் கண்டேன். கதவைச் சாத்திப் பூட்டிவிட்டு, "வாங்க அம்மா, போகலாம்" என்றேன்.

கோடம்பாக்கத்தை நோக்கி நடந்தேன். நான் முன்னே சென்றேன். அவள் பின்னே வந்தாள். சிறிது

தூரம் அடி எடுத்து வைத்ததும் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னையே நோக்கிக்கொண்டு தொடர்ந்து வந்தமையால், என் கண்கள் அவளுடைய பார்வையில் சிக்கின. சிறிது தூரம் சென்றதும் மறுபடியும் பார்க்க விரும்பினேன். முன்னே போகச்சொல்வதற்கோ காரணம் இல்லை. "எந்தத் தெரு?" என்று கேட்டுத் திரும்பினேன். அதைக் கேட்டவுடன் தலையைக் குனிந்துகொண்டு, "தெருப்பெயர் தெரியாது. வீட்டு எண் தான் தெரியும், 31" என்ருள். மறுபடியும் திரும்பிப் பார்த்தேன். அந்தக் கண்கள் ஆவலோடு என்னை நோக்கின. "தெரு அடையாளம் சொல்ல முடியுமா?" என்று கேட்டுக்கொண்டு அங்கே நின்றேன். "ஒரு கோடியில் மாரியம்மன் கோவில் இருக்கும். அதன் பக்கத்தில் இரண்டு மாடி வீடுகள் கோபி தீட்டியிருக்கும்" என்று சொல்லிக்கொண்டே மெல்ல வந்தாள். அங்கே இருந்த பூங்காவைக் காட்டி, "இங்கே கொஞ்ச நேரம் உட்காரலாமா?" என்றேன். "கால் நோகவில்லை" என்ருள்.

அப்புறம் என்ன பேசுவது, என்ன கேட்பதுஎன்று தெரியவில்லை, நடந்தேன். ஆனால், வேகமாக நடக்க மனம் இல்லை. கோடம்பாக்கம் நெருங்க நெருங்க எதையோ பெற முடியாத பொருளைப் பெற்று இழந்து விடுவது போல் தோன்றியது. திரும்பித் திரும்பிப் பார்த்தேன். அவள்கண்களும் என் கண்களும் பேசின. நானும் நின்றேன். அவளும் நின்ருள். நெஞ்சம் படபட என்றடித்தது. வீட்டிலேயே இருக்கச் செய்யாமல் போனேமே என்று வாதாடியது. எதிரில் யாரோ வந்தார்கள். "உலகம் என்ன சொல்லும்? தவருன வழி அல்லவா?" என்ற எண்ணம் ஒரு பக்கம் சுட்டது. எதிரில் வந்தவர்களை மாரியம்மன் கோவில் முதலான

அடையாளங்களைக் கேட்டுப் பார்த்தேன். அப்படி இரண்டு தெரு இருப்பதாகப் பெயர் சொன்னார்கள். மேலும் நடந்தேன்.

திரும்பிப் பார்த்தேன். அவள் ஒருவனோடு பேசிக் கொண்டு வருவது போல் கண்டேன். நின்றேன். பேச்சு இல்லை. அவன் என்னைப் பார்த்து, "ரொம்ப நன்றி. இனிமேல் நான் அழைத்துக்கொண்டு போவேன்" என்றான். "இப்படியும் ஒருவன் இருப்பானா? இரண்டு வாக்கியத்தில் என் கனவை எல்லாம் சிதறச் செய்து விட்டானே?" என்று எண்ணித் திடுக்கிட்டாற் போல் நின்றேன். அவனுக்கு, நான் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை; அவன் வணக்கம் செய்துவிட்டு நடந்தான்.

அந்த நங்கையின் அன்புக்கு எல்லை காணவில்லை; அவள் தன் கைகளைக் கூப்பிக் கண்ணீர் விட்டாள். விரல்கள் நடுங்குவதைக் கண்டேன். "போய்விட்டு வா அம்மா" என்று நாக் குழறிக்கொண்டே சொன்னேன். அவள் நடந்தாள். கால்கள் ஒன்றோடு ஒன்று பின்னினாற் போல் தளர்ந்து நடந்தாள். நொடிக்கு ஒரு முறை திருபித் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வையில் காதலின் கனிவும் கண்டேன; ஏமாற்றத்தின் ஏக்கமும் கண்டேன். நெடுந்தூரம் சென்று விட்டாள். நான் நடப்பது போல் நகர்ந்தேன்.

மணி ஒன்று அடித்தது. கடிகாரத்தைப் பார்த்தேன். ஒன்பதரை ஆகியிருந்தது. 'தென்ற' லுக்குப் புறப்பட உடுத்திக்கொள்ளத் தொடங்கினேன்.

திடீரென்று பெருங்காற்று ஒன்று அடித்தது. அந்த முருங்கை மரத்தை நினைத்துக்கொண்டேன். பெருங்காற்றால் கிளைகள் முறிந்துவிடுமே என்று எண்ணிச் சன்னல் வழியாகப் பார்த்தேன். கிளைகள்

இப்படியும் அப்படியும் ஆடிக்கொண் டிருந்தன. "அய்யோ, எந்தக் கிளை எப்படி முறிந்துவிடுமோ? தெரியவில்லையே! இதைவிடச் சுற்றுப்புறத்தார் ஒடித்துக் கொண்டு போவதே நல்லதாகத் தெரிகிறதே. ஒடித்தால் சிறு கொம்புகள் போகும். முறிந்தால் பெருங் கிளைகள் போய்விடுமே" என்ற கவலையோடு முருங்கை மரத்தையே பார்த்துக்கொண் டிருந்தேன். கிளைகள் வடக்கும் தெற்கும் சாய்ந்து, கிழக்கும் மேற்குமாக அசைந்து ஆடுவது என் கவலையை மிகுதியாக்கிற்று. இன்றைக்கு அந்த மரத்தின்வாழ்வு அவ்வளவுதானோ என்று ஏங்கினேன். நல்ல வேளையாகப் பெருங்காற்று நிற்கத் தொடங்கியது; கொஞ்சம் கொஞ்சமாக நின்றது. முருங்கை மரம் முறியவில்லை; தப்பியது.

என் வாழ்க்கை — காதல் வாழ்க்கை — நேற்று முறிந்தாலும் முறிந்துபோ யிருக்கும். அதுவும் ஒரு வகைப் பெருங்காற்றுத்தான். வாழ்க்கையே ஆடிக் கொண் டிருந்தது; இரண்டு மணி நேரம் ஆடியது. என் உடம்பின் நாடி நரம்பெல்லாம் ஆடி ஆடி உள்ளத்தையும் உயிரையும் ஒழிப்பது போல் இருந்தது நிலைமை. எப்படியோ தப்பினேன். இந்த வாழ்க்கை தப்பியது போல்தான் இந்த முருங்கைமரமும் தப்பியது. பெருங் காற்று ஓய்ந்தது. இனி முறியாது.

தென்னை மரத்தைப் போல் கிளையே இல்லாமல் இருக்கக் கூடாதா? இந்த மரத்திற்கு ஏன் நூறு கிளைகளும் ஆயிரம் கொம்புகளும்? இந்தக் கிளைகளாகவும் கொம்புகளாகவும் வளரும் சத்தெல்லாம் அடிமரத்தோடு சேர்ந்து நீண்டு வளர்ந்து செழித்து வயிரம் ஏறியிருக்கக் கூடாதா? அப்படி அடிமரம் ஒன்றே நீண்டு காழ்த்து வளர்ந்திருந்தால் இன்று இந்தப் பெருங்காற்று என்ன செய்ய முடிந்திருக்கும்? அந்தத்

தென்னைமரம் அப்படித்தான் வளர்ந்திருக்கிறது. தன் சத்தையெல்லாம் கிளைகளுக்கும் கொம்புகளுக்கும் செலவழித்திருந்தால், இப்படி உறுதியாக நின்றிருக்க முடியுமா? உயரமாக வளர்ந்திருக்க முடியுமா?

உலக வாழ்க்கை, காதல் வாழ்க்கையை ஓங்கவிடவில்லை. சுற்றுப்புறத்தின் செல்வாக்குப் பெருகப் பெருகக் காதல்வாழ்க்கை உரம்பெற முடியாமல் போகின்றது. உலக வாழ்க்கையில் பெருங் கடமைகள், சிறு கடமைகள், நாகரிகப் பழக்கவழக்கங்கள், சடங்குகள், முறைகள், பற்றுக்கள் எல்லாம் பெருகிப்பெருகிக் காதல் வாழ்வு உரம் பெருதவாறு செய்கின்றன. இத்தனைக்கும் இடம் கொடுத்தும் காதல் வாழ்வு இருக்கின்றது; இன்னும் இருக்கின்றது உலகத்தில். ஓங்க முடியவில்லை; காவியக் காதல் போல் உயர முடியவில்லை. ஆயினும் அழியாமல் தலையெடுத்து நிற்கிறது.

காற்று ஆரவாரம் செய்தபோது இந்தக் கிளிகள் எங்கே இருந்தனவோ தெரியவில்லை. இப்போது பழையபடி வந்துவிட்டன; தென்னைமரத்தைச் சுற்றுகின்றன. ஆனல் இரண்டு கிளிகள் இருந்த மரத்தில் இத்தனை கிளிகள் இருக்கின்றனவே! அவற்றின் குஞ்சுகளோ? அல்ல, அல்ல. மனிதரைப் போல் கிளிகள் குடும்பத்தில் மற்ற உறவுக்கு இடம் தருவதில்லையே. மனிதக் குடும்பத்தில்தான், சமையலறை முதல் மருத்துவமனை வரையில் எல்லாவற்றிற்கும் இடம் கொடுத்து எல்லாருக்கும் இடம் கொடுத்துப் பாழாகும் நிலைமை இருக்கின்றது. கிளிக் குடும்பத்தில் காதல் வாழ்வு, இயற்கையமைதி என்னும் இந்த இரண்டிற்குத்தான் இடம் உண்டு. மனிதன் கட்டிய வீட்டிலும் காதல் கடவுள் இந்த இரண்டிற்குத்தான் இடம்

உண்டு. மற்றவை எப்படியோ நுழைந்துவிட்டன. அறிவாளிகள் இதை உணர்ந்துதான் வீடு என்னும் பெயர் கொடுத்திருக்கின்றார்கள்.

ஆறு கிளிகள் இருக்கின்றன. ஆறு கிளிகள்—மூன்று குடும்பம்—மூன்று இணை. எது எதன் துணையோ தெரியவில்லை; எல்லாம் கலந்து பறப்பதால் பிரித்துத் தெரிந்துகொள்ள முடியவில்லை. பொறுத்துப் பார்ப்போம்; எப்படியும் தெரிந்துவிடும்.

## இளங்கோ

---

கடைசியில் இந்தக் கடிதம் வந்தது. சித்தூரில் தங்கை இல்லை என்று கடிதம் வந்த பிறகு நான் போய்ப் பார்ப்பது எங்கே என்று கவலைப்பட்டுக்கொண் டிருந் தேன். முதல் கடிதம் வந்தவுடனே போயிருந்தால் அப்போதே பார்த்திருக்கலாம். தவறிவிட்டேன். மாதக் கடைசியில் ஆபீஸ் கிளர்க்குக்கு அவ்வளவு ஓய்வு ஏது?

அம்மா சொன்னதுதான் பெருங் கவலையாக இருந் தது. ஆனால் அப்படிப்பட்ட பொய்யைக் கட்டிப் பழி சுமத்தவும் மனம் வருகின்றதே! வேசிவீட்டில் போய் வேசித்தொழில் செய்தாளாம். இப்படிப் பழி சுமத்தி னார்கள் பாவிகள். அதைக் கேட்டுக்கொண்டு அறி வில்லாத அம்மா என்னிடம் சொன்னாள். அவள் தவிர வேறு யாராவது என்னிடம் அப்படிச் சொல்லியிருந் தால் அவர்களை அங்கேயே குத்திக் கொன்றுவிட் டிருப்பேன்.

தங்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் அப்படிச் சொன்னால் கவலை இல்லை. ஆனால் அவளைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள், பல காலம் பழகினவர்

வர்கள் இப்படி நாக்கூசாமல் கூறுவதா? அறியாமை! அறியாமை! நூறுண்டு வாழ்ந்தாலும் இவர்கள் மக்களாக முடியாது. தாமரைப் பூவைச் சுற்றிக் குதித்துக் கொண்டும் கத்திக்கொண்டும் அந்தப் பூவின் மணத்தை எள்ளளவும் அறியாமலே இருக்கின்ற தவளைகள்! மனத்தின தன்மை அறியாதவர்கள்! வயது ஏறினாலும் பட்டம் பதவி பெருகினாலும் இவர்களுக்கு மூளை மட்டும் களிமண்ணாகவே திரண்டு உருண்டு கிடக்குமா?

தங்கை மற்றவர்களைப் போல் தேர்வுக்குப் பாடங்களைப் படித்து வரிவரியாக உருப்போட்டு ஒப்புவித்துவந்தவளா? அப்படி வாந்தி எடுக்கும் தேர்வுக்காக அவள் படிக்கவில்லை. அவள் நல்ல நல்ல நூல்களைக் கற்றிருக்கிருள். கற்றவற்றை ஆராய்ந்திருக்கிருள். அவள் அப்படிப் பண ஆசை கொண்டோ, வயிறு வளர்க்கும் கவலை கொண்டோ அந்த இழிவான வாழ்க்கையை எண்ணிப் பார்க்கும் கீழ் மகள் அல்ல. பயிற்சிப் பள்ளியில் சேர வேண்டும் என்று போயிருப்பாள். அது மட்டும் உண்மை. பிறகு யாரும் தேடி வந்து அழைத்துப் போகாதபடியால் யார்வீட்டிலோ நின்றுவிட்டாள்.

ஒருகால் அப்படி என் தங்கை வேசித் தொழிலில் இறங்கிவிட்டிருந்தாலும் நான் அவளைப் பழித்திருக்க மாட்டேன்; சுற்றத்தாரைத்தான் பழித்திருப்பேன். அந்த மாமன் முதல் அரசாளும் மந்திரி வரையில் எல்லாரையும் பழித்திருப்பேன். உலகத்தைப் பழித்திருப்பேன். திலகத்தைப் பழித்திருக்க மாட்டேன். அப்படித் தவறிப் போயிருந்தால் அது திலகத்தின் தவறு ஆகுமா? வாழ்க்கையில் நல்ல அமைப்பு இல்லையானல் கெட்ட சூழலுக்கு அடிமையாவது யார் குற்றம்? அரசியல் அமைப்பின் குற்றமே ஒழிய ஒரு சிலரின்

குற்றம் அல்ல. உலகத்தின் குற்றமே தவிர, துன்பத்துக்கு உள்ளானவரின் குற்றம் அல்ல. ஒருவனைப் பல நாள் பசியோடு வருந்த விட்டுவிட்டு, பட்டினி போட்டு வாடச் செய்துவிட்டு, பிறகு, "என் தோட்டத்தில் வந்து இவன் பழம் திருடினான், இவன் திருடன்" என்று வழக்குத் தொடுப்பது அந்தக் காலம். இந்தக் காலத்தில் இது அறிவாளிகளிடம் செல்லுமா ? அறிவில்லாதவர்களுக்கு அறம் எது என்று தெரியாமல் போகும் ; போகட்டும். அவர்கள் பட்டினி கிடந்தவனைத் திருடன் என்றும் சொல்வார்கள். ஆனால் அறிவாளிகள் கண் திறந்து பார்க்கும் காலம் இது. இனிமேல் வரப்போவது அதைவிட ஆற்றல் மிகுந்த காலம். திருடன் என்றும் வேசி என்றும் பழிக்கின்றவர்களுக்குச் சிறைத் தண்டனை வந்து சேரும் ; தூக்குத் தண்டனை கிட்டிவிடும். "எங்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் இல்லை ; அதனால் அப்படிச் சொல்லிவிட்டோம்" என்று அந்தக் கோழை வஞ்சகர்கள் இனித் தப்பிப் பிழைப்பதும் அருமையாகிவிடும்.

அது போகட்டும். நான் போய்ப் பார்க்க வேண்டும். தேடிக்கொண்டு வரவேண்டும் என்றே துணிவு கொண்டேன். ஆனால் இருப்பிடம் தெரியாமல் கவலைப் பட்டேன். அம்மாவிடம் அழுதேன். அன்று இரவு உணவும் உண்ண மனம் இல்லாமல் படுத்துக்கொண்டேன். அன்னையும் என் பக்கத்தில் உட்கார்ந்து அழுதாள். "அம்மா" என்றேன். "அழாதே அப்பா" என்றாள். "அழுதவன் போய்விட்டான் அம்மா ; இப்போது வீரன் இளங்கோ வந்திருக்கிறான்" என்றேன்.

"சொல்லப்பா" என்றாள். இனிமேல் நான் சாதி உறவு இவைகளை மதிக்க மாட்டேன், அம்மா. என் திருமணத்தைப் பற்றி உனக்கும் உரிமை இல்லை.

தெரிகிறதா? நீ உயிருடன் இருக்கும் வரையில் என்னோடு இரு. உன்னை மறக்காமல் காப்பாற்றிவருவேன். திலகத்திற்குக் கலியாணமாகி எங்காவது நல்லபடி இருப்பதைக் கண்ணால் பார்த்தால்தான் நானும் ஒரு பெண்ணைத் தேடிக் கலியாணம் செய்துகொள்வேன். நீ எதுவும் பதில் பேசக் கூடாது. பதில் பேசினால் உன் முகத்திலும் விழிக்க மாட்டேன். எங்காவது போய் வயிறு வளர்த்து, கிடைத்ததை உனக்கு மணியார்டர் செய்துவிடுவேன்" என்றேன். அன்னை இத்தனையும் கேட்டுவிட்டு, "கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கு அப்பா, வெறுவயிருகப் படுக்கக் கூடாது" என்ருள்.

பொழுது விடிந்தது. ஞாயிற்றுக்கிழமை யாதலால் மருதப்பன் வருவான், வராவிட்டால் நாம் போகலாம் என்று எண்ணிக்கொண்டே படுக்கையில் புரண்டேன். எழுந்து காலைக் கடன்களை முடித்தேன். அதற்குள் "இளங்கோ" என்று அழைத்துக்கொண்டே அவன் நுழைந்தான். "எங்கே பயணம்?". என்று கேட்டேன். "கோடம்பாக்கம்" என்ருன்.

வெளியே புறப்பட்டோம். எழும்பூர் பஸ்ஸில் ஏறிேனும். மருதப்பன் மெல்லக் கதை சொல்லத் தொடங்கிஞன். புதிய காதல்கதையாக இருக்கிறதே என்று கேட்டுக்கொண்டே வந்தேன். என்னை அவசரக்காரன் என்று பல நாள் இடித்துச் சொல்லியிருக்கிருன். இப்போது அவனே இப்படிப்பட்ட அனுபவத்துக்கு ஆளாகியிருக்கிருன் என்று எண்ணினேன்.

"பட்டணத்துக்குப் புதியவளாம், வழி தவறி வந்துவிட்டாளாம்" என்ருன். என் நெஞ்சு திடுக்கிட்டது. "மற்றக் கதையெல்லாம் வேண்டா; எங்கே அவள்? முன்னே பார்க்க வேண்டும்" என்றேன். "கோடம்பாக்கம், செங்கல்வராயன் தெரு அல்லது

கந்தப் பிள்ளை தெரு, 31" என்றான். என் கவலைக் குறிப்பைக் கண்டதும் அவன் காதல்பேச்சை அடியோடு மறைத்துவிட்டான். திலகமாக இருக்குமோ என்று அவனுக்கு ஐயம் வந்துவிட்டது. உடனே சில அடையாளங்களைச் சொல்லத் தொடங்கினான். மெலிந்த உரு, அடர்ந்த கூந்தல், எளிய ஆடை, அறிவின் பொலிவு, நடுத்தர உயரம் என்று எல்லாம் சொல்லிக்கொண்டே வந்து வலக்கையில் பெருவிரல் பக்கத்தில் மச்சம் என்றான். என் நெஞ்சம் அதிர்ந்து அலை அலையாக எழுந்தது. "தங்கைதான் அப்பா. வேறு யாரும் இல்லை. அவள் பேனா பிடித்து அச்சுப் போல எழுதுவாள். கிறுக்கெழுத்துக்காரனான நான் அவள் எழுதுவதை அடிக்கடி பார்ப்பேன். அப்போது அந்தக் கையில் பேனா பிடித்த கட்டைவிரல் பக்கத்தில் அந்த மச்சம் பார்த்திருக்கிறேன். கைமேல் மை பட்டிருக்கிறது என்று முதலில் எண்ணி அதைத் துடைக்கப் போனது உண்டு. 'மச்சம் அண்ணா' என்று தடுத்துவிடுவாள்" என்றேன்.

மருதப்பன்முகம் வெளிறிவிட்டது. மேற்கொண்டு பேச வாயற்றுப் போனான். பஸ் எழும்பூரில் நின்றது. அங்கே இறங்கி ரயில் நிலையத்திற்குச் சென்று கோடம்பாக்கத்தில் நுழைந்து நடந்தோம்.

மருதப்பன் நல்லவன்; மனச் சான்றைக் கொல்லாதவன். மனச்சான்று பண்படும் முறையில் வாழ்க்கை நடத்தியவன். அவன்மனத்தில் தோன்றிய குழப்பத்தைக் கண்டு எனக்கே இரக்கம் உண்டாயிற்று. "மருதப்பன்! இதைப் பற்றி ஒன்றும் வருத்தப்படாதே! நீ மட்டும் திருமணம் ஆகாதவனாக இருந்தால் என் தங்கையை உனக்கே கொடுத்திருப்பேன். இந்தக் காதல்அனுபவத்தைக்கேட்டுப் பூரித்துப்

போயிருப்பேன். இப்போதுகூட உன் எண்ணம் முடிந்திருந்தால் திலகத்தின் பாக்கியம் என்றுதான் சொல்வேன். ஆனால் எனக்கு மனம் இல்லை. உன் மனைவியை நினைத்துத்தான் வருத்தப்படுவேன்" என்று ஆற்ற முயன்றேன்.

"அவளுடைய நினைவுதான் தடுத்தது. சுவரில் 'அருள்' என்று எழுதிய அவளுடைய எழுத்தைக் கண்டுதான் என் மனம் மாறி நின்றது. தவிர நான் செய்தது குற்றம்தானே! காதல் காதல் என்று வானளாவப் பேசிவிட்டு யாரும் இல்லாத இடத்தில் அதை மறுத்துவிடுவதா? அதுவும் தவிர ஒருத்தியோடு வாழ்க்கைப்பட்டு அன்பாக வாழும்போது இன்னொருத்தியை நினைத்தது குற்றம்தானே! அது காதலாகுமா? காமம்தான்" என்று கசிந்து சொன்னான்.

வழியில் ஒருவரைக் கேட்டோம். இதுதான் கந்தப்பிள்ளை தெரு என்று குறுக்கே போகும் தெருவைக் காட்டினார். முதலில் இருந்த வீட்டு எண் 75, எதிர்வாடையில் இருந்த வீட்டு எண் 17. சரி என்று எதிர் வாடையில் பார்த்துக்கொண்டே போனோம். 31ஆம் எண்ணுள்ள வீடு வந்தது. "திலகம்" என்று கூவினேன். யாரோ ஓர் அம்மையார் மாரியம்மன் விழாவில் வரும் பொம்மை போல் ஒரே அளவாக அசைந்துகொண்டே வந்து நின்றார். "சித்தூரிலிருந்து இங்கே யாராவது வந்திருக்கிறார்களா? என் தங்கை, திலகம் என்று பெயர்" என்றேன். முகத்தையும் உடலையும் மெல்ல மெல்லத் திருப்பிக்கொண்டே, "இங்கே யாரும் இல்லை. வருகிறவர்கள் தீரக் கேட்டுக்கொண்டு வரக் கூடாதா?" என்று சொல்லித் தம் பருத்த உடலை மெல்ல அசைத்து நடந்தார். நாங்கள் திரும்பினோம். "சோம்

பேறிப் பசங்க ரொம்பப் பெருத்துப் பூட்டாங்க" என்ற வசையும் காதில் கேட்டது.

"இரண்டு தெரு ஏன் சொன்னாய்? நீ கொண்டு போய் விட்டுவிட்டு வந்த தெருவும் வீடும் உனக்குத் தெரியாதா?" என்று மருதப்பனைக் கேட்டேன். வழியில் வந்துகொண்டே இருந்தானாம். எதிரே எவனோ வந்து நன்றி கூறிவிட்டு அழைத்துக்கொண்டு போனானாம். உடனே இவன் திரும்பிவிட்டானாம். அவன் அந்தப் பெண்ணுக்கு என்ன உறவு, அவன் பெயர் என்ன, இருப்பிடம் என்ன — ஒன்றுமே கேட்காமல் திரும்பி வந்துவிட்டானாம். இதுதான் மருதப்பன். "நானாக இருந்தால் தொடர்ந்து போய், வீட்டினுள் நுழைந்து, விருந்தும் உண்டு, உறவு பிடித்துக்கொண்டு தெரியாததெல்லாம் தெரிந்துகொண்டு வந்து சேருவேன்" என்றேன். "இப்படித்தான் அங்கங்கே அனுபவப்பட்டுக் குட்டும் பட்டாய். எனக்கு அனுபவம் இல்லை; குட்டும் படவில்லை" என்று அவன் சொல்லிக்கொண்டே செங்கல்வராயன் தெருவைக் கண்டுபிடித்தான்.

அவன் சொன்னதும் உண்மைதான். இந்தப் பரந்த உலகத்தில் சிலர் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருப்பார்கள். சிலர் ஏதாவது ஒரு மீன் கிடைத்ததும் அமைதி அடைவார்கள் — மருதப்பன் போல். என்னைப் போன்ற சிலர் ஒவ்வொரு மீனையும் நிறுத்திப் பார்த்து உறுமீன் கண்டுபிடிக்கும் வரையில் அலைவார்கள். அவன் சாதாரணமான ஒரு பெண்ணை மணந்து அவளைக் காதல்உலகத்தில் பண்படச் செய்து வாழ்க்கை நடத்துகிறான். நான் காதலா அல்லவா என்று சோதனை நடத்திவந்தேன்; அதனால் அகப்படும் உறவை விடாமல் பிடித்துவந்தேன்.

செங்கல்வராயன் தெருவில் 31ஆம் எண்ணுள்ள வீட்டின் படி ஏறித் திண்ணையின் பக்கம் நின்றோம். முதலில் தேடிய அந்தத் தெருவின் பழைய அனுபவத்தால் பெயரிட்டுக் கூப்பிடவில்லை. வீட்டினுள்ளே தாழ்வாரத்தில் போய்க்கொண்டிருந்த ஒருத்தி எங்களை எட்டிப் பார்த்துவிட்டுப் போனாள். சிறிது நேரத்தில் மறுபடியும் வந்தாள். அவள் பின்னே திலகம் வருவதைக் கண்டேன். கண்ணீர் கலங்கினேன். என்னைக் கண்டதும், 'அண்ணா' என்று அலறினாள் திலகம். உடனே, "ஆரவாரம் செய்ய வேண்டா; சும்மா இரு அம்மா" என்று அடக்கினேன். உடன் வந்தவள் எங்களைப் பார்த்து, "உள்ளே வாங்கள், வந்து உட்காருங்கள்" என்று அழைத்துக்கொண்டுபோய் நாற்காலிகளில் அமரச் செய்தாள்.

நெடுநேரம் ஒன்றும் பேசாமல் கண்ணீர் விட்டுக் கேட்டதற்கெல்லாம் தலையசைத்துக்கொண்டு நின்றாள் திலகம். "அம்மா, திலகம்! இனிமேல் கண்ணீர் விடவேண்டிய நிலை இல்லை அம்மா! உனக்குத் துணையாக நான் இருக்கிறேன். என் உயிர் உள்ள வரைக்கும் உனக்குக் கவலை வேண்டா" என்றேன். "பட்டணத்தில் நல்ல அறிவாளிகள் இருக்கிறார்கள். எங்களுக்குப் பலர் தெரியும். அறிவுலகத்தில் இவருக்குச் செல்வாக்கு இருக்கிறது. இவர்தான் மருதப்பர்; 'தென்றல்' துணையாசிரியர்" என்றேன்.

திலகத்தின் முகத்தில் அப்போது நல்ல மாறுதலைக் கண்டேன். அவளும் இவனை விரும்பி அன்பாக இருப்பதை அறிந்துகொண்டேன். "அவர் தெரியுமே அண்ணா! அன்றைக்கு வழி தவறி நுங்கம் பாக்கத்துக்குப் போய்விட்டேன். ஒரு சைக்கில் தடுக்கி

விழுந்து அடிபட்டேன். மருந்தும் போட்டு வழியும் காட்டினார்" என்றாள். நண்பன் தலை குனிந்து கொண்டே இருந்தான். திலகமும் முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டாள்.

"பெரியம்மா எப்படி இருக்கிறார்? பூங்கொடி நல்லபடி இருக்கிறாளா? என்னைக் கேட்கிறாளா? என்று மறுபடியும் கண்ணீர் விட்டாள். "இரண்டு பேரும் நன்றாக இருக்கிறார்கள். அவர்களை இங்கே அழைத்து வரட்டுமா? நீ அங்கே வருகிறாயா?" என்று கேட்டேன். "சித்தூரார் வெளியே போயிருக்கிறார். அவரைக் கேட்காமல் நான் வர முடியாது. கொஞ்ச நேரம் இருங்கள், வந்துவிடுவார்" என்றாள்.

அதற்குள் திலகத்தோடு இருந்தவள் காப்பி வைத்துச் சுடச் சுடக் கொண்டுவந்து மேசைமேல் வைத்து, ஒரு தட்டில் இரண்டு சாத்துக்குடிப் பழமும் கொண்டுவந்தாள். "இவளுடைய அக்காதான் சித்தூரிலே என்னைக் காப்பாற்றியவர். இவள் பெயர் செந்தாமரை. அவரும் கல்லூரியில் படிக்கிறார். இவளும் படிக்கிறாள்" என்று திலகம் அறிமுகப்படுத்தினாள்.

செந்தாமரையின் முகத்தைப் பார்த்தேன். அது செந்தாமரையாகவே இருந்தது. வழக்கம் போல் நான் அவளுடைய உள்ளத்தை ஆராயத் தலைப்பட்டேன். இல்லை, வழக்கம் போல் என் உள்ளத்தைப் பறி கொடுக்கத் தலைப்பட்டேன் என்று கூறலாம். திலகத்தையும் செந்தாமரையையும் எதிரே உட்காரச் சொல்லிவிட்டுக் காப்பி குடித்தோம். காப்பி குடிக்கும்போது என் கண்கள் செந்தாமரையின் முகத்தில் இருந்தன. அவள் திலகத்தோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். திடீரென்று, "நுங்கம்பாக்கத்திலா இருக்

கிறீர்கள் ?" என்று மருதப்பனைக் கேட்டாள். அவனும் இனிய குரலில், "ஆமாம் அம்மா" என்றான்.

சிறிது நேரம் எந்தப் பேச்சும் இல்லை. அமைதி குடிகொண்டிருந்தது. மருதப்பன் தவிர மற்றவரின் கண்கள் எல்லாம் வேலை செய்துகொண் டிருந்தன. மருதப்பன் மட்டும் தலைகுனிந்து கண்களை இடக்கை விரலால் தடவிக்கொண் டிருந்தான். செந்தாமரை திலகத்தின் கையைத் தன் கையில் வைத்துக் கொண்டு ரேகை பார்க்கத் தெரிந்தவள்போல் நடித்து, விட்டு விட்டு என்னைப் பார்த்துக்கொண்டும் அந்தக் கையைப் பார்த்துக்கொண்டும் இருந்தாள். என்ன பேசுவதென்று எனக்குத் தெரியவில்லை. ஆர்க்காட்டில் சித்தியைப் பற்றியோ மாமியைப் பற்றியோ வேறு யாரைப் பற்றியோ பேச்செடுத்தால் திலகத்தின் துயரத்தைக் கிளறியது போல் ஆகியிருக்கும். ஆகையால் பேசுவது தெரியாமல் திகைத்தேன். நண்பன் கண்ணைத் திறந்து என்னைப் பார்த்து, "மணி என்ன இருக்கும் ?" என்று கேட்டான். "ஒன்பதரை இருக்கும்" என்றாள் செந்தாமரை.

"அவரும் வருவார். பேசிக்கொண்டிருங்கள். சமையல் செய்துவிடுவோம், சாப்பிட்டுப் போகலாம்" என்றாள் திலகம். உடனே செந்தாமரை எழுந்து "ஞாயிற்றுக் கிழமை, தெரியுமா ? நீ அங்கே வரக் கூடாது" என்று சமையலறையுள் புகுந்தாள்.

"பூங்கொடியை அழைத்துவந்திருக்கக் கூடாதா" என்று திலகம் உருக்கமாகக் கேட்டாள். மறுபடியும் புதன்கிழமை வரும்போது அழைத்துவருவதாகச் சொன்னேன். பிறகு, திலகமும் எழுந்து சமையலறைக்குச் சென்றாள்.

"கவலை விட்டதா, அப்பா ?" என்று சமயம்

பார்த்து மருதப்பன் கேட்டான். "இல்லை; இப்போது தான் பிடித்தது" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னேன். "அதையும் தெரிந்துகொண்டேன். கைரேகை பார்த்தால், நீ கண்ரேகை பார்க்கிறாய். அது இருக்கட்டும். வந்த கவலை விட்டதா? இனிமேல் தங்கையைப் பற்றிய துயரம் இல்லையே!" என்றான்.

அதற்குள் திலகமும் செந்தாமரையும் சண்டையிடுவது போல், "உனக்கு இங்கே இடமில்லை" என்றும் "அண்ணி ஆனபிறகுதான் அதிகாரம்" என்றும் பேசுவது கேட்டது. திலகம் புன்முறுவலுடன் வந்தாள். ஏதோ விளையாட்டாய்ப் பேசினார்கள் என்று எண்ணினேன். செந்தாமரையின் அண்ணன் பெயர் திருநாதன் என்றும், எம். ஏ. படிப்பதாகவும் திலகத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். திருநாதனைப் பார்த்துவிட்டுப் போவது நல்லது என்றே இருந்தேன். எனக்காக மருதப்பனும் என்னோடு இருந்தான். அவன் இயற்கையான ஊக்கத்தோடு இல்லை. அடுப்பங்கரையில் இருந்த பூனையை மேசைமேல் விட்டால் இருக்க முடியாமல் தவிப்பது போல் தவித்துக்கொண் டிருந்தான்.

செந்தாமரை உள்ளேயிருந்து வந்து, "தென்றலை நாங்களும் படிக்கிறோம். அதில் நீங்கள் எழுதுவது எந்தப் பகுதி?" என்று கேட்டாள். "ஊர்வம்பு" தன் பகுதி என்றும், சில நாட்களில் "மன்" என்ற புனை பெயரோடு கதைகள் எழுதுவதாகவும் கூறினான். இந்தக் கேள்வியால் சிறிது ஊக்கமும் பெற்றான்.

பிறகு சிறிதுநேரம் மருதப்பன் என்னோடு பத்திரிகை உலகத்துச் செய்திகளை எடுத்துப் பேசிக்கொண்டிருந்தான். அவை சுவையாகவே இருந்தன. ஆனால் என் மனம் மட்டும் செந்தாமரை வருதலையும்

போதலையும் ஆராய்ந்துகொண்டே இருந்தது. நானும் என்னுடைய ஆபீஸ் கிளர்க்குகளின் செய்தியைச் சொல்லலாம் என்றால், அவை சுவையற்றவை; யந்திரங்களின் வாழ்க்கையில்—பேனா ஓட்டும் வாழ்க்கையில்—என்ன சுவை இருக்க முடியும்? ஒருகால் சுவைபடும் குறிப்பு ஏதாவது இருந்தாலும், அதை நான் ஒரு 'ரிபோர்ட்' ஆக்கிக் கூற முடியுமே தவிர, பத்திரிகை ஆசிரியர் போல் சுவை கெடாமல் எழுதி வெளியிடவும் முடியாது; பள்ளிக்கூட ஆசிரியர் போல் தெளிவாகச் சொல்லவும் முடியாது. ஆகையால் ஏதாவது பேச வேண்டுமே என்று எண்ணி, என் அன்னையைப் பற்றியே பேசத் தொடங்கினேன்.

அவள் திலகத்தைப் பற்றிக் கவலைப்படுவது, அவளைப் பற்றித் தெய்வத்தை வேண்டுவது, பூங்கொடியை வளர்ப்பது, என் திருமணத்தைப் பற்றிக் கோட்டை கட்டுவது, அதற்காகப் பணம் சேர்க்கச் சிக்கனம் செய்வது முதலானவற்றை எடுத்துரைத்தேன். மருதப்பனும் கேட்டான்; திலகமும் கேட்டாள். இடையிடையே வந்துபோன செந்தாமரையும் கேட்காதவள் போல் இருந்து கேட்டுக்கொண்டு போனாள்.

உணவுக்கு நேரமாயிற்று. மெல்ல எழுந்து கை கழுவி இலைகளைப் பார்த்து உட்கார்ந்தோம். திலகமும் செந்தாமரையுமாக மாறி மாறிப் பரிமாறினார்கள். தங்கையின் கை மச்சத்தைப் பார்த்தபோது ஆர்க்காட்டு நினைவு வந்தது. செந்தாமரையின் நகக்கண்களின் ஒளியைப் பார்த்தபோது என் மனம் ஒளி இழந்தது. உணவின்மேல் நினைவு இல்லாமல் உண்டு எழுந்தேன். திருநாதன் வரவில்லை. மறுநாள் பார்க்கலாம் என்று விடை பெறலானோம். வேப்பேரி விலாசத்தை எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டோம். திலகம் வழிவிட-

வந்தாள்; செந்தாமரை தொடர்ந்து வந்தாள். "அப்புறம் வருவேன்" என்று நான் வாசற்படி கடந்தேன். "வருவேன் அம்மா! இரண்டு பேருக்கும் வணக்கம்" என்று மருதப்பனும் தொடர்ந்தான்.

புரசவாக்கம் சினிமாவுக்குப்போவதாகமுன்வாரமே உடன்பட்டிருந்தோம். அதை நினைவூட்டினன் மருதப்பன். எனக்கோ அவ்வளவு விருப்பம் இல்லை. எப்படியாவது பொழுது போக வேண்டுமே என்று 'சரி' என்றேன். "போன வாரம் நீயே தூண்டினாய். இந்த வாரம் எனக்காக வருவது போல் வருகிறாயே! என்ன நினைவு? செந்தாமரையா? இது எத்தனை நாளைக்கு?" என்றான். "என்ன மருதப்பன்! பழைய கதைகளோடுசேர்த்துவிட்டாயே!" என்றேன். "பொறுத்துத்தான் சொல்வேன். மறுபடியும் புதன்கிழமை போய்ப் பார்க்கலாம். உன் தங்கையைக் கேட்டுப்பார். குணம் நல்ல குணமாகத்தான் இருக்கும். கபடற்ற தன்மை என்று தெரிகிறது. நாகரிகம் விளங்குகின்றது. அறிவும் உணர்வும் நிரம்பிய வாழ்க்கை. ஆனால் உன்மேல் விருப்பம் உண்டா என்று தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே நீட்டினான்.

சினிமா தொடங்கியது. எனக்கோ அதில் சிறிதும் ஊக்கம் இல்லை. அவனுக்காக என் கண்கள் அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன. என்ன பார்த்தேன் என்பது தெரியவில்லை. வழக்கம் போல் நிறம், அசைவு, பலர் பலவகையாக வருவதும் போவதும் பேசுவதும்—இவ்வளவுதான் பார்த்துக்கொண்டிருந்ததாக நினைவு வருகின்றது. நண்பன் சிரித்தபோது நானும் சிரித்தேன்; சிரிப்பதாக நடித்தேன்; அவன் சும்மா பார்த்துக்கொண்டிருந்தபோது நானும் சும்மா பார்த்துக்கொண்டிருந்தேன். மருதப்பன் இரண்டொரு

முறை திரும்பி நோக்கி, "எங்கே எண்ணமெல்லாம்?" என்று கேட்டான். கொஞ்ச நேரம் கழித்து அந்தக் கூட்டத்தில் புதிய ஆரவாரம் எழுந்தது. படத்தில் கண்ட புதுமை என்னவோ என்று கவனித்துப் பார்த்தேன். 'காமிக்' என்னும் வேடிக்கைப் பகுதி நடந்து கொண் டிருந்தது. ஒருவன் ஒருத்தியிடம் கெஞ்சுதலும் கொஞ்சுதலும் கண்டேன். கூட்டத்தாரின் ஆரவாரத்திற்குக் காரணம் விளங்கியது. இருந்தாற்போலிருந்து அவள் அவனை நோக்கி, "காதல், காதல்; நல்ல காதல்! கண்டவுடன் காதல் அய்யாவுக்கு" என்றாள். அதிர்ந்தேன்; திடுக்கிட்டேன்; அஞ்சாதே, இளங்கோ! இது கதை" என்று மருதப்பன் என் தோளை இறுகப் பிடித்தான். வெட்கத்தோடு தலை குனிந்தேன். படம் மேலே தொடர்ந்து நடந்தது; நண்பனுக்கு இருந்த ஊக்கத்தில் எள்ளளவும் எனக்கு இல்லை. முடிந்ததும் விடுதலை பெற்றேன்; வெளியே வந்து நண்பனிடம் விடைபெற்றேன்.

வீட்டிற்குள் நுழைந்ததும், "திலகத்தைக் கண்டேன்" என்று அன்னையிடம் சொன்னேன். அன்னையும் ஆவலாய்க் கேட்டு மகிழ்ந்தார். பூங்கொடி உறங்கிக் கொண்டிருந்தாள். "இப்படி நல்ல இடமாக இருந்தால் மறுபடி சேர்த்துக்கொள்ளலாமே! நம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து வைத்திருக்கலாம். ஆனால் மாமனை வரச்சொல்லி அல்லது தபால்எழுதிக் கேட்டால்..." என்று நிறுத்தினாள். "திலகம் இனிமேல் சேரமாட்டாளே. கல்லூரியில் படிக்கிற பிள்ளைகள் நாங்கள் எத்தனையோ காலமாய்ப் பாடுபடுகிறோம். சாதியை ஒழிக்க வேண்டும் என்று உறுதி யெல்லாம் செய்துகொண்டோம். கல்லூரியை விட்டபிறகு நான் மறந்தேன்; மருதப்பன் மறந்துவிட்டான்; மற்ற

நண்பர்களும் மறந்துவிட்டார்கள். ஆனால் என் தங்கை செய்து காட்டிவிட்டாள். இனிமேலாவது நான் அவள் இருக்கிற இடத்துக்குப் போய் அந்தத் தொண்டு செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு அவளை இங்கே அழைத்துக்கொண்டு வருவது ஏன்? இப்படி நான்கு பெண்கள் சாதியை விட்டால் நாற்பது ஆண்களுக்குப் புத்தி வரும்" என்றேன்.

"நான் போய்ப் பார்க்கவேண்டுமே, வரட்டுமா?" என்று ஆவலாய்க் கேட்டார். "புதன்கிழமை போகலாம்" என்றேன். இருக்கிற இடம், அந்தக் குடும்பத்தில் இருப்பவர்கள், சென்னைக்கு வந்த காரணம் ஆகிய எல்லாம் கேட்டார். தெரிந்தவரைக்கும் சொல்லி உறங்கிவிட்டேன்.

மறுநாள் ஆபீசில் வேலை செய்துகொண்டிருந்த போது கோடம்பாக்க நினைவு இருந்ததே தவிர வேலை ஓடவில்லை. அவசரக் கடிதங்கள் மூன்றுக்குப் பதில் எழுதி முடிந்த பிறகு மற்றக் கட்டுகளை மேசையின் மேலே விட்டுவிட்டு, ஒரு காகிதத்தில் என்னவோ எழுதத் தொடங்கினேன். பக்கத்துக் கிளர்க், "என்ன பட்டி போடுகிறீர்கள்?" என்று கேட்டபோதுதான் நான் செய்த வேலை தெரிந்தது. அந்தக் காகிதத்தில் ஏறக்குறைய முழுப் பக்கமும் செந்தாமரை செந்தாமரை என்று எழுதியிருந்தேன். பேசாமல் காகிதத்தைச் சுருட்டிக் கசக்கிச் சட்டைப்பையில் செருகிக்கொண்டேன். நான் எட்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது ஒரு பையன் ஸ்ரீராமஜெயம் ஸ்ரீ ரா ம ஜெ ய ம் என்று எழுதிக்கொண்டிருந்தான். "என்னடா, பைத்தியம்!" என்று கேலி செய்தேன். "இதனுடைய பெருமை யாருக்கும் சொல்லக் கூடாது என்று ஒருத்தன் சொன்னான்" என்றான். எனக்கோ

எப்படியாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவல் மிகுதியாயிற்று. அவன் கணக்கிலே வடிகட்டின முட்டாள். எப்போதும் சைபர் மார்க்கே வாங்கி வந்தான். கணக்குக் கற்றுக் கொடுப்பதாகவும் காப்பி அடிக்கக் காட்டுவதாகவும் சொல்லிப் பார்த்தேன். முதலில் முடியாதென்று சொல்லிக் கடைசியில் ஒப்புக்கொண்டான். அவன் சொன்ன பெருமை வேறொன்றும் இல்லை. ஒரு லட்சம் முறை ஸ்ரீராம ஜெயம் எழுதி முடித்தால் தேர்வில் கட்டாயம் வெற்றி பெறலாம் என்றான். நானும் எழுதினேன். ஒரு லட்சத்து ஓர் ஆயிர முறை எழுதிவிட்டேன். ஆயிரம் மிகுதியாக எழுதியது தப்போ என்று பயந்து போனேன். ஒரு நாள் மெல்ல வீட்டுக்கே போய் அவனைக் கண்டேன். அப்படி எழுதக் கூடாது என்றும், அந்தப் பாவம் போக வேண்டுமானால் மிகுதியான ஆயிரத்தைத் தனியாகக் கத்தரித்து எடுத்து இன்னும் தொண்ணூற்றொன்பதாயிர முறை எழுதி அதனை மற்றொரு லட்சம் ஆக்க வேண்டும் என்றும் சொன்னான். அப்படியே சரியாக மற்றொரு லட்சம் ஸ்ரீராம ஜெயம் முடித்த பிறகுதான் ஆறுதலாயிற்று. தேர்வில் வெற்றி பெற்றேன். கல்லூரிவரைக்கும் வந்து பி. ஏ. பட்டமும் பெற்றேன். ஆனால் அந்த என் குரு எட்டாவதுக்குமேல் எட்டவே இல்லை.

இப்படிச் 'செந்தாமரை'யை எத்தனை முறை எழுதினேன் என்று தெரியவில்லை. இன்னொரு கிளார்க் என்னைப் பார்த்து, "என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? தலைவலியா, ஏதாவது கவலையா?" என்றார். "தலைவலிதான்; அரைநாள் விடுமுறை எழுதிவிட்டுப் போகலாம் என்றிருக்கிறேன்" என்று சொல்லி அவரிடத்திலேயே எழுதிக்கொடுத்து

இரண்டு மணிக்குப் புறப்படலானேன்.

அதற்குள் மருதப்பனுடைய நினைவு வந்தது. டெலிபோனில் கூப்பிட்டேன். 'தென்ற'லிலிருந்து பேசினான். "கோடம்பாக்கம் போகிறேன், வருகிருயா?" என்று கேட்டேன். "சரி, தெரிந்துகொண்டேன். நீ மட்டும் போய்வா. அவசரப்படாதே. பொறுமையாக நடந்துகொள். புதன்கிழமை துணைவியோடு வருவேன்" என்றான். நேராகப் போனால் மூன்று மணிக்கெல்லாம் போய்ச் சேரலாம்; திலகம் மட்டும் தனியாக இருப்பாள்; செந்தாமரையைப் பற்றிக் கேட்கலாம் என்று நினைந்து விரைந்து சென்றேன்.

திலகம் தனியாக இருந்தாள்; உள்ளொளி படித்துக்கொண் டிருந்தாள். என்னைப் பார்த்ததும், "பூங்கொடியை ஏன் அண்ணா அழைத்துக்கொண்டு வரவில்லை?" என்று கேட்டாள். ஆபீசிலிருந்து நேரே வந்ததைக் கூறி வீட்டுக்கே வந்து பூங்கொடியைப் பார்க்குமாறு அழைத்தேன். புதன்கிழமை மருதப்பன் மனைவியோடு வரப்போவதாகத் தெரிவித்தேன். திருநாதரின் குடும்பத்தாரின் தொழில், குணம், மற்றவை எல்லாம் கேட்டேன். மனமகிழ்ச்சியான பதில்களே கூறினாள். "சித்தூரில் அந்தக் குடும்பத்துக்கும் வேசித்தொழிலுக்கும் தொடர்பு உண்டா?" என்று கேட்டேன். தூய்மையான வாழ்க்கை என்றும், நாலாம் பாட்டியின் காலோடு அந்தத் தொழில் அற்றுவிட்டதென்றும் கூறினாள். திருநாதனைப் பற்றியும் புகழ்ந்து பேசினாள். அதே மூச்சில் மருதப்பனுக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டதும் கேட்காததுமாய்ச் சமையலறைக்குள் நுழைந்தாள். சிறிது நேரம் கழித்து வந்தாள்.

அப்போது செந்தாமரையைப் பற்றிக் கேட்டேன்...

ஓடிப்போய் ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டு வந்து காட்டினாள். அதில் மருதப்பனும் நானும் உட்கார்ந்திருந்த நிலை ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தது. மருதப்பன் என்னைவிடப் பொலிவாக அமைந்திருந்தான். நான் ஏதோ ஒருவகைக் குழப்பம் நிறைந்த முகத்தோடு இருந்தேன். இந்தப் படத்தைத் திலகமே எழுதினாளோ என்று ஐயுற்றேன். ஆனால் படத்தின் கீழே "செந்தாமரை" என்று எழுதி ஒரு கேள்விக் குறி இடப்பட்டிருந்தது. செந்தாமரை ஓவியப்புலமை உடையவள் என்றும், களங்கமற்ற உள்ளத்தினள் என்றும் அறிந்தேன். உணர்வு வேண்டும் என்று மருதப்பன் சொன்னது நினைவுக்கு வந்தது. மேலுக்குப் பொய்யாக நடிப்பதில் வல்லவளோ எனக் கேட்டேன். அதைத் திலகம் அடியோடு மறுத்து, "எனக்குக் கோபம் வந்தால் கால்மணி நேரம் பொறுத்து வரும்; பொறுத்தே நீங்கும். அவளுக்கு உடனே வரும், உடனே நீங்கும். என்னைவிட அவள் நல்லவள்" என்றாள். என் மனம் ஆறுதல் அடைந்தது. திலகம் காப்பி வைக்கச் சென்றாள். நான் தனியே எண்ணக் கடலுள் ஆழ்ந்தேன்.

யாரோ வருவது தெரிந்தது; எதிர்பார்த்தேன். செந்தாமரை வரக் கண்டேன். என் இரு கைகளையும் நீட்டி ஏந்தினேன். கையில் இருந்த இரண்டு புத்தகங்களை அப்படியே கொடுத்துவிட்டு நேரே சமையலறைக்குச் சென்றுவிட்டாள். புத்தகங்களைத் திறந்து பார்த்தேன். அவற்றில் ஒன்றும் இல்லை. செந்தாமரை அவற்றில் இல்லை. முதல் பக்கம் பார்த்தேன். சி. செந்தாமரை என்று எழுதியிருந்தது. நான் அதன் கீழே அதே போல் இ. செந்தாமரை என்று எழுதினேன். அதற்குள் சிற்றுண்டி வந்தது. திலகம் எடுத்து

வந்தாள். முதல்நாள் போல் செந்தாமரையை எதிர் பார்த்தேன். இவள் போனபின் அவள் வருவாள் என எண்ணினேன். காப்பியும் திலகமே கொண்டு வந்தாள். சமையலறையை விட்டு அவள் வரவில்லை. மருதப்ப னுடைய அறிவை மெச்சினேன். காதல், உள்ளத்தின் ஆழம் காண்பதுதான்; மேலே மிதப்பது அல்ல.

## செந்தாமரை

சிலர் காதலை வளர்த்து வாழ்கிறார்கள்; சிலர் காத்திருந்து பெறுகிறார்கள்; சிலர் ஆராய்ந்து தேடி அடைகிறார்கள்.

மருதப்பரும் அவருடைய மனைவியும் நன்றாகத் தான் வாழ்கிறார்கள். ஆனால் ஒத்த அறிவோ காணோம். அவர் உலகத்தை நன்றாகக் கற்றிருக்கிறார். அவருடைய மனைவியோ குடும்ப வாழ்க்கையை நன்றாகக் கற்றிருக்கிறாள். எப்படியோ காதல் வாழ்வு தான் வாழ்கிறார்கள். படிப்படியாக முன்னேறியிருக்கிறார்கள்.

அண்ணனைச் சிறுவயதில் ஊமை என்று அக்காவும் நானும் பேசிவந்தோம். இப்போதும் ஏறக்குறைய அப்படித்தான் இருக்கிறான். தின்பண்டமோ, புதிய ஆடையோ புத்தகங்களோ எவற்றைப் பற்றியும் அவன் அந்த நாளிலும் அலைந்ததில்லை; இந்த நாளிலும் அலைவதில்லை. பொறுமையாக இருந்து கிடைத்த போது மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்வான். "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு" என்ற பாட்டைப் படிக்கும்போதும் கேட்கும்

போதும் அண்ணனை நினைத்துக்கொள்வது உண்டு. இப்போது அவனுடைய காதல்வாழ்க்கையும அப்படித்தான் வீடு தேடி வந்தது. அண்ணி அவனுக்கு ஏற்றவள். அசையாமல் அதிராமல் ஊமை போல் இருந்து அண்ணனுடைய உள்ளத்தை உரிமையாக்கிக்கொண்டாள்.

நான் அந்த இள வயதிலும் நினைத்ததற் கெல்லாம் அலைந்தேன். வீட்டிற்குள்ளே ஓமப்பொடிப்பொட்டலம் வந்தாலும் ஓடிப்போய் அதைப்பெற்றுக்கொள்ள அலைவேன். புதிய நிறத்தில் துணி வந்தால் உடனே பரபரப்பாகத் தேடிப் பார்த்துப் பொறுக்குவேன். அண்ணியைப் போல் வெள்ளைப் புடைவையைக்கட்டிக் கொண்டு உள்ளம் பூரிக்க என்னால் முடியாது; என் காதல் வாழ்க்கையும் அப்படித்தான் முடிந்தது.

அந்த ஓவியம் எழுதினேனே, அதிலாவது மருதப்பர் ஒருவரை மட்டும் எழுதியிருக்கக் கூடாதா? அதிலும் தேடியலையும் புத்தியைக் காட்டினேன். உருவம் இரண்டு எழுதிப் பெயரை எழுதி ஒரு கேள்விக்குறியும் இட்டேன். கேள்விக்குறி என்? இவரா அவரா என்று கேட்கும் மனத்தை அப்படி என்னை அறியாமல் ஓவியத்தில் குறித்துவிட்டேன். அதை அண்ணி எப்படியோ நுட்பமாகத் தெரிந்து கொண்டாள். தனிப்படம் எழுதிக் காட்டியபோது "ஆராய்ச்சி முடிந்துவிட்டதா? ஐயநிலை போய் வியப்பு நிலை வந்ததே!" என்று இலக்கணமாகப் பேசினாள்.

இந்த அண்ணியால்தான் என் வாழ்க்கை சீர்ப்பட்டது என்று சொல்ல வேண்டும். யார் மகளோ, என் வாழ்க்கையைச் சீர்ப்படுத்த என்னோடு வந்து சேர்ந்தாள். அவளுடைய அண்ணன் என்றுதான் அவரை விரும்பினேன். அவருடைய நண்பர் என்றுதான்

மருதப்பரைக் கண்டு மயங்கினேன். இப்படி அண்ணிக்கு வேண்டியவர்களாக இல்லாமல் புதியவர்களாக இருந்திருந்தால், நான் கண் எடுத்துப் பார்த்திருக்க மாட்டேன். படம் எழுதியும் பார்த்திருக்கமாட்டேன். ஏன் ? நான் சூடுண்ட பூனை அல்லவா ? பட்டபிறகும் புத்தி வராமல் போகுமா ?

அனுபவம் இல்லாமலே சிலர் அறிவோடு நன்றாக வாழ்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுடைய அனுபவத்தை அறிந்து பயன்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால், எனக்கு அவ்வளவு பொறுமையும் இல்லை ; அந்தத் திறமையும் இல்லை. அனுபவம் எனக்கே ஏற்பட்ட பிறகுதான் விழிப்பாக நடக்கக் கற்றுக் கொண்டேன். அந்தப் பாவிப் பயல்—!

நான் இன்றைக்குத் தூய்மையானவள் என்று தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை அல்லவா ? அது என் வாழ்க்கையில் பெரிய குறை அல்லவா ? அதனால் தான் செருக்கெல்லாம் அடங்கிக் கிடக்கின்றேன். கல்லூரியிலும் முன் போல் எல்லாருடனும் பழகுவதில்லை. நாகரிகம் என்று சொல்லி மனம் போன போக்காய்த் திரியாமல், மனப் பண்பாடு வேண்டும் என்று உணர்ந்துகொண்டேன். அந்தக் குறை என்னிடம் இருப்பதால், ஒத்த அன்பு ஒத்த அறிவு என்ற வாய்பாடுகளையும் பொருட்படுத்தவில்லை. எனக்கு ஒரு துணை வேண்டும் ; அவர் தன்னலம் அற்றவராக இருந்தால் போதும்; அறிவு முதலானவை குறைந்தவராக இருந்தாலும் போதும் என்ற எண்ணம் வந்ததும் அதனால்தான். அப்படிப்பட்ட நல்லவர் கிடைப்பாரானால், அவருக்கு அடிமையாக வாழவும் என் மனம் நாடியது. கிடைக்கவில்லையானால், அண்ணியின் கால்மாட்டில் விழுந்து ஆடிப்பாடிக் காலம் கழிக்கலாம்

என்றும் மனம் துணிந்தது.

இந்த உலகத்தில் எல்லாரும் அரிச்சந்திரர் என்று எண்ணியதால் கெட்டேன். அழகு இருந்தது, திறமை இருந்தது, அறிவு இருந்தது, இனிமையான பேச்சும் இருந்தது; ஆனால் அவனுக்கு அன்பு என்ற ஒன்று இல்லை என்று தெரியாமல் போயிற்று. மூளை இருந்தாலும் இதயம் இல்லாத ஆட்கள் இருப்பதைத் தெரிந்துகொள்ளாமல் கெட்டேன்.

இந்த உயிர் இளங்கோவின் உயிர். இந்த மனம் இனி அவருக்கே அடிமை. இந்தஉடல் அவருடையதே. ஆனால் ஒரு குறை ; அவருக்குத் தூய்மையான உடலை ஒப்படைக்க முடியாத பாவியாக இருக்கிறேன். இன்று கண்ணீர் விட்டுப் பயன்இல்லை. அன்று தவறினேன்.

கண்ணீர், கழுவாத மாசையும் கழுவிவிடும் என்று சொல்கின்றார்கள். இதை வேறு யாருக்கும் சொல்லவில்லை. அவருக்கும் சொல்லக் கூடாது. இது வஞ்சம் அல்ல ; ஆனால் என் கண்ணீரை அவர் கண்டு உருகச் செய்ய முடியாதல்லவா ? அண்ணிக்கும் அப்படியே சொல்லக் கூடாது. ஆனால் கண்ணீர் விட்டு விட்டு நான் என் அன்பைப் பெருக்கி அவருக்கு முழு அடிமை ஆன பிறகு வேண்டுமானால் சொல்லலாம்.

இண்டர்மீடியட் பாடப்புத்தகங்கள் இரண்டையும் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தேன். கூடத்தில் இருந்த அவர், இரண்டு கைகளையும் நீட்டி ஏந்திக்கொண்டிருந்தார். அவர் முன்னேற்பாடாக அவ்வாறு கை ஏந்தியிருந்தார். எனக்கும் அந்த நிலை இருந்திருந்தால், அந்த இரண்டு கைகளில் என்னையே ஒப்படைத்திருப்பேன். சூடுண்ட பூனை அல்லவா ? சந்தேகமும் பயமும் என்னை விடவில்லை. அந்தப் புத்தகங்களை மட்டும் அவருடைய கையில் வைத்து விட்டு அப்படியே

சமையலறைக்குள் சென்றேன்.

ஆங்கிலப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் சி. செந்தாமரை என்று என் பெயரையும் என் தந்தை சிவகுரு என்ற பெயரின் முதலெழுத்தையும் எழுதியிருந்தேன். அவரும் அண்ணியும் போன பிறகு, அந்தப் புத்தகத்தைப் பிரித்தால், அதன் கீழே அவருடைய விண்ணப்பம் இருந்தது. இளங்கோவின் செந்தாமரையாக என்னை வரவேற்றார். இ.செந்தாமரை என்று எழுதியிருந்தார். முழுப்பெயரும் இளங்கோ என்று எந்தப் பக்கத்தின் மூலையிலாவது எழுதியிருப்பாரோ என்று அந்தப் புத்தகத்தை ஏடுவிடாமல் பார்த்தேன். தமிழ் புத்தகத்தையும் பக்கம் பக்கமாகப் பார்த்தேன். "என்ன அம்மா, புத்தகத்தில் படம் பார்க்கிற நினைவு வந்துவிட்டதா?" என்று அண்ணன் கேட்டபிறகுதான் புத்தகத்தை மூடினேன். போதும்; அந்த ஓர் எழுத்தே போதும். 'இ' என்று என் பெயருக்கு முன் தலைப்பெழுத்தாக எழுதினாரே, அந்த ஓர் எழுத்துக்கே என் உயிரையும் உள்ளத்தையும் உடம்பையும் அவருக்கு விற்றுவிட்டேன். எது வந்தாலும் வரட்டும். அண்ணியின் நம்பிக்கைக்கு உரிய அவர் என்னைக் கைவிடமாட்டார் என்று துணிவு கொண்டேன்.

மருதப்பரைப் பற்றி அப்படி ஒருவகைத் துணிவும் நான் கொண்டதே இல்லை. ஆனால் என்னை அறியாமல் ஒருவகைக் கவர்ச்சி இருந்தது. என் மனம் அவரை நாடியது. அவர் பார்த்த பார்வையும் கவர்ச்சியான பார்வை. அது என் கண்களை விட்டு நீங்காமல் நின்றது. எப்படியோ மேசைப் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன்; காகிதம் எடுத்தேன். பென்சில் எடுத்தேன்; ஓவியம் எழுதினேன். அவருடைய உருவம் என் உள்ளத்தில் பதிந்திருந்தபடியே எழுதினேன்.

பக்கத்தில் அமர்ந்திருந்த அவருடைய உருவத்தையும் என்னவோ நினைத்துக்கொண்டே எழுதி முடித்தேன். அதுவரையில் நான் செய்த தவறு தெரியவில்லை.

என் பெயரை வழக்கம் போல் கீழே எழுதினேன். ஒரு கேள்விக்குறி இட்டேன். அதற்குள் அண்ணி வந்தாள். அவளுக்குக் காட்டினேன். அவள் தன் அண்ணனுடைய படம் இருப்பதால் தனக்கு வேண்டும் என்று கேட்டாள். அதில் இளங்கோ நன்றாக இல்லை என்றும், அவருடைய முகம் நன்றாக அமைந்த படம் தனியே எழுதித் தருவதாகவும் சொன்னேன்.

சிறிது நேரம் கழித்துத் தனிப்படம் எழுத உட்கார்ந்தேன். என் கண் எதிரே மருதப்பரின் உருவம் வந்ததே ஒழிய இளங்கோவின் உருவம் நிற்கவில்லை. அகக்கண்ணில் பதியாத உருவம் கலைஞன்கையில் ஓவியமாக எப்படி நன்றாக உருப்பெற முடியும்? என்னுடைய கையோ மருதப்பருடைய உருவத்தையே எழுதத் துடித்தது.

"முன்னே இளங்கோவின் உருவம் எழுத வந்ததே, இப்போது ஏன் வரவில்லை" என்று எண்ணினேன். காரணம் விளங்கியது. ஒரு பசுவின் உருவத்தை உள்ளத்தில் பதித்த ஓவியக்காரன் அந்தப் பசுவை எழுதும்போது அதன் சூழ்நிலையை இயல்பாக எழுதிவிடுவான். ஆனல் பசு இல்லாமல் சூழ்நிலைமட்டும் நன்றாக எழுத முடியாதல்லவா? எனக்கும் அப்படியே. மருதப்பரே என் மனத்தில் பதிந்திருந்தவர். அவரை விட்டு அவருடைய சூழ்நிலையைமட்டும் சிறப்பாகத் தனியே எழுத முடியாமல் திகைத்தேன். காகிதத்தையும் பென்சிலையும் எடுத்து மேசையறையில் வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தேன்.

அந்த மருதப்பருடைய உருவம் வந்து நின்றது;

அந்தக் கவர்ச்சியான பார்வை வந்து நின்றது. அவர் அண்ணிக்குச் செய்த உதவி நினைவுக்கு வந்தது. சைக்கிலில் அடிபட்டபோது மருந்துகொண்டு வந்தது, கட்டுக் கட்டியது, வழிகாட்டி அழைத்துக்கொண்டு வந்தது — இந்தக் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக என் முன் வந்து நின்றன. ஒவ்வொன்ருய் என் நெஞ்சத்தை உருக்கிக்கொண்டே வந்தன.

"அவர் யாரோ? அவரை நான் ஏன் இப்படி வேலை கெட்டு நினைக்க வேண்டும்? கவர்ச்சியான பார்வையாக இருந்தால் அவர் வரைக்கும் இருக்கட்டும், நமக்கென்ன?" என்று வந்த எண்ணங்களைத் தடுத்திட முயன்றேன், முடியவில்லை. சிறந்த அறிஞர் என்றும், 'தென்றல்' பத்திரிகையின் துணையாசிரியர் என்றும் இளங்கோ சொன்னதை நினைத்தேன். நான் முந்திரிக் கொட்டை போல் "தென்றல்" பத்திரிகை படிப்பதாக விளம்பரப்படுத்திக்கொண்டேன்; 'ஊர்வம்பும்' 'மன்' என்ற புனைபெயருடன் வரும் கதைகளும் எழுதுவதாக அவர் சொன்னர். இவையெல்லாம் தொடர்ந்து நினைவுக்கு வந்தன. அவர் அந்தப் பதில் சொன்ன போது என்னைப் பார்த்துத்தான் சொன்னர். அப்போது பார்த்த பார்வைதான் என்னைக் கவர்ந்த பார்வை. அவருடைய பதில் நினைவுக்கு வந்த அதே நேரத்தில் அந்தப் பார்வையும் என்முன் வந்துநின்றது. அப்போது என் நெஞ்சம் என்னை அறியாமல் நீராய் உருகியது. ஏன்? அந்தப் பார்வை அமைந்த உருவம் தான் என் ஓவியத்தில் இருப்பது. நேரில் பார்த்தது ஒருமுறை; எழுதிப் பார்த்தது பலமுறை; நினைத்துப் பார்த்தது பலமுறை; கடைசியாக இப்போதுதான் நான் துன்பம் மிக்கவள் ஆனேன். பெருமூச்சு விட்டேன். எழுந்தேன். இங்கும் அங்கும் திரிந்தேன்.

மறுபடியும் நாற்காலியில் வந்து சாய்ந்தேன்.

அண்ணி சொன்ன உதவி நினைவுக்கு வரத் தொடங்கியது. சைக்கிலில் அடிபட்டபோது அவர் மருந்து கொண்டு வந்த காட்சி வந்தது. அண்ணி வழி தவறியதற்குப் பதில் நான் வழி தவறிப் போய்ச் சைக்கிலில் அடிபட்டிருந்தால்—, அவர் எனக்கு மருந்து கொண்டுவந்து இட்டு உதவி செய்திருந்தால்—, துணியால் கட்டுக் கட்டியிருந்தால்— என்று புதிய புதிய எண்ணங்கள் எழுந்து என்னை அல்லல்படுத்தின. நான் திரும்பி வீட்டுக்கு வராமல் அந்த மருதப்பருடன் அங்கேயே தங்கி வாழ்ந்திருந்தால்—-என்று இந்தக் கற்பனை வந்ததும் என் நெஞ்சின் வேகம் அளவு கடந்து போயிற்று. அந்த மேசையறையைத் திறந்து ஓவியத்தை எடுத்துமருதப்பரை என் கண்களில் ஒத்திக்கொண்டு கண்ணாரப் பார்த்தேன்.

நுங்கம்பாக்கம் போய் அந்தத் தெரு வழியாக நடந்தால் அவரைப் பார்க்க முடியாதா என்று ஏங்கினேன். ஆனால் அவருடைய முகவரி கேட்டு வாங்கவில்லை. அண்ணியைக் கேட்டுப் பார்க்கலாம் என்று எழுந்தேன். அவளை நெருங்கினபோது, "பூங்கொடியை நினைத்துக்கொண்டிருக்கிறாயா, அண்ணி?" என்று கேட்டுவிட்டுத் திரும்பினேன்.

எத்தனையோ ஆண்மக்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் மருதப்பர் மட்டும் ஏன் என் மனம் கவர்ந்தார் என்று எண்ணினேன். அவர் தோற்றம் ஒரு தனித் தோற்றம்; அதுவும் அல்ல, முகத்தில் ஒரு தனி அழகு; அதுவும் அல்ல, கண்ணில் ஒரு தனிப்பார்வை; அதிலும் ஒரு தனிக் கவர்ச்சி என்று எண்ணிக்கொண்டே என் மனத்தைக் கவர்ந்த பொருள் தெரியாமல் தேடினேன்.

அன்று இரவு உணவு உண்ணவும் மனம் இல்லை. "உடம்பு எப்படியோ இருக்கிறது" என்று அண்ணியிடம் பொய் சொல்லி உறங்கப் போனேன்.

மறுநாள் மாலை கல்லூரியிலிருந்து பழைய சோர்வோடு திரும்பியபோதுதான் கை ஏந்தி உட்கார்ந்திருந்த கடவுளைக் கூடத்தில் கண்டேன். புத்தகத்தை அவருடைய கையில் வைத்துவிட்டுச் சமையலறையில் நுழைந்தேன். கொஞ்சமும் பொறுத்திராமல், "இன்னொருவர் எங்கே?" என்று அண்ணியைக் கேட்டேன். பாலுக்குச் சர்க்கரை இட்டுக் கலக்கும்போது, கரண்டி தடுக்கிப் பால் கவிழ்ந்தது போல் ஆயிற்று என் நிலைமை.

மருதப்பர் மனைவியோடு வரப்போவதாக அண்ணி சொன்னாள். என்னை நொந்துகொண்டேன். என் ஓவியத்தை நொந்தேன். எழுதிய கையையும் நொந்தேன். என் கண்ணையும் நொந்தேன்.

உள்ளொன்று புறமொன்று இல்லாத கரவற்ற அந்த அம்மா மருதப்பருக்கு மனைவியாக இருக்க, என் மனம் அவரை நாடியது குற்றம்தானே! அந்த அம்மா யாராக இருந்தால் என்ன? திருமணமான ஒருவரை நான் விரும்பலாமா? அவருடைய பார்வை எவ்வளவு கவர்ச்சியாக இருந்தால் என்ன? என்னைப் போன்ற ஒரு பெண்ணின் வாழ்வுக்கு நஞ்சு அல்லவா அது? இரண்டே நாள் இருந்த அந்தப் பாழும் உறவிலே முன்னே நான் பட்ட பாடு—என் மனம் உடைந்து வருந்திய வருத்தம்—அப்படியிருந்தால், சில ஆண்டுகள் வாழ்க்கை நடத்தின பெண்ணின் மனம் முறிந்தால் எவ்வளவு துயரம் நேரும்? வாழ்க்கை என்ன ஆகும்? இவ்வாறு கலங்கிச் சமையலறையில் உட்கார்ந்தவாறு சோர்ந்துவிட்டேன். அண்ணி என்ன

என்னவோ சொன்னாள், கேட்டாள். எல்லாவற்றிற்கும் செவிடாக இருந்தேன்.

குற்றம் செய்தேன் என்று ஒரு பக்கம் வருந்தினேன். இரண்டு நாளாகக் கண்டும் நினைத்தும் ஓவியம் எழுதியும் அதைப் பார்த்தும் கட்டிய காதல்கோட்டை இடிந்த ஏமாற்றம் ஒருபக்கம் வருத்தியது.

"திருமணமான ஆண்மகன் ஒருவன் மற்றொரு பெண்ணை ஏன் அப்படிப் பார்க்கவேண்டும்? மருதப்பர் தம் மனைவியை மறந்து இப்படிப் பிறர் மனத்தைக் கவரலாமா?" என்றும் எண்ணினேன். ஆண்கள் தவறு செய்வதும், பெண்கள் ஏமாற்றம் அடைவதும் உலக அமைப்போ என்று பெமூச்சு விட்டேன்.

சமையலறையில் இருந்தபடியே அந்த ஓவியத்தை நினைத்தேன். அன்று மருதப்பரும் இளங்கோவும் வந்து போனபிறகு என் மனத்தில் அவர்களின் உருவம் இயற்கையாகப் பதிந்துவிட்டது. மருதப்பரின் உருவமோ கவர்ச்சியாகிய உயிரும் பெற்று மனத்தில் உலாவியது. என்னை ஆட்டி வைத்தது அதுதான். என் வசம் இழந்து ஓவியம் எழுதி முடித்தேன். அந்த ஓவியம் எழுதாமல் இருந்திருந்தால் இவ்வளவு வருத்தமான ஏமாற்றம் ஏற்பட்டிருக்காது என்று எண்ணி, கற்ற ஓவியக் கலையை நொந்தேன். ஓவியம் ஏன் கற்றேன், ஏன் கற்றேன் என்று வருந்தினேன். 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்னும் பாட்டு என் செவியில் ஒலித்துக்கொண்டிருந்தது.

அறியாமையே பேரின்பம் என்னும் ஆங்கிலப் பழமொழியை நினைத்துக்கொண்டேன். இண்டர்மீடியட் படித்த பெண் இன்னல்பட வேண்டியதாக உள்ளது. வெறுங் கல்லூரிப் படிப்போடு நின்றுவிடாமல் பொழுதுபோக்காய்க் கற்ற ஓவியக்கலை, இன்னலைப்

பெருக்கி அணுவை மலையாக்கியது. படிப்பாலும் கலையாலும் உணர்வு நுட்பம் ஆக ஆக, சிறிய நிகழ்ச்சியும் பெரிதாகத் தோன்றிப் பெருந்துன்பம் தருகின்றது; பேரின்பமும் தருகின்றது. ஆனால் படிப்பு இல்லாமல் கலையுணர்வு இல்லாமல், ஆடு மாடு போல் வாழும் பெண்ணாக இருந்திருந்தால், இவ்வளவு துன்பமும் இல்லை; இன்பமும் இல்லை.

கலைகளிலே ஓவியக் கலை பொல்லாதது, மிகப் பொல்லாதது என்னும் முடிவுக்கு வந்தேன். ஒரு நொடிப்பொழுது கண்ட ஒரு தோற்றம் விரைவில் மறைந்துபோயிருக்கும்; அறிவற்ற உணர்வற்ற பெண்ணாக இருந்திருந்தால் உடனே மறந்துபோயிருக்கும். அறிவும் உணர்வும் பெற்ற பெண்ணுக்கு ஒரு நாழிகை நேரம் மறக்காமல் நிற்கும். ஓவியக்கலை வல்ல நானோ, அதை அழியாமல் நிலைபெறச் செய்தேன்; உள்ளக்கிழியில் பதித்து அழியா வாழ்வைத் தந்தேன். அதனால்தான் இப்படிப்பட்ட வருத்தமும் ஏமாற்றமும் அடைந்தேன். கலையறியா நெஞ்சம் கல் நெஞ்சம், மண் நெஞ்சம், மர நெஞ்சம். காதல் என்னும் கதிரவனுக்கு எதிரே இந்தக் கல்லும் மண்ணும் மரமும் உருகுவதில்லை. மெழுகுதான் உருகும். ஓவியக் கலையால் என் கல் நெஞ்சம் மெழுகாய் இளகியுள்ளது. அந்தக் கலையைத்தான் நொந்தேன்.

என் உள்ளக்கிழியில் மருதப்பர் மெல்ல மெல்ல நீங்கினார். உடனே, இளங்கோ வந்து சேர்ந்தார். அவருடைய ஏந்திய கைகள், ஆவலோடு நோக்கிய கண்கள் இவைகளுக்கு அழியா வாழ்வைத் தருமாறு என் அறிவு தூண்டிற்று. சமையலறையை விட்டு மெல்ல எழுந்து வெளிவந்தேன். கலைத் தொழில் ஒரு படைப்பு வேலை. அதைக் கற்றுக்கொண்ட கலைஞர்கள்

எந்தத் துன்பத்தையும் துரத்தலாம் என்று ஓர் அறிஞர் எழுதியிருக்கிருர். பாடும் புலவன் புதிய கற்பனை ஒன்றைப் படைத்து அதற்கு வாழ்வுதரப் பாட்டெழுதத் தொடங்கிவிட்டால், உலகம் புரண்டாலும் அவனுக்குப் பெரிதாய்த் தோன்ருதாம். பாடும் புலவன் ஓவியக் கலைஞனைவிடப் பெரியவன். ஏனென்ருல் அந்தப் புலவன் தன் துன்பத்தையே திரும்பி நோக்கி அதைப் பாட்டாக வடிக்கலாம். உலகம் அதைச் சிறந்த காவியம் எனப் பாராட்டும். புலவனும் பாட்டு முடிந்தவுடனே கவலையைக் கலையாக்கிய பெருமையோடு இறுமாந்து திரிவான். ஆனல், நானே என் துன்பத்தை எவ்வாறு எழுதுவேன்? மருதப்பரை எழுதவோ கைவரவில்லை; என் மனநிலையை எழுதவோ எனக்கே தெரியவில்லை. இது ஓவியக் கலையின் குறையோ, நான் கற்ற கலையளவின் குறையோ, தெரியவில்லை.

ஆனல் நானும் என் உள்ளத்தை ஓவியமாக்க எண்ணினேன் — பழைய துயரை அல்ல, புதிய விருந்தை. கைஏந்திக் கூடத்து நாற்காலியில் இருந்த இளங்கோவை எழுதத் துணிந்தேன். இந்தப் படைப்பு வேலை இல்லாதிருந்தால் அன்று மாலை நான் அரைப்பைத்தியம் ஆகியிருப்பேன்.

# திருநாதன்

இந்த மார்ச்சு மாதத்தோடு தேர்வு முடியப் போகிறது. அப்புறம்தான் வாழ்க்கைப்போர் தொடங்கும் என்று இருந்தேன். ஆனால் நாம் எதிர்பார்க்கும் நாளில் அது வருவதில்லை. முன்னே வருவதும் உண்டு. பின்னே வருவதும் உண்டு. பின்னே வந்திருந்தால் நல்லது; தேர்வுக்கு இடையூறு இல்லாமல் இருக்கும். ஆனால் முன்னே வந்துவிட்டது. "ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்."

திருமணமே செய்துகொள்ளாமல் வாழ்க்கையை நடத்திவிடலாம் என்று பலமுறை முடிவு செய்தது உண்டு. அது பொருத்தமான முடிவுதான். என்னைப் போல் அமைதியை விரும்புகிறவர்களுக்கு இந்தக் காலத்து ஆரவாரப் பழக்கம் இல்லாமல் போகிறது. ஆனால் உலகமோ ஆரவாரம் நிறைந்தது. ஆதலால் உலகத்திற்குத் தகுந்தவாறு ஆரவாரம் இல்லாதவர்கள் குடும்ப வாழ்க்கை நடத்த முடியாது. வருகிற மனைவி எந்தப் போக்கில் பழகியிருப்பாளோ? நல்லவளாக இருந்தாலும் சுற்றுப்புறம் கெடுத்துவிடுவது இயற்கை. ஆகையால் திருமணம் செய்துகொள்ளாத

தனி வாழ்க்கை நல்லது என்றே பலநாளாக எண்ணித் துணிந்திருந்தேன்.

பேராசிரியர் மகாதேவனிடம் படித்ததால் பல உண்மைகளைக் கற்றுக்கொள்ள முடிந்தது. தத்துவத்தைப் பாடமாக எடுத்துக்கொண்டு எம். ஏ. படிப்பவர்கள் அவற்றைத் தெரிந்துகொள்ளாவிட்டால் பயன் இல்லை. அவற்றை உண்மை என்று நம் நாட்டுப் பெரியவர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளாக எடுத்துக்கூறிவருகிறார்கள். ஆனால் கற்றவர்களாவது அந்த நெறியில் நிற்க வேண்டாவா? எம். ஏ. படித்து விட்டேன். தத்துவ நூலில் வல்லவன் என்று மேடையில் விளம்பரப்படுத்திக்கொண் டிருக்க எனக்கு விருப்பம் இல்லை. கற்றநெறியில் நிற்க வேண்டும். அதற்காகத்தான் தனிவாழ்க்கையைத் துணிந்திருந்தேன்.

நல்ல காலமாக என் துணிவு என்னோடு நின்றது. அதை யாருக்கும் சொல்லவில்லை. தன் உள்ளத்திற்கே உறுதியாகும் துணிவுகளைப் பிறருக்கு எடுத்துச்சொல்வது உள்ளத்தின் உறுதியைக் குறைக்கும். உளநூல் வல்லவர்களின் கருத்து இதுதான். அதனால் வெளியிடாமல் இருந்தேன். கோவில் சொற்பொழிவு செய்கிறவர்கள் எல்லா உண்மைகளையும் வாயாரச் சொல்லிச் சொல்லித் தங்கள் வாழ்க்கையில் ஒன்றையும் கடைப்பிடிக்காமல் அழிகிறார்கள். அப்படி ஆவதில் பயன் என்ன?

என் தமக்கைக்கும் அத்தானுக்கும் கூடச் சொல்லாமலிருந்தது நல்லதுதான். சொல்லியிருந்தால் இப்போது என் மனமாற்றத்தைக் கண்டு சிரிப்பார்கள். அவர்கள் சிரிப்பதால் எதுவும் கேடு இல்லை. ஆனாலும் அதற்கு ஏன் இடம் தர வேண்டும்?

தமக்கைக்கும் அத்தானுக்கும் நுட்பமாகத் தெரிந்

திருக்க வேண்டும். அதனால்தான், தங்கையை என்னோடு படிக்கவைத்தார்கள். அவள்வழியாகப் பல பெண்கள் என்னோடு பழகநேரும் என்றுதான் எண்ணியிருப்பார்கள். இப்போது கடிதம் எழுதி என்னை வருவித்து, என்னோடு திலகத்தை அனுப்பியதிலும் இந்தக் கருத்து இருக்க வேண்டும்.

அப்படியானால் அவர்கள் செய்த முயற்சி வெற்றி பெற்றது என்றுதான் சொல்ல வேண்டும். அவள் எனக்குப்பொருத்தமானவள்தான். என்னைப்போலவே அமைதியானவள். படபடப்பும் பரபரப்பும் இல்லாதவள். செந்தாமரையை நான் வெறுப்பதற்கு இது தானே காரணம்? தங்கையாக இருந்தாலும் என்ன? கல்லூரியில் படித்தால் தலைகால் தெரியாமல் போய் விடுவதா? கல்லூரியில் படிக்காத திலகம் அவளை விட ஆயிர மடங்கு மேலானவள்.

தங்கை கெட்டவள் அல்ல; செல்வமாக வளர்ந்தவள்; கவலை தெரியாதவள்; வாழ்க்கையைப் பற்றிய பயம் இல்லாதவள்; இளங் கன்று; துள்ளுகின்றாள். திலகத்தோடு சிலநாள் பழகின அளவில் எவ்வளவோ திருந்திவிட்டாள் என்று சொல்லலாம். அதிலும் ஒரு வாரமாகப் பார்த்தால் மிக ஒழுங்காக இருக்கிறாள். அவளுக்கும் ஒரு திருமணம் கூடிவிட்டால் குடும்பம் அமைதியாகும். திலகமும் நானும் வாழத் தடை இருக்காது.

திலகத்திற்கு என்மேல் அன்பு உண்டோ, இல்லையோ என்று ஐயம் இருந்தது. "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலார் கண்ணே உள" என்று திருவள்ளுவர் சொன்னார். இருந்தாலும், அப்படிப் பொதுநோக்கைக் கண்டு காதல் ஆராய்ச்சி செய்வது அருமையானது. அதுவும் தவிர, அவள்

என்னைப் பார்க்கும்போது, எதிர்நோக்காகப் பார்க்க என்னால் முடியவில்லை. அவளுக்கு இருக்கும் நாணத்தைவிட எனக்கு மிகுதியாக இருக்கும் போல் தோன்றுகிறது.

நாணம் குறைந்த பெண்களிடம் பேசும்போது நாணம் இல்லாமல் நான் பேச முடிகின்றது. ஆனால் நாணம் நிறைந்த பெண்களின் முன்னிலையில் நானும் அவர்களைப் போல் ஒரு பெண்ணாகிவிடுகின்றேன். இதை இனிமேல் என்னால்மாற்றிக்கொள்ள முடியாது; திலகம் நாணம் நிறைந்தவள். அவளைப் பார்க்க எனக்கு நாணமாய் இருந்தது. "அவளுக்கு என்மேல் அன்பு இல்லையானால், நான் பார்த்தால் அவள் வெறுப்பு அடைவாள் அல்லவா?" என்று பலவாறு எண்ணிக்கொண்டு அமைதியாய் இருந்தேன். ஆனாலும், என்னை அறியாமல் ஒருவகை உணர்வு என் உள்ளத்தில் இருந்தது. தமக்கை தங்கை முதலிய மற்றவர்களிடம் செலுத்தும் அன்பு வேறுதான்; திலகத்தைப் பற்றி என் உள்ளத்தில் உள்ள அன்பு வேறுதான்.

வழி தவறி நுங்கம்பாக்கம் போய்விட்டாளே, அன்றைக்கு என் வருத்தம் செந்தாமரைக்கும் தெரிந்துவிட்டது. "வருவாள் அண்ணா, அதைப் பற்றிக் கவலை வேண்டா" என்று எனக்கு அவள் தேறுதல் கூற வந்துவிட்டாள் அல்லவா? எம். ஏ. படிக்கின்ற அண்ணனுக்கு இண்டர்மீடியட் படிக்கின்ற தங்கை ஆறுதல் கூறினாள். அவ்வளவு வருத்தம் என் முகத்தில் இருந்திருக்கும். உண்மைதான். அவளைத் தேடிக்கொண்டு சாலையில் போனபோது எதிரில் வந்ததைப் பார்த்ததும் புதையல் கண்டவனைப்போல் மகிழ்ந்தேன் அல்லவா?

இந்த ஒன்றை எண்ணினல் இப்போதும் என் உள்ளம் குளிர்கின்றது. அவள் யாரோ? எந்தக் குடும் பத்துப் பெண்ணே? பெற்ருேரும் யாரோ? நான் யார்? எந்தக்குடும்பத்தான்? என் உறவும் நிலைமையும் என்ன? மருதப்பன் முன்னே வழி காட்டிக்கொண்டு வந்தான். பின்னே அவள் வந்தாள். என்னைப் பார்த்ததும் நின்ருள். மருதப்பனை விட்டுவிட்டு என் பின்னே வந் தாள். அவனும் அயலான்தான்; நானும் அயலான் தான். அவனை விட்டுவிட்டு என் பின்னே வந்தாள். சில நாள் பழக்கம்தான் என்று என்னைப் புறக்கணிக் காமல் உண்மையான அன்போடு வந்தாள் அல்லவா?

மருதப்பனைப் பற்றி எல்லோரும் சிறப்பாகவே பேசுகிருர்கள். நான் வழக்கம் போல் அவனிடமும் மிகுதியாகப் பேசவில்லை. பழக்கமில்லாமல் எப்படித் தான் மணிக் கணக்காகப் பேசிக்கொண் டிருப்பது? அவன் பி. ஏ. படித்தவன். அவனுடைய மனைவியோ உயர்நிலைப்பள்ளியை எட்டிப் பார்க்காதவளாம். அன் றைக்கு வந்தார்கள்; அமைதியாக இருந்து பழகினர் கள். நல்லகுடும்பம் என்றுதான் தெரிகிறது. போதாதா அவ்வளவு வாழ்க்கை? மருதப்பனைவிட அவள் அறிவிலும் படிப்பிலும் குறைந்தவளாக இருந்தாலும் தூய்மையான சிறந்த வாழ்க்கை வாழ முடிகிறது. திலகம் பத்தாவது படித்திருக்கிருள். அதுவே போதும். தாய்மொழியில் அவள் தாயுமானவர் படிப் பாள், நான் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள பாடல் களைப் படிப்பேன். இதுதானே வேற்றுமை?

இளங்கோவைப் பற்றி அவ்வளவு உயர்வாகச் சொல்ல முடியவில்லை. ஆனலும் கற்றவன், கலை யுணர்வு உடையவன் என்று சொல்லலாம். இந்தக் காலத்து நாகரிகத்துக்கு அடிமை என்று சொல்லலாம்.

அது ஒரு குறை அல்ல. அப்படி இருப்பவர்கள் பலர் மிக நல்ல வழியில் திருந்திவிடுகிறார்கள். சுவாமி இராமதீர்த்தர், விவேகானந்தர் முதலானவர்கள்நாகரிக மான இளமை வாழ்வைக் கண்டவர்கள் அல்லவா? இளங்கோவின் மனம் நல்ல மனமாகத்தான் இருக்கும் என நம்புகிறேன். திலகத்தை உயிராக மதிக்கிறான்; உண்மையான அன்பு காட்டுகிறான். நான் பார்த்ததே இரண்டு முறைதானே? நன்றாகப் பழகவில்லை; பழகினால் தெரியும்.

அவன் செந்தாமரையைக் காதலிப்பதாகத் தெரிகிறது. அந்த மடப்பெண் எளிதில் நம்பிவிடுவாள். அதன் பிறகு ஏமாற்றம் அடைந்தால் ஏங்குவாள். சென்ற ஆண்டில் நடந்தது அதுபோல்தான் என்று தோன்றிற்று. அப்புறம் அந்தப் பேச்சோ நடையோ இல்லை. இளங்கோ அவளுக்கு நல்ல துணைதான். ஆனால் அவசரப்படாமல் பொறுத்தார்களானால் இருவருக்கும் நன்மை உண்டு. மருதப்பனுடைய நண்பன், திலகத்தின் அண்ணன்—இந்த இருவகையிலும் பார்க்கும்போது அவன் நல்லவனாக, உண்மையுள்ளவனாகத் தான் இருக்க வேண்டும். அவளும் விரும்புகிறாள் என்று தெரிகிறது. போதுமே!

மேசையின்மேல் நேற்றுச் சாக்குத் துண்டால் 'இளங்கோ' என்று எழுதியிருந்தது. அவனுடைய கையெழுத்துத்தான். திலகம் அப்படி எழுதமாட்டாள்; அந்தத் துடுக்கான பழக்கம் திலகத்துக்கு இல்லை. கீழே செந்தாமரை என்ற பெயரும் எழுதி அடித்திருந்தது. அடித்திருந்தபடியால் அது யாருடைய கையெழுத்து என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

மருதப்பன் வீட்டுக்கு இந்த ஞாயிற்றுக்கிழமை விருந்துக்குப்போகப்போகிறோம். அப்போது அவனைக்

கேட்டால் என்ன? அவனைக் கேட்பதென்றால் எப்படித் தொடங்குவது? நாமாகப் பெண் கொடுப்பது போல் ஆகுமே! அது நாகரிகமாகத் தெரியவில்லையே.

தமக்கையார் இங்கே இருந்தால் அந்தப் பொறுப்பு அவர்களைச் சாரும். இப்போது நான் பெரியவன், ஆனதால் தங்கையைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டியதாகத் தெரிகிறது. தங்கைக்கு விருப்பம் என்று நன்ருகத்தெரிந்துவிட்டது. அதனால்தான் அவள் ஐந்தாறு நாளாக மிகவும் அடக்கமாக மாறிவிட்டாள். உள்ளத்தில் காதல்போராட்டம் வந்துவிட்டது. பழையபடி இளங்கன்றுய்த் துள்ள முடியவில்லை. இளங்கோவுக்கும் அவள்மேல் விருப்பம் இருப்பது நன்ருகத் தெரிகிறது.

நம்முடைய குடும்பமோ பழிப்புக்கு இடமான குடும்பம். நாம் எவ்வளவு தூய்மையாக நடந்தாலும் நான்கு தலைமுறைக்கு முன்னே செய்த தவறு முன்வந்து நிற்கும். உலகம் அவ்வளவு முற்போக்கான உலகம் அல்ல. ஒரு வேளை எல்லா ஏற்பாடும் முடிந்த பிறகு இளங்கோவின் தாய்க்குப் பிடிக்கவில்லை என்ருல் செந்தாமரையின் வாழ்க்கைக்குப் பழிதானே? தவிர, உறவினரின் வீட்டில் பெண் இருக்கலாம். அம்மான் பெண், அத்தை பெண் என்று பழங்கால முறைப்படி இருக்கலாம். முன்னே அவர்கள் கொடுக்க மறுத்திருக்கலாம். இப்போது வேறு ஏற்பாடு என்று கேள்விப்பட்டால் நான் நீ என்று வலிய வந்து வற்புறுத்தலாம். உறவினர்கள் கண்ணீர் விட்டு வற்புறுத்தினுல் இணங்கக் கூடிய மென்மை இளங்கோவுக்கு இருக்கலாம். எவ்வளவு இடர்? யாரைக் கேட்பது?

திலகத்தையும் வேறு யாருக்காவது திருமணம் செய்து கொடுத்துவிட ஏற்பாடு நடத்தலாம். ஆனல்

அது நடக்காது. அவள் என்னைப் போல அமைதி யானவள். ஆகையால் அமைதிக்குத் தகுந்த உறுதி யும் இருக்கும். உறுதி தளராது. இளங்கோ போன்ற பரபரப்பு உடையவர்களுக்குத்தான் உறுதி இருப்பது அருமை. இன்றைக்கு ஒன்றைப் பற்றுவார்கள். நாளைக்கு வேருென்றைப் பற்றுவார்கள். திலகம் மாறவே மாட்டாள். ஆனல் இளங்கோ?

இதைத் தெரிந்துகொள்வது யார்? அவனுடைய தாயின் மனம் எப்படி இருக்குமோ? திலகம் அன்று வேப்பேரிக்குப் போய்ப் பெரியம்மாவைப் பார்த்தாள். அங்கே ஏதாவது திருமணப் பேச்சு நடந்திருக்கும். உண்மைகள் விளங்கியிருக்கும். ஆகையால் திலகத்தையே கேட்டுவிட்டால் — அதுதான் நல்லது. இளங்கோவின் குணத்தைப் பற்றியும் அவளைவிட நன்ருக அறிந்தவர் யார்? அறிந்திருந்தாலும் அவளைப் போல உண்மையை ஒளிக்காமல் சொல்லக் கூடியவர் யார்? ஆகையால் அவளையே கேட்பேன்.

திருமணத்தைப் பற்றி அவளை எப்படிக் கேட்பது? அதற்குத் தகுந்த வாய்ப்பு வேண்டும். நானே கூச்சக்காரன். அது இப்போது கெடுதியாகத் தெரிந்தாலும் என் வாழ்க்கையில் அது எவ்வளவோ நன்மை செய்திருக்கிறது. இதுவரையில் காமுகனுகி நான் கெடாமலிருந்தேன் என்ருல் என் நாணம்தான் முக்கியமான காரணம் என்று சொல்வேன். மனத்தில் எண்ணித் துணியாவிட்டால் வாயில் வராது. மனத்தில் எண்ணுவதென்ருல் தகாதலைத எண்ணுவதற்குள் பெரிய போராட்டம் நடந்து தடுத்துவிடும். அப்படி எண்ணினுலும் வாய்ச்சொல் வராது. இது நன்மை செய்தது போய்த் தீமையும் செய்திருக்கிறது. ஒரு கூட்டத்தில் சொற்பொழிவாளருக்கு ஒரு பாட்டு நினை

வுக்கு வராமல் தடுமாறும்போது, எல்லாரும் திகைத்துக்கொண்டிருக்கும்போது எனக்கு நினைவு வரும். ஆனால் சொல்லத்தயங்குவேன். யாராவது சொல்லிப் புகழ் பெற்றுக்கொள்வார்கள். இபபடி எத்தனையோ முறை நல்ல வாய்ப்புகளை நெகிழவிட்டேன். ஆனால் நன்மையும் சிலமுறை பெற்றிருக்கிறேன். தவருன ஒன்றைச் சொல்லவோ, பொருந்தாத கேள்வியைக் கேட்கவோ மனம் எண்ணியிருக்கும். ஆனால் வாயில் சொற்களை வெளிவிடாமல் தடுத்துவிடுவேன். அந்தச் சமயம் போனதும் என் தவறுகள் விளங்கும். சொல்லியிருந்தால் கெட்ட பெயர் வந்திருக்கும். சொல்லாமல் தப்பினேன் என்று எண்ணி மகிழ்வது உண்டு.

இனிமேலும் அந்தப் பழக்கம் விடாது. அது இயற்கையாகிவிட்டது. ஆனால் இந்தக் கடமையைப் பொறுப்போடு நிறைவேற்ற வேண்டும். இதற்கு வேறு யாரைக் கேட்டும் பயன் இல்லை. திலகத்தைத்தான் கேட்க வேண்டும்.

திலகத்தைக் கேட்க வேண்டியதும் இல்லை. திலகமும் செந்தாமரையும் போன வாரத்தில் ஒருவரை ஒருவர் பெயரிட்டுத்தான் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். பிறகு 'அண்ணி' என்று செந்தாமரை அவளை அழைக்கத் தொடங்கினுள். ஒருநாள் என் எதிரிலேயே அப்படி அழைத்துவிட்டு நான் இருப்பதைப் பார்த்ததும் கையால் வாயை மூடிக்கொண்டு வெட்கமுற்று ஓடிவிட்டாள். அதற்கப்புறம் மெல்ல மெல்ல வெட்கம் போய் வெளிப்படையாகவே அண்ணிப் பட்டம் வழங்குகிறது. முந்தாநேற்று முதல் திலகமும் செந்தாமரையை அண்ணி என்று அழைப்பது கேட்டேன். திலகத்தின் வாயில் 'அண்ணி' என்று வருமானுல் அதில் எவ்வளவு பொருள் இருக்க

வேண்டும்? அதில் எவ்வளவு துணிவு இருக்க வேண்டும்? அவள் அதைப் பற்றி எவ்வளவு ஆராய்ந்து முடிவுக்கு வந்திருக்க வேண்டும்? இளங்கோவின் குணம்,செந்தாமரையின் குணம், பெற்ருேரின் நிலைமை, எதிர்கால வாழ்வு இவ்வளவையும் அவள் எண்ணிப் பார்த்துத்தான் அப்படி முடிவான கருத்துக்கொண்டிருக்க வேண்டும்? ஆகையால் இதுவே போதுமே? அவள் மற்றவர்களைப் போல் வேடிக்கைக்காகச் சொற்களை எடுத்துச் சொல்கின்றவளா? அல்லவே! அவள் வாயிளுல் அண்ணி என்று அழைத்தால் அது என் வாயிளுல் அத்தான் என்று அழைத்தது போல் அவ்வளவு ஆழமும் உறுதியும் உடையது அல்லவா?

எதற்கும் கேட்டுப் பார்ப்பதுதான் நல்லது. இன்று இரவே ஏன் கேட்கக் கூடாது? ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் நேரம் இருக்காது. விருந்தாளியாக மருதப்பன் வீட்டில் இருக்கும்போது பேச முடியாது. இரவே கேட்கலாம்.

இன்று இரவு செந்தாமரை தூங்கிய பிறகு திலகத்தை எழுப்ப வேண்டும். எழுப்பிளுல் தூக்கக் கண்ணில் அவள் என்னைப் பார்த்து என்ன எண்ணுவாளோ? ஆழ்ந்த அன்பு இருக்குமாளுல் உடனே என் அன்பை உணர்வாள். எப்படியும் உடனே பேச மாட்டாள். சிறிதுநேரம் அமைதியா யிருந்தால், மன வேகம் அடங்கும். அவளும் குழப்பம் தீர்ந்து அமைதியாக இருப்பாள். அப்போது இளங்கோவைப் பற்றிக் கேட்பேன்..

இன்று மாலை நான் வாங்கிக்கொண்டு வந்த இரண்டு வெள்ளைப் புடைவைகளில் ஒன்றை அவள் எடுத்துக் கட்டிக்கொண்டாள். அதை உடுத்துக் கொண்டு உலாவும்போது என் உள்ளம் உவந்தது.

செந்தாமரையின் புடைவைகளைக் கேட்டு வாங்கித் தானே உடுத்த வேண்டும்? நான் இரண்டு வாரத்திற்கு முன்னமே வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும். உடனே எண்ணிச் செய்யும் திறமை எனக்கு இல்லை. எண்ண ஆறுமாதம்; எண்ணியதைச் செய்ய அதற்கு மேல் ஆறுமாதம் — இது என் வழக்கம். ஞாயிற்றுக் கிழமை விருந்தாகப் போவதற்குமுன் அழகான புது நிறப் புடைவைகள் இரண்டு அல்லது மூன்று அவளுக்கென்றே எடுத்துவர வேண்டும். "எனக்கு இல்லையே" என்று செந்தாமரை எண்ணுவாள். எத்தனை இருந்தாலும் புதிய பொருள்மேல் ஆசைப்படுவது மனத்தின் இயற்கைதானே! நான்காக எடுத்துக்கொண்டு வந்தால் அவர்களே இரண்டு இரண்டு எடுத்துக்கொள்வார்கள்.

திடீரென்று நேற்று அத்தான் இருநூறு ரூபாய் அனுப்பினார். நான் கேட்கவில்லை; கடிதம் எழுதவில்லை; பணம் இன்ஷ்யூர் செய்த காரணம் என்னவோ தெரியவில்லை. தமக்கையின் ஏற்பாடாக இருக்கலாம். தம்பி இந்தப் பணத்தை என்ன செய்கிறான், பார்க்கலாம் என்று சோதிக்க எண்ணியிருக்கலாம். திலகத்திற்காகச் செலவு இருக்கும், அவள்மேல் அன்பு இருந்தால் அவளுக்குச் செலவு செய்கிறானா பார்க்கலாம் என்று அனுப்பியிருக்கலாம். இவ்வளவு நுட்பமாக அத்தானும் தமக்கையும் என்னை வழிப்படுத்த எண்ணியிருக்கிறார்கள். தம்பி திருமணம் செய்துகொள்வானா, சாமியாராக இருப்பானா என்று தமக்கைக்கும் கவலை இருந்திருக்கலாம். இரண்டு வாரத்திற்குமுன் அந்தக் கவலைக்கு இடம் இருந்தது. திலகத்தின் நெற்றியை, அங்கே விளங்கிய திலகத்தைக் கண்ட பிறகு அந்தக் கவலைக்கு இடம் இல்லை.

இன்று மாலை அந்த வெள்ளைப் புடைவை உடுத்துக்கொண்டு உலாவியபோது, வெள்ளைக்கலை உடுத்த கலைமகளாகிவிட்டாள். நான் எத்தனையோ ஏடுகளைப் படித்தேன்; புரட்டினேன்; புரண்டேன். அவை எல்லாம் நான் செய்த தவம். தவம் நிறைவேறிவிட்டது. வரம் கொடுத்து வாழ்விக்கும் தெய்வம் — கலைமகள் தெய்வம் — வந்துவிட்டது.

இந்த எளிமையான வெள்ளைப் புடைவை உடுத்துக்கொள்வதில் அவள் ஆனந்தம் அடைந்திருக்கிருள். பி. ஏ. வகுப்பில் படித்தபோது கற்ற அந்தக் குறுந்தொகைப் பாட்டு நினைவுக்கு வருகிறது. பாட்டு நினைவில் இல்லை. கருத்துத்தான் தெரிகிறது. பிராட்லே எழுதிய புத்தகமும் பிளாட்டோ எழுதிய நூலும் மனத்தில் வரிவரியாகப் பக்கம் பக்கமாகப் பதிந்திருக்கின்றன. ஆனால் ஒரு குறுந்தொகைப் பாட்டு நினைவில் இல்லை. ஒரு தலைவிதான் சொல்கிருள்; தோழிக்குச் சொல்கிருள். தன் தாய் வீட்டுத் தோட்டத்துத் தேன் கலந்த பால் அவளுக்கு இனிக்கவில்லையாம்; கணவனுடைய நாட்டுக் கலங்கல் நீர்தான் இனிக்கிறதாம். அந்தப் பாட்டு, வாழ்க்கையை எவ்வளவு நன்ருக எடுத்துக்காட்டுகின்றது! எட்டு ரூபாய்ப் புடைவை — எளிய வெள்ளைப் புடைவை — அவளுக்கு ஆனந்தமா யிருக்கிறது. அவளுடைய மகிழ்ச்சி, முகத்தில் ஒளி வீசுகிறது.

எனக்கும் அப்படித்தான் ஆய்விட்டது. பகல் உணவில் ரசத்தில் உப்பில்லாமல் இருந்தது. செந்தாமரையைக் கடிந்தாற் போல் கேட்டேன். விடுமுறையானதால் அவள்தான் சமைத்திருப்பாள் என்று கடிந்தாற் போல் கேட்டேன். அப்படிக் கேட்கிற வழக்கமே இல்லை. மனம் எங்கெங்கோ இருந்தபடியால்

கடிந்தாற் போல் கேட்டுவிட்டேன். "அண்ணி மறந்து விட்டிருப்பாள்" என்று செந்தாமரை சொன்னதும், ஏன் கேட்டேன் என்று வருந்தினேன். உடனே அதே ரசம் என் நாவிற்குச் சுவை மிகுந்ததாகிவிட்டது; இன்னும் கொஞ்சம் எடுத்துக் கையில்விட்டுக் குடித்தும் இன்புற்றேன். குறுந்தொகைக் காலத்தில் நான் இருந்திருந்தால், "மிளகு நீரில் உப்பு இடாமல் போனால் என்ன? சமைத்தவளின் அன்பைவிட வேறு சுவை ஏன்?" என்று பாடியிருப்பேன்.

குறுந்தொகைப் பாட்டை அந்தக் காலத்தில் ஆசிரியர் பாடம் சொன்னபோது வேப்பங்காயாக இருந்தது. இப்போது விண்ணோர் அமிழ்தமாக இருக்கிறது. இந்தச் சங்கப் பாட்டெல்லாம் காமம் தவிர வேறு இல்லையா என்று வெறுத்தேன். நாடி நரம்புகளை இந்த வகையான பாட்டுக்கள் கெடுத்துவிடும் என்று பக்கத்திலிருந்த மாணவர்களுக்குச் சொல்லலாம் என்று வாயெடுத்தேன். ஆனால் சொல்லவில்லை. ஒன்றும் சொல்லாமலேயே, 'கன்பார்ம்ட் பாச்சலெர்' (*confirmed bachelor*) என்றும், மருத்துவர் சோதனை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் என்னை எள்ளி இகழ்ந்தார்கள்.

அப்போது இருந்த நிலையை எண்ணிப் பார்த்தால், நாடி நரம்புகளின் அதிர்ச்சி தவிர வேறு ஒன்றும் நான் உணர்ந்ததாகத் தெரியவில்லை. உடம்பில் ஏற்படும் மாறுதல், இரத்தக் கொதிப்பு, நரம்பு அதிர்ச்சி இவையே காதல் என்று எண்ணிவிட் டிருந்தேன். காதல் என்பதும் காமம் என்பதும் ஒன்றே என்று இருந்தேன். பழைய பாட்டிலும் ஆசிரியர் பொருள் சொல்லும்போது அப்படித்தான் உணர்ந்தேன். ஆனால் இப்போது என் தவறு

உணர்கிறேன். நாவல்களை நான் படிப்பதே இல்லை. படித்தவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது கேட்கும் பழக்கமே மிகுதி. பிறகு நானும் இரண்டொரு நாவல் படித்தேன். அவற்றில் காதலர்கள் படும் துன்பம் எல்லாம் உடம்பைப் பொறுத்தே இருக்கும். என் கருத்தே உறுதியாயிற்று. வாழ்க்கையில் இந்த எண்ணம் வந்தபோது அனுபவம் அதை உறுதிப்படுத்தியது. ஆனால் எல்லாம் பொய்; எல்லாம் தவறு. காமுகரின் வாழ்க்கையில்தான் மண்டை இடி; காதலர் வாழ்க்கையில் மன இடிதான் மிகுதி என்று தெரிந்து கொண்டேன்.

உண்மையும் ஓரளவு உண்டு. உடம்பில் நிகழும் மாறுதலைவிட உள்ளத்துக் குழப்பம், கலக்கம், வேகம் இவையே மிகுதி என்பதை இப்போது உணர்கின்றேன். வெள்ளைக் கலையுடுத்த என் கலைமகளைக் கண்டபோது என் நரம்புகள் அதிர்ச்சி பெறவில்லையே. என் உள்ளம்தான் உருகிற்று; குளிர்ந்தது. ஒவ்வொரு வேளையில் அவளும் நானும் வீட்டில் தனியே இருக்கும் போது, நான் இருக்கும் பக்கமாக அவள் நடந்தால் அப்போது உடம்பும் ஒரு வகையாக உணர்ச்சிபெறும்; உடனே மாறும். அது சிறிது நேரமே. ஆனால் உள்ளத்து உணர்வு நெடுநேரம் நிலைத்திருக்கின்றதே. கதையாசிரியர்கள் அதை ஏன் அவ்வளவாக விளக்காமல், காமுகர்களாகிக் கெடுத்திருக்கின்றார்கள்? என் கைகள் அவளைப் பெற விரும்புகின்றன; உண்மையே. ஆனால் அவளிடம் சென்று ஒன்றுபட்டுக் குழைந்து உருகுவது என் உள்ளம்தானே? இதுதானே காமுகர் காணாதது?

அன்று அவள் வேப்பேரிக்குப் போயிருந்தாள். எனக்கு வீடு, வீடாக இல்லை; சிறையாகப் போயிற்று.

என் கைகளின் ஏக்கம் என்று சொல்ல முடியாது; கண்களின் ஏக்கம் என்று சொல்லலாம். கண்களும் அவளை எந்த நேரமும் பார்த்துக்கொண்டிருப்பதில்லையே. ஆகையால் உள்ளத்தின் ஏக்கம் என்றே உறுதியாகச் சொல்ல வேண்டும். கண்கள் அந்த உள்ளத்தின் சன்னல்கள்; அவ்வளவே.

தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணியை எடுத்துச் சிந்தாதிரிப்பேட்டைத் தமிழ்ச் சங்கத்தில் ஒருவர் பேசினார். இந்தத் தாயுமானவரும் இப்படிக் காதலைப் பாடிவிட்டாரா என்று அந்தக் காலத்தில் வெறுத்தேன். பாட்டின் அழகு, அவருடைய கடவுளன்பு ஆகியவற்றை நான் விரும்பினாலும் இந்தக் கிளிக் கண்ணி இப்படிக் காதல்பாட்டாக இருக்கிறதே என்று வெறுத்தேன். நம்மாழ்வாரின் நாயகி பாவத்தை ஆசிரியர் சொன்னபோதும் எனக்குக் கசப்பாக இருந்தது. என் அருமைத் திருக்குறளிலும் காமத்துப் பாலைத் தனியே கத்தரித்து எறிந்துவிட்டு என் விருப்பம் போல் பைண்டுசெய்து வைத்துக்கொண்டிருக்கிறேனே. எதை வெறுத்து ஏட்டில் இல்லாமல் செய்தேனோ, அது வாழ்க்கையில் வந்து வாய்த்தது!

என் திருமணத்தில் அந்தக் காமத்துப்பாலையும் மந்திரமாக ஓதவைக்க வேண்டும். திருமணம் எளிய முறையில் நடக்க வேண்டும். வேறு யாரும் வேண்டா. மருதப்பனும் அவன் மனைவியும் போதும். மந்திரக்காரனும் தந்திரக்காரனும் வேண்டா. ஆடம்பரமும் ஆரவாரமும் வேண்டா. மருதப்பன் போதும்; திருக்குறள் ஓதுவான். அவனுடைய மனைவி போதும்; ஆரத்தி சுற்றி வாழ்த்துவாள். இதற்குமேல் செய்தால் என் மனம் என்னைச் சுடும். எம். ஏ. படித்தும் கோழை என்று சுடும். தத்துவம் கற்றும்

மூடநம்பிக்கை போகவில்லை என்று சுடும். எல்லாம் தெரிந்தும் ஆரவார வெறி போகவில்லை என்று சுடும்.

இந்த ஞாயிற்றுக்கிழமை — நாளை மறுநாள் மருதப்பன் வீட்டுக்கு விருந்தினராகப் போகப் போகிறோம். மணமக்களாகவே போனால் என்ன? அது பொது இடம். எனக்கு, அவளுக்கு, செந்தாமரைக்கு, இளங்கோவுக்கு...எல்லாருக்கும் பொது இடம். ஆகையால் அங்கேயே திருமணம் செய்வது ஒழுங்குதான்; ஆனால்—.

இரவு எப்படியாவது அவளைக் கேட்டுவிட வேண்டும். இளங்கோவைப் பற்றி இரவே தெரிந்துகொண்டால் ஏற்பாடுகள் முடிந்தாற் போல் ஆகும். எதற்கும், தமக்கையும் அத்தானும் வர வேண்டும். காலையில் எழுந்ததும் தபாலாபீசுக்கு நேரே போய்ச் சித்தூருக்கு அவசரத் தந்தி கொடுத்துவிடுவேன். "நாளை... ஞாயிறு... திருமணம் இரண்டு—ஏற்பாடு முடிந்தது—மாலைக்குள் வருக" என்று தந்தி கொடுத்துவிட்டால் எல்லாம் தெரிந்து கொண்டு வந்துவிடுவார்கள். அவர்கள் எதிர்பார்த்துச் செய்த ஏற்பாடுதானே!

அதற்குமுன் மருதப்பனுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இது என்ன, கனவா?

## திலகம்

விழித்தேன்; வாழ்ந்தேன். என் விழிப்புக்குக் காரணம் மருதப்பர். வாழ்வுக்குத் துணை திருநாதன். மருதப்பருடைய கண்ணும், கையும், பேச்சும் என்னைப் புதுப் பெண்ணாக மாற்றிவிட்டன. இல்லையானால் திருநாதனுடைய பார்வையின் பொருளை நான் தெரிந்து கொண்டிருக்க முடியாது; அவருடைய அமைதியைக் கண்டு மேற்போக்காக இருந்து ஏமாந்துபோ யிருப்பேன். அவருக்கு என்மேல் அன்பு இல்லை என்று சித்தூரில் எண்ணியது போலவே இன்னும் எண்ணிக் கொண் டிருந்திருப்பேன்.

ரயிலில் வந்தபோது வாய் திறக்காமல் தலை நிமிராமல் வந்தவருடைய கை, நேற்று இரவு என் கால்களை வருடியது. விழித்ததும் அஞ்சினேன்; அந்த அழகனைக் கண்டதும் அடங்கினேன்; காலை வருடிய கை, என் கையைப் பற்றியது. அந்தக் கையை என் கண்ணோடு சேர்த்துக்கொண்டேன்.

ஒரு நாளாவது என்னைப் பெயரிட்டுக் கூப்பிடு வாரா என்று ஏங்கினேன். எந்தக் காரணத்தாலாவது என்னோடு பேசுவாரா என்று உருகித் தவம் கிடந்

தேன். என் தவம் பலித்தது. என்னைப் பார்த்த பார்வைக்கும் என்மேல் வைத்துள்ள மெய்யன்புக்கும் எவ்வளவு வேற்றுமை! குன்றிமணியைக் காட்டிக் குன்று போல் செல்வத்தை, வற்ருத பேரன்பை வழங்கும் வள்ளல் அவர்!

இந்தத் தோளிலும் காலிலும் பட்ட காயத்தை ஆற்றுவதற்கு மருந்து இட்டார் மருதப்பர். இவராக இருந்திருந்தால் மருந்து இட வேண்டியதே இல்லை; இவருடைய கை பட்ட அளவிலேயே அந்தக் காயங்கள் ஆறிவிட்டிருக்கும். என் மனப்புண்கள் நூறு நூருக இருந்தன; புற்றுப் புற்ருகப் புரை வைத்திருந்த அந்த மனப் புண்கள் நேற்று இரவே ஆறிவிட்டன. அந்தக் காயங்களை இவர் ஆற்றுவதற்கு, மருந்தும் வேண்டுமா?

இப்போதுதான் தெரிகிறது இவருடைய அன்பு, இவருடைய பெருமை எல்லாம். ஆனல் அன்று சைக்கிலில் அடிபட்டபோது மருதப்பரே என் மனத்தில் குடிகொண்டார். அவருக்கு என் வாழ்வை அடைக்கலம் கொடுத்துவிட்டாற் போல் இருந்தேன்.

மருதப்பர் அப்போது செய்த உதவியை ஒரு நாளும் மறக்க முடியாது; மறக்கவே மாட்டேன். அதைவிட — நினைக்கவும் வெட்கமாக இருக்கிறது — அவர் என் மனத்தில் எழுப்பின உணர்ச்சி என் உயிருள்ள வரையில், என் நினைவை விட்டு நீங்காது.

மருந்து விடுவதற்கு என்னைக் கேட்டார்; மருந்து கொண்டு வந்து என்னை அணுகினர். நாணமும் பயமும் கலந்து என்னைத் தடுத்தன. தோளில் பட்ட காயத்தில் மருந்து விட்டுத் துணி கொண்டு கட்டினர். அவர் கை என் தோளில் பட்டதோ இல்லையோ, என் உடம்பு சிலிர்த்தது. நான் அன்போடு அவர்முகத்தை

ஒரு கண்ணால் பார்த்துக்கொண் டிருந்தேன். என் உடம்பு முழுவதும் புதிய உணர்ச்சி பரவுதலைக் கண் டேன். அன்புடன் அவர் செய்த உதவியை நினைந்து உருகினேன். கட்டுக் கட்டிக்கொண்டே அவர் என்னைப் பார்த்தார். ஆ! அப்போது அந்தக் கண்ணில் கண்டதுதான் தனி ஒளி; காதல் ஒளி. இதற்குமுன் எத்தனையோ ஆண்களைப் பார்த்திருக் கிறேன். அவர்கள் என்னைப் பார்க்கும்போது நானும் அவர்களைப்பார்த்திருக்கிறேன். ஆனால், புறக்கணித்த பார்வை, அந்தச் சாமியார் போல் வஞ்சகமான பார்வை, தொப்பையன் போல் கொலைகாரப் பார்வை, சின்ன மாமன் போல் தன்னலப் பார்வை, சித்தூரார் போல் குற்றமற்ற பார்வை, சைக்கிலில் தள்ளினவன் போல் தடுமாற்றப் பார்வை, கல்லூரிப் பெண்களைப் போல் பொறாமைப் பார்வை — அவற்றையே கண்டு அறிந் திருக்கிறேன். அவை என் உள்ளத்தைத் தொடு வதே இல்லை. ஆனால் மருதப்பர் அப்போது பார்த்த அந்தப் பார்வை என்னைப் புதிய பிறவியாக்கிவிட்டது.

எனக்கு வழி காட்டிக்கொண்டு முன்னே நடந்து சென்றாரே, அப்போது அவர் திரும்பித் திரும்பி என்னைப் பார்த்துக்கொண்டு போனார். அந்த ஒவ் வொரு பார்வையும் என் ஆவியை உருக்கிக்கொண்டே போயிற்று. ஆண்மகன் ஒருவனை அன்றுதான் நான் கண்டேன்.

தெருத்திண்ணையில் என்னை விட்டுவிட்டு மருந் துப் புட்டியுடன் உள்ளே சென்றாரே, அப்போதே என் மனமும் அவருடன் சென்றது. 'வா' என ஒரு சொல் அவர்வாயிலிருந்து வந்திருந்தால் என் வாழ்க்கையே மாறிவிட் டிருக்கும் அல்லவா? உள்ளே சென்றவர் ஏன் இன்னும் வரவில்லை என்று என் மனம் திடுக்கிட்ட

நிலையில் இருந்தது. கால்கள்தான் அசையவில்லை; நகரவில்லை. என் மனம் வீட்டினுள்ளே ஓடிக்கொண்டிருந்தது.

நான் உள்ளே சென்றிருந்தால் வாழ்க்கையில் பெருந்தவறு செய்துவிட் டிருப்பேன். அவர் திருமணமானவர் என்று எனக்கு அப்போது தெரியாதல்லவா? தெரிந்திருந்தால் அப்படி என் மனத்தை ஒருகாலும் பறிகொடுத்திருக்கவே மாட்டேன். அந்த அமைதித் தெய்வம் — மருதப்பரின் மனைவி — ஊருக்குப் போயிருந்தது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் "அண்ணு" என்று அப்போதே அவரை அழைத்திருப்பேன்; அவரும் பார்வையை மாற்றிக்கொண்டிருப்பார்.

இளங்கோ அண்ணன் வந்துபோன பிறகுதான் நான் மருதப்பரை அண்ணுகை மதித்தேன். அதுவரையில் என் மனக்கோயிலில் அவருடைய உருவத்தைக் காதல் தெய்வமாகத்தான் வழிபட்டுக்கொண்டிருந்தேன். முதல்நாள் அண்ணனும் அவருமாக வந்தார்கள். வந்து உட்கார்ந்தார்கள். ஆனல் மருதப்பர் என்னைப் பார்க்கக் கண் எடுக்கவே இல்லை. தலை குனிந்துகொண்டும், எதிரே இருந்த படங்களைப் பார்த்துக்கொண்டும் இருந்தார். நான் எதிர்நோக்குப் பெருமல் தவித்தேன். விட்டு விட்டு அவர்கண்களை நோக்கினேன். அந்தக் கண்கள் என்னைப் பொருட்படுத்தவே இல்லை. மருந்து விட்டுக் கட்டியபோது என்னைப் பார்த்த ஒரு பார்வையை ஏன் தடுத்தார் என்று அன்றெல்லாம் எனக்கு விளங்கவில்லை. வழியெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்த்து ஏங்கவைத்தவர் வீட்டிற்குள் வந்து கூடத்தில் இருந்தபோது ஒரு முறை என்னைப் பார்க்கவும் மனம் கொள்ளவில்லை.

காரணம் தெரிந்துகொள்ளாமல் தவித்தேன். மறுநாள் எல்லாம் தெளிவாய்ப் போயிற்று.

அவர் கண்பட்டபோது உண்டான உணர்வுதான் என்னை முதன்முதலில் பெண் ஆக்கியது என்று சொல்ல வேண்டும். அதுவரையில் நான் குழந்தை யாக இருந்தேன் என்றுதான் சொல்லலாம். சில பெண்கள் குழந்தையாக இருந்துவிட்டுத் திடீரென விலங்கு நிலைமை அடைந்து கெடுகின்றார்கள். காதல் ஒளி அவர்கள்மேல் வீசாததே காரணம். ஆனால் நான் குழந்தையாயிருந்து பெண் ஆனேன். இது பெரிய இரசவாத வித்தைதான். மருதப்பரின் கண் ணுக்கு அந்த வித்தை தெரிந்திருந்தது. கட்டுக் கட் டிய துணியே அந்த வித்தைக்கு வேண்டிய மூலிகை யாக இருந்தது. அந்தத் துணியை மடித்து இன்னும் காப்பாற்றி வைத்திருக்கிறேன். இனிமேலும் வைத் திருப்பேன்.

என்னை ஒரு முறையும் பார்க்காமல் அவர் கூடத் தில் இருந்தது துன்பமாகவும் இருந்தது; உண்மை யாகவே, அழாத குறையாகத்தான் இருந்தது. கையை மூடி வைத்துக்கொண்டே நெடுநேரம் வைத்திருந்து அழும்படியாகச் செய்து, பிறகு திடீரெனக் கையை விரித்துக் காட்டி மறுபடியும் அழும்படியாகப் பூங் கொடியை நான் ஆட்டம் காட்டியது உண்டு. அந்த வெறுங்கை காட்டும் ஆட்டமே மருதப்பர் ஆடியது போல் தோன்றியது. காதலிலும் இந்த ஆட்டமா என்று நெஞ்சு புண்பட்டவளாய் இளங்கோ அண்ண னுடன் பேசிக்கொண் டிருந்தேன். ஆனால் உணவு உண்டபிறகு விடைபெற்றுப் பிரிந்தபோது, "இரண்டு பேருக்கும் வணக்கம் அம்மா" என்ற அந்தக் குரலில் ஆண்மையும் அன்பும் குறைந்திருந்தன. அப்போது

பார்த்த பார்வை முற்றிலும் வேறுனது. அண்ணன் இளங்கோவின் பார்வைக்கும் அவருடைய பார்வைக்கும் வேற்றுமையே தெரியவில்லை. நுங்கம்பாக்கத்தில் மருந்திட்டு வழிகாட்டிய மருதப்பர் வேறு, இங்கே வந்த ஆள் வேறு என மயங்கினேன். ஒருவர்கண்ணிலேயே ஒருநாள் காதல்பார்வையும், மறுநாள் உடன் பிறந்தாரின் அன்புப் பார்வையுமாக மாறி நிற்கக் காரணம் என்னவோ என்று வருந்தினேன்.

அவர்கள் வந்துபோன அன்று இரவு நானும் செந்தாமரையும் உணவு உண்ண உட்கார்ந்தபோது செந்தாமரையின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. அவளுடைய துள்ளல் குன்றியது. பேச்சில் நகைச்சுவை இல்லை. அடிக்கடி கோபித்துக்கொண்டு அடுத்த நொடியிலேயே ஆடல்பாடல் தொடங்குகிற வழக்கம் உடையவள் ஆதலால் "ஏதாவது வருத்தமா செந்தாமரை?" என்று கேட்டேன். "உடம்பு எப்படியோ இருக்கிறது. உணவின்மேலும் மனம் போகவில்லை" என்றுள். "நான் அப்போதே சொன்னேன். நானே சமையல் செய்வேன். நீ வேண்டா வேண்டா என்று தடுத்தேனே" என்று அவள்முகத்தைப் பார்த்தேன். "அது காரணம் அல்ல. நீ சாப்பிடு" என்று சொல்லிவிட்டு ஒரே ஒரு சிறு புன்னகை பூத்தாள்.

அன்று மாலை செந்தாமரை மேசை எதிரே உட்கார்ந்து பென்சிலும் காகிதமும் எடுத்து எதையோ எழுதிக்கொண்டிருந்தாள். நான் பாத்திரங்களை ஒழுங்குபடுத்திவிட்டுத் தெருச் சன்னல் பக்கம் போய் நின்று திரும்பினேன்; செந்தாமரையைப் பார்த்தேன். அவளுடைய கை இரண்டு உருவங்களைத் தீட்டிக்கொண்டிருந்தது. ஒன்று இளங்கோவின் உருவம்; அது வழக்கம்போல் இருந்தது. மற்றென்று

மருதப்பரின் உருவம்; அவருடைய படத்திலிருந்த அந்தக் கண் என்னையே நோக்குவதாக இருந்தது. ஏதோ ஒருவகை ஆறுதல் என் மனத்திற்கு உண்டாயிற்று. சைக்கிலில் அடிபட்ட அன்று பார்த்த பார்வை அந்தப் படத்தில் ஒருவாறு இருந்தது. அது நான் விரும்பும் பார்வை. என் மருதப்பர் அங்கே இருக்கிறார் என்றுதான் மகிழ்ந்தேன். அந்தப் பார்வையின் எழில் தீட்டிய படத்தையாவது காப்பாற்றலாம். அவர் என்னை மறந்தாலும் இந்தப் படமாவது என்னிடம் இருக்கட்டும் என்று அதைக் கொடுக்குமாறு செந்தாமரையைக் கேட்டேன். "என் அண்ணன் இளங்கோவின் படம் அழகாக இருக்கிறது; என்னிடம் கொடுத்துவிடு; இருக்கட்டும்" எனக் கேட்டேன். "வேண்டுமானால் தனியே அவருடைய ஓவியம் எழுதிக் கொடுக்கிறேன். இது வேண்டா. இதில் உன் அண்ணன் நன்றாக இல்லை" என்றாள் செந்தாமரை. அவளுடைய விருப்பம் போல் விட்டுவிட்டேன்.

செந்தாமரை வெளியே சென்றதும், அந்த மேசை அறையை இழுத்துப் பார்த்தேன். படம் இருந்தது. ஒரே காகிதம் — இரண்டு உருவம் — என் உள்ளத்தைக் கவர்ந்தவர் மருதப்பர்—அதை விடாமல் பார்த்தேன். படத்தின் கீழே இரண்டு உருவத்திற்கும் நடுக் கீழே செந்தாமரை என்ற எழுத்துக்களைக் கண்டேன். பல பத்திரிகைகளில் வரும் ஓவியங்களிலும் இப்படி ஓவியக்காரரின் பெயர் இருப்பதைப பார்த்திருக்கிறேன். நிழற் படங்களிலும் கம்பெனிக்காரர் தம்முடைய பெயரை அச்சிட்டு ஒட்டிக் கொடுக்கிறார். அவ்வளவு ஏன்? தையல்காரரும் தைத்த துணியின் உட்புறத்தில் தன்னுடைய பெயரைச் சேர்த்திடு

கிருர். அப்படிப்பட்ட பைத்தியம் இயந்திரத் தொழிலேயே விடாதபோது, இயற்கையான கலேயில் வல்லவளாகிய இந்தச் செந்தாமரையை விடுமா என்று எண்ணிவிட்டேன்.

மறுபடியும் அந்தக் கண்ணேயே உற்றுப் பார்த்தேன். சைக்கிலில் அடிபட்டபோது இந்தக் காதல் பார்வையைக் கண்டேன். கண்டவள் நானே. செந்தாமரை அன்று என்னுடன் இல்லே. அவளுக்கு அந்தப் பார்வை எப்படித் தெரிந்தது? அவள் எப்போது பார்த்தாள்? பார்க்காதிருந்தால் இவ்வளவு இயற்கையாகத் தீட்டியிருக்க முடியுமா? பார்த்தே இருப்பாள். எங்கே? கூடத்தில்தான் பார்த்திருக்க வேண்டும். நான் பார்க்கவில்லேயே. அவளே மட்டும் அந்தப் பார்வையோடு பார்த்திருப்பாரோ? இருக்கக்கூடும். இவ்வாறு எண்ணியவுடனே என் மனம் முறியத் தொடங்கியது.

அவளேமட்டும் மருதப்பர் அந்தக் காதல்நோக்குடன் கண்டிருப்பார் என்று எண்ண எண்ண என் நெஞ்சு பிளந்தது போல் வருந்தலானேன். 'செந்தாமரை' என்ற அந்த எழுத்துக்களே மறுபடியும் பார்த்தேன். என் மனம் முறிந்தே போயிற்று; இடி விழுந்த மரம் போல முறிந்தே போயிற்று.

அந்தப் பெயருக்குப் பக்கத்தே புள்ளி இல்லே. கோடு இல்லே. ஆனல் கேள்விக் குறி இருந்தது. அப்போதுதான் எனக்கு உண்மை விளங்கிற்று. அந்தக் கேள்விக் குறிக்குப் பொருள் செந்தாமரையின் மனத் தாவுதல்தான் என்று உணர்ந்ததும் அப்படியே நாற்காலியில் சாய்ந்தேன். வாழ்க்கையில் இதற்கு முன் உணர்ந்திராத இடி அது. என் உள்ளம் சாய்ந்தது.

எனக்குப் பல வகையால் உதவி செய்து நிழல்

தந்த குடும்பம் — சித்தூரில் என்னைக் காப்பாற்றிய அம்மையாரின் தங்கை — என் அருமை அண்ணன் இளங்கோவைக் காணும்படி செய்த குடும்பம் — முன் பின் அறியாத என்னோடு கரவில்லாமல் பழகும் கலை மணி செந்தாமரை என்ற எண்ணங்கள் வளர்ந்தன; சிறிது சோர்வு நீங்கியது. வாழட்டும் செந்தாமரை என்று நிமிர்ந்தேன்.

மருதப்பர் என்னைப் பார்க்கவும் மனம் கொள்ளாமல் கூடத்தில் இருந்ததன் பொருள் என் மனத்திற்கு விளங்கியது. அவருடைய மனம் என்னைவிட்டுச் செந்தாமரையிடம் சென்றது என எண்ணினேன். சைக்கிலில் அடிபட்ட அன்று நான் என்ன மனக்குழப்பத்தை அடைந்தேனோ, அதே நிலையைச் செந்தாமரை அப்போது அடைந்ததாக எண்ணினேன். அதனால் தான் "உடம்பு எப்படியோ இருக்கிறது. உணவின் மேல் மனம் செல்லவில்லை" என்று என்னிடம் பொய் சொன்னதாகவும் தெளிந்தேன்.

இனி மருதப்பர் காதலர் அல்ல; அவர் நண்பர். இளங்கோவைப் போல் ஒரு சகோதரர் என்று மாற்றிக் கொண்டேன். "அவர் செந்தாமரையை விரும்புகிறார்; அவள் அவரை விரும்புகிறாள்; படத்திலுள்ள பார்வையும் கேள்விக்குறியும் இதைத்தெரிவிக்கின்றன" எனத் தெளிந்தேன். மருதப்பர் — செந்தாமரை; இவர்கள் வாழ்க எனத் துணிந்தேன்.

அப்போதும மனம் என்னைச் சும்மா விடவில்லை. நான் செந்தாமரைக்காகப் பரிவது போல், அவள் எனக்காகப் பரிவு காட்டாதது ஏன் என்று ஒரு கேள்வி கேட்டது. பொருத்தமான கேள்விதான். "மருதப்பரை முதலில் கண்டவள் நான்; அவர் கையால் உதவி பெற்றவள் நான்; ஆகையால் உரிமை

எனக்குத்தானே? இதை அந்தச் செந்தாமரை ஏன் எண்ணவில்லை?" என்று மனம் கேட்டது. அது என் தவருகவே எனக்குத் தோன்றியது. நான் அவரை விரும்புவதை அவளுக்குச் சொன்னதே இல்லை. அடிபட்டது, மருந்திட்டது, வழிகாட்டியது இவற்றைத் தான் சொன்னேன். பார்வையைப் பற்றியோ, மன நெகிழ்ச்சியைப் பற்றியோ ஒன்றும் சொல்லவில்லை. காதல் என்று வாய்திறந்து ஒரு சொல் சொல்லவே யில்லை. நான் எப்படிச் சொல்ல முடியும்? சொல்லத் தவறினேன்.

கல்லூரியில் படித்து, நாகரிகம் பெற்று ஒரு கரவும் அற்றுத் துள்ளும் கன்றுபோல் வாழும் இவளே வாயால் சொல்லாமல் கேள்விக்குறி போட்டுவிட்டுப் படம் வரைந்தாள்; கேட்டாலும், "உடம்பு எப்படியோ இருக்கிறது" என்று பொய் சொன்னாள். கல்லூரிப் படிப்பும் துள்ளலும் இல்லாத நான் எப்படிச் சொல்ல முடியும்? காதல் என்று ஒரு சொல் சொல்லியிருந் தாலும், அவள் மருதப்பரின் பார்வையை மாற்றி விட்டிருப்பாள். அவ்வளவு உண்மையானவள் என்பது எனக்குத் தெரியும். சொல்லியிருந்தால், மருதப்பரை என் கணவர் என்றே மதித்து நடந்திருப்பாள்.

தவிர, இன்னொன்று முக்கியமானது. கரவற்ற செந்தாமரை கூர்மையான அறிவு உடையவள். திருநாதனுடைய பழைய வாழ்க்கை அவளுக்குத் தெரியும். நான் இந்த வீட்டிற்கு வந்தபிறகு அவருடைய படிப்பிலும் பேச்சிலும் நடையிலும் ஏற்பட்ட மாறுதலும் அவளுக்குத் தெரியும். இரண்டையும் நன்ருகக் கவனித்த பிறகு கூரிய அறிவு கொண்டு ஆராய்ந்துதான், அவர் என்னை விரும்புவதைத் தெளிந்திருப்பாள். அதனுல்தான், நான் எவ்வளவோ

தடுத்தும் விடாமல், "அண்ணி, அண்ணி" என்று அழைக்கலானாள்.

என்னைத் தன் அண்ணனுடைய மனைவி என்று வஞ்சகம் இல்லாமல் எண்ணிவிட்ட ஒருத்தி, மருதப்பரை என்னுடன் எண்ணுவாளா? மருதப்பர் தன்னுடைய அன்புக்கு இடம் தருவாரா என விரும்பிப் பார்த்திருக்கிறாள்.

மருதப்பரைப் பற்றி நான் ஏமாந்தது போலவே அவளும் ஏமாற நேர்ந்தது. அய்யோ! ஆனால் என்னுடைய ஏமாற்றம் வேறு; அவள் ஏமாந்தது வேறு. நான் அவரையே துணிந்தேன். அவளோ கேள்விக்குறிதானே போட்டிருந்தாள்? மருதப்பரா அல்லது இளங்கோவா என்று தாவியிருந்தாள். ஆனால் அங்கும் ஒரு வேறுபாடு கண்டேன். அவளுடைய உள்ளம் காதலித்தது மருதப்பரையே. அதனால்தான் மருதப்பரிடமிருந்து காதல்பார்வை பெற முடிந்தது; படத்திலும் எழுதிவிட்டாள். இளங்கோவை அப்படிப்பட்ட மனத்தோடு பார்க்கவில்லை. அதனால் நன்றாக எழுதவில்லை என்று எண்ணினேன்.

அவள் ஏமாந்ததும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. மறுநாள் அண்ணன் தனியாக வந்தபோது, "மருதப்பர் குடும்பத்தோடு வருவார்" என்று சொன்னார். அப்போது என் மனம் முறியவில்லை. அதற்குள் அந்தக் கதை எனக்குப் பழைய கதையாகிவிட்டது. மருதப்பருக்கும் எனக்கும் இருந்த அந்தப் புது உணர்வை அழித்துவிட்டேன் அல்லவா? ஆதலால் அவர் திருமணமானவர், குடும்பத்தோடு வாழ்கிறவர் என்ற செய்தி ஏதோ பிழை திருத்தம் போல்தான் எனக்குத் தோன்றியது. புத்தகத்தின் பக்க எண்ணைத் தவறாக அச்சிட்டிருந்ததைத் திருத்துவது

போல் இருந்தது. அவ்வளவுதான்.

ஆனால், கல்லூரியிலிருந்து அன்று மாலை வந்த செந்தாமரை நேராகச் சமையலறையுள் நுழைந்தாள்; "உன் அண்ணன் மட்டும் வந்திருக்கிறார். அவர் எங்கே இன்னொருவர்?" என்று கேட்டாள். நான் பொறுத்துச் சொல்லியிருக்கக் கூடாதா? "புதன் கிழமை மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு நம் வீட்டுக்கு வரப்போகிறாராம்" என்று சொல்லி முடிப்பதற்குமுன் சமையலறையில் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். என்ன மறைத்தாலும் அவளுடைய மனச்சோர்வு வெளிப்பட்டுவிட்டது. நான் அங்கே இல்லையானால் அங்கேயே அழுதுவிட்டிருப்பாள். சமையலறையை விட்டு அவளைக் கிளப்பவே முடியவில்லை. தன் அண்ணன் வந்தது தெரிந்த பிறகுதான் மெல்ல எழுந்தாள். ஏதோ ஒரு தொத்து நோய் என்னை முதலில் பற்றியபிறகு அவளையும் பற்றி வருத்துவது போல் இருந்தது அன்றைய நிலைமை.

அண்ணன் இளங்கோவுடன் பெரியம்மாவையும் பூங்கொடியையும் பார்க்கப்போனபோது, அவனுடைய மனம் செந்தாமரைமேல் இருப்பது தெரிந்துவிட்டது. செந்தாமரையின் கேள்விக்குறி இனி வேண்டியதில்லை என்று எண்ணி, "நீ முன் சொன்னபடி அண்ணனுடைய தனிப் படம் எழுதியாகிவிட்டதா?" என்று அவளைக் கேட்கத் துணிந்தேன். திரும்பி வருவதற்குள் அவள் அந்தப் படத்தை எழுதிக் கீழே செந்தாமரை என்று பெயரும் எழுதி வியப்புக்குறி போட்டிருந்தாள். வந்ததும் அதைக் காட்டி என்னை மகிழ்வித்தாள்.

அண்ணன் அவளைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டான். "நல்ல பெண்; என்னைவிட நல்லவள்" என்று சொன்னபோது அவன்முகத்தின் மலர்ச்சியைக் கண்

டேன். ஆனால் அதைவிட வியப்பு, பெரியம்மா அவ ளைப் பற்றிக் கேட்டதுதான். அண்ணன் தன் விருப் பத்தைத் தாயிடம் மறைக்காமல் சொல்லிவிட் டிருக்கிறான்.

ஆர்க்காட்டில் உள்ள மாமன்பெண்ணை அவன் தான் மணம் செய்துகொள்வான் என்று அவர்களும் நம்பியிருந்தார்கள்; நானும் நம்பினேன். அதைப் பற் றிக் கேட்டால், "என்ன திலகம்! மாட்டுக்கு இருக்கும் மதிப்புக்கூட மனிதனுக்கு இல்லையா?" என்று சரி யான பதில் கொடுத்தான். வண்டி ஓட்ட மாடுபார்க்கிற வர்கள் சுடி பார்த்துச் சுழி பார்த்துப் பல் பார்த்துப் பாங்கு பார்த்துச் சிறிது தூரம் ஓட்டியும் பார்த்து வாங்குகிறார்களாம். ஆணும் பெண்ணுமாக மக்களுக் குத் திருமணம் செய்யும்போது ஒன்றும் பார்க்காமல் அத்தைமகன், அம்மான்மகள் என்று கட்டிவிடு கிறார்களாம். உண்மையைப் பளிங்கு போல் எடுத்துச் சொல்லிவிட்டான். எனக்கும் அதைப் பற்றி மனம் இல்லைதான். மாமன்மகளுடைய அறிவும் பழக்கமும் கீழ்த்தரமானவை; இவனோ நாகரிகமும் முற்போக்கும் உடையவன். இவர்கள் ஒருவர் மற்றவர்க்கு ஒத்துப் போவது முடியவே முடியாது. அவள் அறியாத குழந் தையா? இவனுக்கு அடங்கிப்போக முடியுமா? இவனோ உலகத்திற்கே அஞ்சாதவன். இவன் கல்லூரியில் படித்ததற்கு ஏறக்குறையப் படிப்பாவது அவளுக்கு இருக்கவேண்டுமே, அதுவும் இல்லை. ஏழாவது படித்து முடிப்பதற்குள் வயதடைந்துவிட்டாள் என்று நிறுத்தி விட்டார்கள். மூன்று ஆண்டுகளாய் மூலைகளில் உட் கார்ந்துகொண்டும் சன்னல் ஓரமாக நின்றுகொண்டும் சோம்பேறி வாழ்வு வாழ்ந்துவருகிறாள். செந்தாமரை எங்கே? அந்தச் சோம்பேறி எங்கே? செந்தாமரை

கிடைப்பதானல் பெரிய பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். நேராக வேசியின் வயிற்றிலேயே பிறந்தவளாக இருந்தாலும் அவள்தான் பெண் என்று சொல்வேன். அவளைத்தான் அண்ணி என்று அழைக்க எனக்கு மனம் வரும். வியப்புக்குறி இட்ட அந்தப் படத்தைப் பார்த்தவுடனே, “அண்ணி” என்று நானும் அவளை அழைத்தேன். அவளும் அதை வெறுக்காமல் ஏற்றுக்கொண்டு, “போ, அண்ணி” என்ருள்.

பெரியம்மா தன் பிள்ளைக்கு இணங்கி நடப்பது தான் வியப்பாக இருக்கிறது. நான் எதிர்பார்க்க வில்லை. உயர்ந்த இல்வாழ்க்கை வாழ்ந்த என் தாய் அரைப் பைத்தியமாய் ஆர்க்காட்டில் அடங்கிக் கிடக் கிருள்; வாழ்க்கை தெரியாத பேதையாய்க் கிடக்கிருள்; கணவனை இழந்ததும் அவளுக்கு உலகமே இருண்டு விட்டது; வயிற்றில் பிறந்த பெண் குழந்தைகளையும் மறந்து பித்தியாளுள். ஆனல், அதே நிலைமையை முன்னமே அடைந்துவிட்ட பெரியம்மா அஞ்சாமல் குடும்பத்தைத் தலைமேல் தாங்கிக்கொண்டு தன் ஒரு மகனை வளர்த்துப் படிக்கவைத்து என் தங்கையையும் காப்பாற்றிவருகிருள்.

என்ன காரணம் என்பது? பெரியம்மாவின் கால் தான் காரணம் என்று சொல்ல வேண்டும். வாழ்க் கையில் ஏதாவது ஒருகுறை இருப்பதும் நல்லதாகவே இருக்கிறது. பிறர்க்குத் தெரியும்படியான குறை இருந்தால், நாம் குறை உடையவர்கள் என்ற எண்ணம் பிறந்து செருக்கு அடங்கிவிடுகிறது; தன்னைப் பற்றி எண்ணிப் பார்க்க வழி ஏற்படுகிறது; சொல்வதை எண்ணிச் சொல்லவும், செய்வதை எண் ணிச் செய்யவும் கட்டாயம் ஏற்படுகிறது. அதனல்

அப்படிப்பட்டவர்கள் அறிவை வளர்த்துத் திறமை பெற்றுப் பிறர்க்குப் பயன்படுமாறு வாழ்கிறார்கள். தங்கள் குறையை உணராதவர்கள், எண்ணி வாழும் வகையே அற்று மனம் போன போக்காய்க் காலம் கழித்து மடிகிறார்கள்.

பெரியம்மாவின் காலில் குறை; சிறிது நொண்டி; அதனால் வாழ்க்கையில் எச்சரிக்கையாக இருக்கிறாள். மகனுடைய மனம் இப்படி என்று தெரிந்துகொண்டு "அவன் விரும்பும் பெண்ணே மருமகள்" என்று துணிந்துவிட்டாற் போல் தெரிகிறது. வாழ்க்கைக்கு இடையூறு செய்யாமல் துணைசெய்து அவனை முன்னேற்றி வருகிறாள். ஒரு குறை நல்லதுதான்.

சித்தூர் அம்மையார் வாழ்க்கை சீராக நடக்கின்றதே, அதன் காரணம் என்ன? ஆம்? அதற்குக் காரணம் உண்டு. குடும்பத்தில் ஒரு குறை—பிறர் பழி கூறும்படியான ஒரு குறை—நான்காம் பாட்டி வேசியாய் வாழ்ந்த குறை உண்டு. அது புகழில் உள்ள குறை. அந்தக் குறையே அவருக்கு ஆற்றலைப் பெருக்கிவிட்டது; முன்னேற்றுகின்றது; குறை நல்லதுதான்.

என் வாழ்விலும் ஒரு குறை உள்ளது. உற்றார் உறவினரை விட்டு ஓடிவந்து பழி சுமந்தேன். அது ஒரு குறைதான். அதனாலும் நன்மையே விளையும். இனிமேல் வீண்புகழுக்கு வீம்பு செய்ய மாட்டேன்; ஆர்க்காட்டில் உள்ள மாமி போல் ஆரவாரத்தைப் போற்ற மாட்டேன்; அவளைப் போல், பயனற்ற பண்டிகைகளையும் வீணச் செலவையும் பெருக்கிக் கணவனை மனம் நோகவைத்துப் பிறர் மெச்சுவதற்கு ஏங்க மாட்டேன். கணவனுக்கு ஏற்ற மனைவியாய், உலகத்தை மதிக்காமல், உள்ளத்தை மதித்து வாழ்வேன். எனக்கு ஏற்பட்ட குறையும் பரம்பரைச் செருக்கைப்

பாழாக்கி என் கண்ணைத் திறக்கச் செய்தது.

ஆனால் அந்த வஞ்சகச் சாமியார்க்குத் தன்னுடைய குறை தெரியவில்லையே! சித்தூர்த் தொப்பையனுக்கும் தன்னுடைய குறை புலப்படவில்லையே! இவர்களெல்லாம் தங்கள் குறையை உணராதவர்கள். குறையைக் குறை என்று மற்றவர்களுக்கும் தெரியாதபடி மறைத்து வாழ்கின்றார்கள். ஒருவன் வெளித்தோற்றத்தால் மறைத்து ஏமாற்றுகின்றான். இன்னொருவன் தனக்கு உள்ள செல்வாக்கால் மறைத்து மயக்குகின்றான். தங்கள் முன்னேற்றத்துக்குத் தாங்களே முள் போட்டுக்கொண்டார்கள். "குற்றம் உணர்வான் குணவான்" என்று அந்த நமச்சிவாய முதலியார் புத்தகத்திலிருக்கும் பாடம் இவர்கள் படிப்பதில்லையோ?

இந்தப் பெரியம்மா எழுத்தறியாதவள். எப்படியோ அந்தப் பாட்டு வாழ்க்கையில் படிந்திருக்கின்றது. காரணம் இதுதான். இவள் நொண்டியாக இருக்கும் குறையை மறைத்துக்கொள்ள முடியாது. மற்றவர்கள் கண்ணுக்குப் பட்டே தீரும். ஆகையால் அவர்கள் பழிக்காதபடி, அவர்கள் மனம் நோகாதபடி, அவர்கள் விரும்பிப் புகழும்படி அறிவாக எண்ணி வாழ்கின்றாள். அதனால்தான் இளங்கோ அஞ்சாமல் செந்தாமரையைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். பெரியம்மா இருந்த அரியாசனத்தில் செந்தாமரை விளங்கப் போகிறாள். நினைத்தாலும் என் மனம் குளிர்கின்றது.

தவிர, பெரியம்மா இளகிய மனம் உடையவள். மகன் அழுதால் பார்த்துக்கொண்டிருக்க மாட்டாள். அதனால்தான் என்னைக் கண்டவுடன் கதறிக் கதறி அழுதாள். கண்ணீர் ஆறாய்ப் பெருக்கினாள். ஆனால், பூங்கொடிக்கு ஒன்றும் தெரியவில்லை. அம்மா அம்மா என்று அவளுடைய முன்தானையைப் பற்றிச் சுற்றிக்

கொண்டு முகம் சுருக்கினாள்.

என் தங்கை—என் பூங்கொடி—நன்றாகப் படிக்க வேண்டும். படித்துச் சிறந்த அறிவாளி ஆகவேண்டும். அவள் இந்த நாட்டுக்கே வழிகாட்டக் கூடிய தலைவி ஆக வேண்டும். நமக்கு என்ன குறை? பத்திரிகை ஆசிரியர் ஒருவர், கலெக்டர் ஆபீஸ் கிளார்க் ஒருவர், பெரிய தத்துவநூல் அறிஞர் ஒருவர், ஓவியக் கலை மகள் ஒருத்தி, குடும்பக் கலைமகள் ஒருத்தி, எல்லோரையும் விளையாடவைக்கும் குழந்தை அருள் ஒருவன் —இத்தனை பேரும் உற்றாராக வாழும் வாழ்க்கை கிடைத்துள்ளபோது பூங்கொடிக்கு என்ன குறை? அவளை உயர்ந்தவளாக்க வேண்டும். அவளுக்கு நானே தாய், தந்தை, தோழி எல்லாம்.

பெரியம்மா என்னைப் பூங்கொடியோடு வீட்டிலேயே இருக்கச் சொல்கிறாள். அப்படி ஏன் இருக்க வேண்டும்? அவளுக்குப் பதில் சொல்ல வழி இல்லாமல் விழித்தேன். இருந்தாலும் என் மனம் விரும்பவில்லை. குளிர்ந்த பொய்கையை விட்டுவிட்டு நீரற்ற பாலைவனத்தை யார் விரும்புவார்கள்? பெற்றோரின் வீடு, வளர்ந்த மக்களுக்குப் பாலைவனம்தான். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் பெற்றோரின் வீடு பாலைவனம்தான். பெற்றோர் எவ்வளவோ அன்பு காட்டலாம். எத்தனை நெல்லி மரங்கள் இருந்தாலும் என்ன? பாலைவனத்தில் உயிர் போகாமல் காப்பாற்றலாம், அவ்வளவுதான். வாழ்க்கையை வளம்படுத்த முடியாது.

"நல்ல இடத்தில் கலியாணம் செய்து கண்ணாரப் பார்க்கலாம் என்று இருந்தேனே! பெண் இல்லாத பாவி, நான் கொடுத்துவைக்கவில்லையே" என்று ஒரு குறை அழுதாள். அய்யோ! அவளுக்கு உலகம்

தெரியாது. அவள், பழைய பழக்க வழக்கங்களுக்குக் கண்மூடிக் கட்டுப்பட்டவள். ஆனாலும் நல்லவள்; நல்லெண்ணம் நிறைந்தவள்.

இதைவிட நல்ல இடமா? எம். ஏ. படித்து அமைதியும் அன்பும் நிறைந்த ஒருவர் எனக்குக் கணவராக வாய்ப்பார் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லையே! கலியாணம் செய்து கண்ணாரப் பார்க்க வேண்டுமாம். யார் தடுத்தார்கள்? இன்னொரு நாள், நானும் அவருமாக அங்கே போனால், அப்போது எங்களைப் பெரியம்மா கண்ணாரப் பார்க்கலாமே! அல்லது, அவளே எங்கள் வீட்டுக்குவந்தாலும் பார்க்கலாமே! ஓ, ஓ! இதற்கு மற்றவர்கள் சாட்சி, அதற்காகப் பெரிய பெரிய மேள தாளச் சண்டை சச்சரவுகள் எல்லாம் வேண்டும் என்ற எண்ணமோ? சாட்சிகள் தேடும் நிலையில் எங்கள் வாழ்க்கை கிடக்கவில்லையே? நாங்கள் என்ன, ஒருவரை ஒருவர் ஏமாற்றுவோமா? பித்தலாட்டக்காரரா? பாண்டும் பத்திரமும் எழுதி முத்திரையும் தேதியும் பொறித்து, இரண்டு மூன்று பேர் சாட்சி வாங்குவது உண்டு; வாங்கின பணத்தைச் சாப்பிட்டுவிடுவார்களோஎன்றசந்தேகத்தால், அப்படி நடக்கிறது. எங்கள் வாழ்க்கை பொய்யல்ல, நடிப்பல்ல, வேடிக்கையல்ல; பணத்தாலும் பட்டாலும் அமைந்ததல்ல. உயிராலே உணர்வாலே ஆன வாழ்க்கை எங்கள் வாழ்க்கை. ஒருவர் மற்றவரை ஏமாற்றும் நிலைமை வந்தாலும் அப்படிக் குணம் கெட்டுப் பிறழ்ந்து போகும் காலம் வந்தாலும் அந்த ஏமாற்றத்தாலே அழிந்து எக்களிக்கவே விரும்புகிறோம். (பணத்தின் எல்லை, சட்டம் செய்வதும் சாட்சி தேடுவதும்; காதலின் எல்லை, சேர்ந்து வாழ்வதும் பிரிந்து சாவதும் தவிர வேறு உண்டோ?)

67337
...RAI UNIVERSITY LIBR...